விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 புரட்டாதி 13 ஞாயிற்றுக்கிழமை (29.09.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 284

# காணி அதிகாரங்களை மாகாணசபைக்கு வழங்குங்கள்

## வாசுதேவ கோரிக்கை

**காணி தொடர்பான அதிகாரங்களை மாகாண சபைகளுக்கு வழங்க முடியாது என உயர் நீதிமன்றம் அறிவித்திருந்த நிலையில் அவ்வதிகாரங்களை மாகாண சபைகளுக்கு வழங்குவது அவசியம் என அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.**


அரசாங்கத்திற்கு சொந்தமான காணி அதிகாரங்களை மத்திய அரசாங்கம் மட்டுமே வைத்து கொள்ளாமல் மாகாண சபைகளுக்கும் சமமாக பகிர வேண்டும் என்றார்.

இதுதொடர்பில் அமைச்சர் வாசுதேவ மேலும் தெரிவித்தது.

இதற்காக தேசிய காணி ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட வேண்டும் என்ற யோசனையை அரசாங்கத்திடம் முன்வைக்க உள்ளேன். அடுத்த நாடாளுமன்ற தெரிவுக் குழுக் கூட்டத்தில் இந்த யோசனையை முன்வைக்க தயாராகி வருகிறேன்.

அரச காணி அதிகாரம் மத்திய அரசாங்கத்திற்கே உரியது என அண்மையில் உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு இதற்கு தடையாக இருக்காது.

நீதிமன்ற உத்தரவுகள் எத்தனை இருந்தாலும் அதற்கு மேல் சென்று சட்டத்தை இயற்றும் அதிகாரம் நாடாளுமன்றத்திற்கு உள்ளது என அமைச்சர் வாசுதேவ மேலும் தெரிவித்தார். (செ-11)



ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 68ஆவது அமர்வில் கலந்து கொள்ளும் பொருட்டு நியூயோர்க் சென்ற ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நியூசிலாந்து பிரதமர் ஜோன் கேவுவைச் சந்தித்து கலந்துரையாடுவதைப் படத்தில் காணலாம்.

## கஜதீபன் வாகனம் தாக்குதலுக்குள்ளானது

வட மாகாண சபையின் ஆளும்கட்சி உறுப்பினரும் இலங்கைதமிழரசுக்கட்சியின் யாழ். கிளையின் தலைவருமான பாலச்சந்திரன் கஜதீபன் பயணித்த வாகனத்தின் மீது நேற்று பிற்பகல் 3.30 மணியளவில் ஊர்காவற்றுறை கண்ணகி அம்மன் இறங்குதுறைப் பகுதியில் வைத்து இனம் தெரியாத நபர்களால் கற்களைக் கொண்டு தாக்குதல் மேற்கொள்ளப் பட்டுள்ளதாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் யாழ். மாவட்டத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்ற கஜதீபன் தனது ஆதரவாளர்களுடன் நேற்றைய தினம் அனலை தீவு பகுதிக்கு சென்று தமக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் வாக்களித்த மக்களுக்கு நன்றி தெரிவித்துவிட்டு திரும்பி வரும்போதே இந்த தாக்குதல் சம்பவம் மேற் கொள்ளப்பட்டதாக ஊர் காவற்றுறைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் இந்த தாக்குதல் சம்பவத்தில் எவருக்கும் காயங்கள் ஏற்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-6)

## வவுனியா வெடி விபத்தில் 3 வயது சிறுவன் காயம்

வவுனியா தோணிக்கல் பகுதியில் வீடொன்றில் இடம் பெற்ற வெடிச்சம்பவத்தில் சிறுவனொருவன் காயமடைந்து வவுனியா பொது வைத்திசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளான்.


மிருகங்களை வேட்டையாடுவதற்காக தயாரிக்கப்படும் உள்ளூர் வெடியொன்றை (வெங்காய வெடி) வீட்டிலிருந்து நேற்று மதியம் எடுத்துச்சென்று சிறுவன் விளையாடியபோது இவ்வெடி விபத்து ஏற்பட்டுள்ளது.

சம்பவத்தில் திலக்சன் எனும் 3 வயதுச் சிறுவனே கை விரல்கள் துண்டிக்கப்பட்ட நிலையிலும் தலையில் காயமடைந்த நிலையிலும் வவனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (செ-11)

## இனவாதிகள் அருகிலிருக்கும்போது அரசை நம்புவது கடினமானது!

### வடக்கு முதலமைச்சர் சுட்டிக்காட்டு



வட மாகாண சபை நிர்வாகத்துடன் இணைந்து செயற்படத் தயார் என்று அமைச்சர பசில் கூறியிருந்தமையில் நம்பிக்கை உள்ளதாகவும், ஆனால் விமல் வீரவன்ச போன்றவர்களின் கருத்துக்களுக்கு ஜனாதிபதி செவி சாய்ப்பதால் ஏதாவதொன்றை கூறிவிட்டு மாறாக வேறு எதனையும் செய்யக்கூடும் என்றதொரு பயம் இருப்பதாகவும் வடக்கு மாகாண சபை முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கொழும்பிலிருந்து வெளிவரும் ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய விசேட செவ்வியொன்றின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்துள்ள அவர்,

கட்டாயமாக பசில் ராஜபக்ஷ சொன்னதை செய்வார என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது.

ஆனால்சிங்கள மக்களை குழப்புவதற்கும் இனத் துவேஷத் 24-ம் பக்கம் பார்க்க

## ஆலயத்தில் திருட்டு

ஊர்காவற்றுறை கரம்பன் கிழக்கு வட்டுவில் முருக மூர்த்தி ஆலயத்தில் விக்கிரகங்கள், வாகனம் என்பன திருடப்பட்டுள்ளன. இச்சம்பவம் நேற்று முன்தினம் வெள்ளிக் கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

மேற்படி ஆலயத்தின் பரிவாரத் தெய்வமாக அமைக்கப்பட்டிருந்த பிள்ளையார் விக்கிரகம் களவாடப்பட்டுள்ளதுடன் ஆலயத் 23-ம் பக்கம் பார்க்க

## ஆஸி சென்ற படகு மூழ்கி 20 பேர் பலி

புகலிடக்கோரிக்கையாளர்களுடன் அவுஸ்திரேலியாவை நோக்கி பயணித்த படகொன்று ஜாவா தீவுகளுக்கு தெற்கே உள்ள கடற்பரப்பில் மூழ்கியுள்ளது.

இந்த படகில் பயணித்த சுமார் 20 பேர் உயிரிழந்துள்ளதாகவும் 25 பேர் காப்பாற்றப்பட்டுள்ளதாகவும் இந்தோனேஷிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அவுஸ்திரேலியாவின் புதிய பிரதமர் டொனி அபர்ட் புகலிடக் கோரிக்கையாளர்கள் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக ஜாவாத் தீவுகளுக்கு செல்வதற்கு சில தினங்கள் எஞ்சியிருந்த நிலையில் இந்த 24-ம் பக்கம் பார்க்க

## சர்வதேசத்தை புறந்தள்ளினால் நாட்டிற்கு பேராபத்து உண்டாகும்

### அரசை எச்சரிக்கிறது ஐ.தே.க

சர்வதேச சட்டங்களுக்கமைய அரசாங்கம் செயற்படாவிட்டால் நாட்டுக்குப் பேராபத்து காத்திருக்கிறது என்று பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் 24-வது கூட்டத்தொடரில் தமது இலங்கைப் பயணம் குறித்த இடைக்கால அறிக்கையை சமர்ப்பித்த ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம் பிள்ளை, போர்க் குற்றங்கள் தொடர்பில் இலங்கை நம்பத்தகுந்த உள்ளக விசாரணையை மேற்கொள்ளாவிட்டால் 2014ஆம் ஆண்டு மார்ச் மாதம் சர்வதேச விசாரணைக்கு வலியுறுத்தப்படும் எனத் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், அவரின் அறிக்கைக்குப் பதிலளித்து உரையாற்றிய ஐ.நாவுக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்க, இலங்கை அரசு 23-ம் பக்கம் பார்க்க

## ஜனாதிபதி மகிந்த முன்னிலையில் பதவியேற்கமாட்டார் விக்னேஸ்வரன்!

வட மாகாண முதலமைசசராக தெரிவு செய்யப்பட்ட சி.வி.விக்னேஸ்வரன் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்கு முன்பாக பதவிப் பிரமாண உறுதிமொழி எடுத்துக் கொள்ள மாட்டார் எனத்தெரியவருகினறது.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் தலைவரும், திரு கோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் முன்னிலையிலேயே அவர் பதவி யேற்றுக் கொள்வார் என கூட்டமைப் பின் வட்டாரங்கள் தெ்ரிவிக் கின்றன.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின முன்னிலையிலேயே இதுவரை பெரும்பாலான மாகாண முதல மைச்சர்கள் பதவியேற்றுள்ள னர்.

ஜனாதிபதியின் முன்னிலையில் மாகாண முதல 02-ம் பக்கம் பார்க்க

வவுனியாவில் இன்று
கரும்பு தின்ன கைக்கூலி
பார்க்க... பக்கம் 02

## கச்சத்தீவை மீட்டெடுக்க சட்ட நடவடிக்கை

கச்சத்தீவை இலங்கையிடமிருந்து மீட்பதற்காக சட்ட ரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என பாரதிய ஜனதா கட்சியின் தேசிய தலைவர் ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

சென்னை தியாகராய நகரில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே, மீனவ பிரச்சினை தொடர்பில் இலங்கை இந்தியாவுக்கிடையே கலந்துரை 24-ம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## இந்.மீனவர்கள் நாடு திரும்பினர்

இலங்கையில் சிறையில் அடைக்கப்பட்டிருந்த நிலையில் நீதிமன்றினால் விடுதலை செய்யப்பட்ட 41 இராமேஸ்வரம் பகுதி மீனவர்கள் நேற்று காலை மண்டபம் முகாம் பகுதியை சென்றடைந்தனர். கடந்த ஜூலை 7ஆம் திகதி 5 படகுகளுடன் 21 மீனவர்களும், ஆகஸ்ட் 7, 8ஆம் திகதிகளில் 5 படகுகளில் 20 மீனவர்களும் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு அனுராதபுரம் மற்றும் வவுனியா சிறைகளில் அடைக்கப்பட்டனர்.

இவர்களை மன்னார் நீதிமன்றம் இரண்டு நாட்களுக்கு முன்னர் விடுதலை செய்ததை தொடர்ந்து இவர்கள் நேற்று காலை 7.20 மணிக்கு மண்டபம் கடலோர காவற்படை தளத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். (செ-11)


**தொடர்ந்தும் உங்கள் சேவையில்....**

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்

கடிதங்கள் அன்பளிப்பு பொருட்கள் உடுபுடவைகள் CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும். (C-4936)

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-021 222 5392

WESTERN UNION MONEY TRANSFER



**விற்பனைப் பிரதிநிதிகள் தேவை**

பாடசாலைக்குச் சென்று நூல்கள் விநியோகிக்கக்கூடிய ஆர்வமுள்ள விற்பனைப் பிரதிநிதிகள் தேவைப்படுகின்றனர்.

- ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
- நாளொன்றுக்கு 1,200 + Commission

தொடர்புகளுக்கு:
071 900 3171
(மாலை 4 மணிக்கு பின்னர் தொடர்பு கொள்ளவும்) (சி-4951)



**கரும்பு தின்ன கைக்கூலி...**

**வெளிநாட்டு ஹோட்டல் & சொகுசு கப்பல் வேலைவாய்ப்புக்கள்**

வவுனியாவில் இன்று

- UK, Australia, New Zealand, Singapore, Malaysia, China 3ஸ்டார் 5ஸ்டார் ஹொட்டேல்கள்
- உலகம் சுற்றிவரும் அமெரிக்க சொகுசுக் கப்பல்கள்




வெளிநாட்டுப் பிரதிநிதி Ryan Kok பங்கேற்கும்
விளக்கக் கருத்தரங்கு & உடனடி அனுமதி
29-09-2013 ஞாயிறு காலை 10 மணிக்கு
வவுனியா நெல்லி ஸ்ரார் விடுதியில்

சிகரம் கல்வி - தொழில் வழிகாட்டி
153, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
(DAMRO வுக்கு முன்னால்)
தொ.பே.: 021 222 00 11
நேரடி: 0773 616 798



**பெயர் மாற்றம்**



உயரிய ஒலி, ஒளி நயத்துடன் கடந்த 30 ஆண்டுகளாக வீடியோ படத்துறையில் "மலரும் மலர்கள்" (VIDEO BLOSSOM) என்னும் பெயரில் உன்னதமான சேவை புரிந்த எமது நிறுவனம்

அன்னையின் ஆசைப்படி

**ஸ்ரீ தேவி டிஜிற்றல் மீடியா**
**(SRI THEVI DIGITAL MEDIA)**
(சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்)

எனும் புதிய பெயரில் சேவையாற்றவுள்ளோம் என்பதனை அன்பர்கள், நண்பர்கள், உள்நாட்டு, வெளிநாட்டு வாடிக்கையாளர்கள், உறவுகளுக்கும் அன்னையின் ஆசியை முன்னிருத்தி அறியத் தருகின்றோம்.




குறிப்பு:
- அன்றும் இனி என்றும் எமது கண்ணியம், கடமை, நேரம் தவறாமை, துல்லியமான படப்பிடிப்பு, நேர்த்தி என்பவை பேணப்படும்.
- மேற்படி "VIDEO BLOSSOM" என்னும் பெயரில் எமக்கு கிளை நிறுவனங்கள் எவையும் இல்லை என்பதனையும் பணிவுடன் அறியத் தருகின்றோம்.

அன்புடன்,
உங்கள் நித்தி
(உரிமையாளர்,
SRI THEVI DIGITAL MEDIA)

(4053) நன்றி


# "யாழ்ப்பாணத்துல ஒரு காதல்" முழுநீளத் திரைப்படம் விரைவில்

(யாழ்ப்பாணம்)




தென்னிந்திய தமிழ் திரைப் படத்துறையில் பணியாற்றி குருவி, அயன், அவன் இவன், கும்கி ஆகிய திரைப்படங்களின் திரைப்படக் குழுவுடன் இணைந்து பணியாற்றிய ஈழத்தமிழர் இராசரட்ணம் வினோஜ் இயக்கத்தில் "யாழ்ப்பாணத்துல ஒரு காதல்" எனும் திரைப் படம் உருவாகி வருகிறது.

யாழ்ப்பாணப் பின்னணியை வைத்து உருவாக்கப்பட்டு வரும் இம் முழுநீளத் திரைப்படத்தின் முன்னோட்டம் இணையத்தளங்களில் வெளியிடப்பட்டுள்ளது.

இணையத்தளத்தில் yarlpanathula oru kadhal என தேடல் செய்வதன் மூலம் இதனை பார்வையிட முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

விரைவில் வெளிவரவுள்ள இத்திரைப் படத்தின் கதை, திரைக்கதை, வசனம் மற்றும் காட்சி வடிவமைப்பு, சண்டைப்பயிற்சி என்பனவற்றை இராசரட்ணம் வினோஜ் வழங்கியுள்ளதோடு திரைக்கான இசையை சத்தியன் வழங்கியுள்ளார்.

இத்திரைப்படம் 2014 ஆம் ஆண்டு வெளியிடப்படக் கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. (செ-5)


**பணிப்பெண் தேவை**

கந்தர்மடத்தில் உள்ள குடும்பம் ஒன்றுக்கு வீட்டில் தங்கியிருந்து வேலை செய்யக்கூடிய பணிப்பெண் தேவை.

தொடர்புகளுக்கு:
077 663 1655 (இ



**வாடகைக்கு**

நெல்லியடியில் வார நாட்களில் வகுப்புக்கள் நடத்தக்கூடிய சகல வசதிகளையும் கொண்ட (தளபாட சாதனங்கள் உள்ளடங்கலாக) இடம் வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:
075 433 7186 (சி-4953)



**இந்தியா செல்லும் பயணிகளுக்கு**

யாழ் மக்களுக்காக
24 மணித்தியாலய சேவையை விஸ்தரித்துள்ளோம்

கொழும்பு - சென்னை Colombo-Chennai 14500/=
RTN (மாதாந்த கொடுப்பனவுமுறை) 1450/=
HNB Special Offer for Credit Card holders

Nation Popular Travels & Tours
#128, Brown Road, Jaffna
0214 920 920 (சி-4955)


## மகிந்த...

மைச்சர்கள் பதவியேற்க வேண்டும என சட்ட ரீதியான நிர்ப்பந்தம் எதுவும் இல்லாத நிலையில், விக்னேஸ்வரன், மகிந்த ராஜபக்ஷ முன்னிலையில் பதவியேற்பதை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விரும்பவில்லை எனத தெரிய வருகிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிழக்கு மாகாணசபை உறுப்பினர்களும் கிழக்கு மாகாண ஆளுநர் முன்பாக பதவியேற்காது, சம்பந்தன முன்னிலையிலேயே பதவியேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-11)


**பிள்ளையார் இன்**

இன்று முதல் அதி விசேட விலைக்கழிவுடன் தரமான சைவ உணவுகள் எமது உணவகத்தில் நிறைவான சேவையுடன் காலை மாலையில் வழங்கப்படும். (C-4941)

இன்றைய விசேட உணவு :

| | | | |
|---|---|---|---|
| தோசையும் மசாலாத் தோசையும் உருளைக்கிழங்கு கறியுடன் | 80/- | பூரி, சப்பாத்தி, உருளைக்கிழங்கு கறியுடன் | 80/- |

தொடர்புகளுக்கு: இல.31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 021 222 2829



3 மாத கால பயிற்சி நெறி **அக்ஷயா** பயிற்சிக் கட்டணம் 20000/= மட்டுமே

பேசியல், மேக்கப், கெயாஸ்டைல், தலைமுடி அயன் பண்ணுதல், தலைமுடி சுருட்டுதல், மேற்படி பயிற்சி நெறிகள் நடைபெறுகின்றன. ★ ஒட்டிய கன்னங்களை குண்டுக் கன்னங்களாக மாற்றும் குளிகை ★ உடல் எடை கூட்டும் குளிகை ★ உடல் எடை குறைக்கும் பால்மா குளிகை, கோப்பி என்பன ★ கருவளையம், நாப்பட்ட பருக்கள், இளநரை, முடிகொட்டுதல் அனைத்துக்குமான குளிகை ★ தலைமுடி வளரச் செய்யும் ஆயுள்வேத எண்ணெய் ★ முகத்தில் உள்ள கறுப்பு, பிறப்பிலே கறுப்பு, நாள்பட்ட வடுக்கள், பருக்கள், காயங்கள், மஞ்சள், வெள்ளைப் புள்ளிகள் அனைத்தையும் மாற்றும் ஒரிஜினல் வைற்றிங் கிறீம் விற்பனைக்குண்டு. மூலிகை வைற்றிங் பேசியல் செய்து கொள்ளலாம். மேக்கப் ஓடர்கள் ஏற்றுக் கொள்ளப்படும். ★ கழுத்து கறுப்பு அகற்றும் கிறீம் பெற்றுக் கொள்ளலாம். தலைமுடி சுருட்டுதல், அயன் பண்ணுதல், கேளிங் செய்து கொள்ளலாம்.

பதிவு இல. 16168
தொ.பே: 077 210 6155
அக்ஷயா, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
(பிறவுண் றோட் சந்தி, அருள் கொமினிகேசன் அருகில்) (4052)


## மானிய உர விநியோகம்

நுணாவில் மேற்கு விவசாய சம்மேளனப் பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட நெற்செய்கையாளர்களுக்கு 30.09.2013 திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு 3 கட்ட மானிய உரம்களும் சேர்த்து மீசாலை APCயில் வைத்து வழங்கப்படுமென்று விவசாய சம்மேளனத் தலைவர் த.துரைராசா அறிவித்துள்ளார். (4048)

## நன்றியறிதலும் அந்தியேட்டி அழைப்பும்



கடந்த 16.08.2013 வெள்ளிக்கிழமை அன்றையதினம் இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவர் **அமரர் வைரவன் தியாகராஜா** அவர்களின் அந்தியேட்டிக் கிரியை இன்று 29.09.2013 ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணியளவில் கீரிமலை தீர்த்தக் கரையிலும் 30.09.2013 திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் இறுதிக் கிரியையில் கலந்து கொண்டவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலிகளையும் இரங்கல் உரைகளை நிகழ்த்தியவர்களுக்கும் பத்திரிகை, தொலைபேசி மூலம் இரங்கலை தெரிவித்தவர்களுக்கும் மற்றும் உற்றார், உறவினர்களுக்கும் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அவ்வொல்லை வீதி,
புலோலி மத்தி, பருத்தித்துறை

இங்ஙனம்,
குடும்பத்தினர்

(சி-4047)

# மது அருந்தியவருக்கு அபராதம் விதிப்பு

தேர்தல் காலத்தில் சட்டவிரோதமான முறையில் வெளிநாட்டு மதுபான வகைகளைப் பதுக்கி வைத்திருந்த ஹோட்டல் விடுதி முகாமையாளர் ஒருவருக்கு கண்டி மாவட்ட பிரதான மஜிஸ்திரேட் ஏ.எம்.வசந்தகுமார ஒரு இலட்ச ரூபா அபராதம் விதித்ததுடன் மதுப் போத்தல்களை பறிமுதல் செய்யவும் உத்தரவிட்டார்.

ஹந்தானையிலுள்ள விடுதி ஒன்றின் முகாமையாளர் ஒருவருக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இம்முறைப்பாட்டில் 280 மதுபானப் போத்தல்களை சட்டவிரோதமாக பதுக்கி வைத்திருந்ததாக குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

அவருக்கு ஒரு இலட்ச ரூபா அபராதம் விதித்த நீதவான் அனுமதிக்கக் கூடிய அளவான 10 போத்தல்களை மட்டும் எடுத்துச் செல்ல அனுமதித்ததுடன் மீதி 270 போத்தல்களையும் பறிமுதல் செய்யும்படியும் உத்தரவிட்டார். (அ-2)

**மனத்தளர்வா? தனிமையா? வாழ்க்கையில் வெறுப்பா?**

உங்களுக்காக நாங்கள் இருக்கின்றோம். உடனே அழையுங்கள். இரகசியங்களை முழுமையாகப் பாதுகாப்போம்.

**கைகொடுக்கும் நண்பர்கள்**

**021 222 8117**

(சி-4924)

# அரச ஓய்வூதியர் தினம்

(பூநகரி)

கிளிநொச்சியில் மாவட்ட ரீதியிலான அரச ஓய்வூதியர் தினமும் சிரேஷ்ட ஓய்வூதியர்களைக் கௌரவிக்கும் நிகழ்வும் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 15 ஆம் திகதி காலை 10 மணியளவில் கனகபுரம் நண்பர்கள் விருந்தகத்தில் நடைபெறவுள்ளது. கிளிநொச்சி மாவட்ட அரச ஓய்வூதியர் சங்கத் தலைவர் அ.கனகரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வையொட்டி வயதில் மூத்த 15 ஓய்வூதியர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர். இதன்படி பிரதேச செயலக ரீதியாக இயங்கும் பூநகரி பிரிவிற்கு இரண்டு ஓய்வூதியர்களும் கண்டாவளை பிரிவிற்கு மூன்று ஓய்வூதியர்களும் பச்சிலைப்பள்ளி பிரிவிற்கு இரண்டு ஓய்வூதியர்களும் கரைச்சி பிரதேச செயலர் பிரிவிற்கு 8 ஓய்வூதியர்களும் கௌரவிக்கவுள்ளனர்.

பிரதேச ரீதியிலான ஓய்வூதியர் சங்கங்கள் தங்களு க்கு ஒதுக்கப்பட்ட எண்ணிக்கையிலான ஓய்வூதியர்களை சிபார்சு செய்து மாவட்ட தலைமைச் செயலகத்திற்கு ஒரு வாரத்திற்குள் அனுப்பி வைக்குமாறு கோரப்படுகின்றன. (ம-84)

# போட்டிப் பரீட்சை ஒக்டோபர் 6 இல்

(கொழும்பு)

இவ்வாண்டுக்கு சட்டக் கல்லூரியில் மாண வர்களை இணைத்துக் கொள்வதற்கான போட் டிப் பரீட்சை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 6 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

பரீட்சைத் திணைக்க ளத் தினால் நடத்தப்படவுள்ள இப்பரீட்சைக்காக 8 ஆயிரத்து 250 பேர் விண்ணப்பித்துள்ளனர் என பரீட்சை திணைக்களம் தெரிவிக்கிறது. (அ-2)

## 45 ஆம் நாள் நினைவுகளில்



தோற்றம்: 08.05.1958

மறைவு: 16.08.2013

**அமரர் வ. தியாகராசா (தியாகு)**

(பச்சிலைப்பள்ளி பளை பிரதேச சபை உறுப்பினரும், பளை பனை, தென்னை வள கல்வி உத்தியோகத்தரும், முன்னாள் பளை வர்த்தக சங்கத் தலைவரும் ஆவார்)

குடும்பத்திற்கு ஓர் ஒளிவிளக்காய்
பளை போற்றும் நல் நண்பனாய்
வாழ்விற்கு ஓர் கலங்கரை விளக்காய்
உள்ளத்தால் செயலால் உயர்ந்தவனே
இனி உன் இடத்தை நிரப்ப யார் உள்ளார்?
அவனியிலே நாம் தவிக்கின்றோம்
இனி எப்போது உன்னைக் காண்பதையா?

இடைக்குறிச்சி. வரணி. (சி-4797) **சகோதரர்கள்**

## வடக்கு மாகாண சபைத் தேர்தல் - 2013

# நன்றி நவிலல்



மேற்படி தேர்தலில் எமது கட்சிக்கும் எனக்கும் வாக்களித்த வாக்காளப் பெருமக்களுக்கு எனது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். நான் பிரதிநிதியாகத் தெரிவுசெய்யப்படாதுவிடினும் எனது கட்சிக்கும் மக்களாகிய உங்களுக்கும் தொடர்ந்தும் நான் சேவை செய்வேன்.

என் கடன் பணி செய்து கிடப்பதே

**கணபதிப்பிள்ளை தருமலிங்கம் - இல.11,**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

(சி-4945)

# முதலாண்டு நினைவஞ்சலி



**அமரர்**

**சின்னான் நடேசன்**

(வைத்தியர், சோதிடர், ஓய்வுநிலை நெசவு போதனாசிரியர்)

திதி: புரட்டாதி அபரபக்க தசமி

காலம் : 29.09.2013

ஞாயிற்றுக்கிழமை

பண்போடு கற்றறிந்து பாரினிலே ஆசானாய்
கண்கண்ட வைத்தியராய் குறிப்பறிந்த சோதிடராய்
எண்ணமதில் எமையே என்றும் உயரவைத்து
வண்ணமுற வாழ்ந்து விழிமூடிய தெய்வமே

இந்நினைவு தினத்தில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் சமூகம் தந்து அன்னாரை நினைவு கூர்வதுடன் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் வேண்டிக் கொள்கின்றோம்.

தும்பளை தெற்கு,
பருத்தித்துறை.

(சி-4996)

தகவல்:
குடும்பத்தினர்

## அன்பான யாழ்ப்பாண மாவட்ட மக்களுக்கு...

வடக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கு அமோக ஆதரவளித்து வரலாற்று வெற்றியடைச் செய்ததன் மூலம் நாம் அனைவருமாகச் சேர்ந்து எமது வரலாற்றுக் கடமையை நிறைவேற்றியுள்ளோம். தேசிய விடுதலைக்கான பயணத்தில், நாம் இன்னொரு கட்டத்தைக் கடந்துள்ளோம் என்ற பெருமையோடு நிற்கின்றோம்.

எனக்குத் தங்களது விருப்பு வாக்கினை அளித்த மக்களினை மனதில் இருத்தி, அவர்கள் என்மீது வைத்துள்ள அன்புக்கும் நம்பிக்கைக்கும் பாத்திரமாக இருக்கின்ற அதே வேளையில்- அவர்களுடையது மட்டுமன்றி, தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கு வாக்களித்த மக்களினது மட்டுமன்றி - ஒட்டு மொத்தமான தமிழ் பேசும் மக்களது அபிலாசைகளை ஈடேற்ற, தொடர்ந்தும் நான் உழைப்பேன் என்று நன்றியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.



இவ்வண்ணம்,

**தர்மலிங்கம் சித்தார்த்தன்**

**தமிழ் தேசியக் கூட்டமைப்பு (TNA)**

(4041)



(சி/4797)

# 88 வைத்தியர்களின் அதிரடி இடமாற்றம் குறித்து சுகாதார அமைச்சின் செயலருடன் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

**யாழ்.போதனா வைத்தியாசாலையில் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள 88 வைத்தியர்களின் அதிரடி இடமாற்றம் தொடர்பில் சுகாதார அமைச்சின் செயலாளருடன் வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் உயரதிகாரிகள் மற்றும் யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளர், பிரதிப் பணிப்பாளர் உட்பட நிர்வாகத்தினர் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.**

இதன்போது சுகாதார அமைச்சின் செயலாளர் வைத்தியர் நிகால் ஜெயதிலக்க, யாழ் போதனா வைத்தியசாலையில் வைத்தியர்களை அதிரடியாக இடமாற்றம் செய்ய முடியாது என்பதை ஏற்றுக் கொண்டதாகவும் வைத்தியசாலையின் சேவைகள் பாதிப்புறாத வகையில் இடமாற்றங்களை அமுல்படுத்தும் அதிகாரத்தைப் பணிப்பாளர் திருமதி பவானி சுபதிராஜாவுக்கு வழங்கியதாகவும் தெரிய வந்துள்ளது.

இவ் விடயம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

யாழ்.போதனா வைத்தியசாலையில் பணியாற்றும் 188 மருத்துவ அதிகாரிகளில் 88 பேருக்கு இடமாற்றம் அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் சில பிரிவுகளில் பணிபுரியும் சகலரும் இடமாற்றத்துக்கென அறிவிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்.போதனா வைத்தியசாலை மட்டும் வடமாகாணத்தின் ஒரே ஒரு மூன்றாம் நிலை வைத்தியசாலை ஆகும். இங்கு ஏற்கனவே 140 க்கு மேற்பட்ட வைத்தியர்களுக்கான வெற்றிடம் நிலவுகின்றது.

இடமாற்றம் பெற்றுள்ள வைத்தியர்கள் அனைவரும் மிகுந்த அனுபவம் உள்ளவர்கள். உதாரணத்துக்கு சத்திர சிகிச்சைப் பிரிவில் கடமை புரியும் தற்பொழுது இடமாற்றம் பெற்றுள்ள வைத்தியர்களின் பங்களிப்புடனேயே இலங்கையில் மிகக் குறைந்த கால காத்திருப்புடன் சத்திரசிகிச்சைகளை மேற்கொள்ள முடிகிறது. இந் நிலையில் பல சத்திர சிகிச்சை பிரிவுகளில் கடமையாற்றும் வைத்திய அதிகாரிகள் அனைவரும் இடமாற்றப்படவுள்ளனர்.

இவர்களுக்கு பதிலாக புதிதாக நியமனம் பெறவுள்ள வைத்தியர்கள் 58 பேரை நியமிப்போம் என வாக்குறுதி தரப்பட்டுள்ளது. ஆகவே சாதாரணமாக 30 வைத்தியர்களுக்கான வெற்றிடம் மேலதிகமாக உருவாகும்.

வாக்குறுதியளிக்கப்பட்ட 58 பேரில் எத்தனை பேர் உண்மையாக நியமனம் பெறுபவர்கள் என்பதும் சந்தேகத்துக்குரியதே.

இவர்கள் அனைவரும் நியமிக்கப்பட்டாலும் ஏற்படவுள்ள 87 வெற்றிடங்களை நியமிக்கப்படக் கூடிய 58 பேரால் முழுவதாக நிரப்ப முடியாது.

இந்த நிலையால் யாழ்.போதனா வைத்தியசாலையின் பணிகளுக்கு பெரும் பாதிப்பு ஏற்படும் என அச்சமுற்ற வைத்திய நிபுணர்களும் பணிப்பாளரும் கடந்த வியாழக்கிழமை கொழும்பில் சுகாதார அமைச்சின் செயலாளரை சந்தித்து நிலைமையை விளக்கினார்.

இதன்போது தெற்கில் மேலதிக வைத்தியர்கள் உள்ள வைத்தியசாலைகளில் செய்வது போன்ற இடமாற்றங்களை வடக்கில் யாழ். போதனா வைத்தியாசாலையில் அதிரடியாக செய்ய முடியாது என்பதை செயலாளரும் ஏற்றுக் கொண்டார்.

மேலும் தெற்கில் உள்ள வைத்தியசாலைகளில் இருந்து இடமாற்றம் பெறுகின்ற வைத்தியர்களுக்கு பதிலாக அனுபவம் உள்ள வைத்தியர்களே பதிலீடாக வரவுள்ளனர்.

நடைபெற்ற கலந்துரையாடலின் பின் செயலாளர் யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளருக்கு இடமாற்றங்களை அமுல்படுத்தும் போது வைத்தியசாலையின் சேவைகள் பாதிப்புறாதவாறு பார்த்துக்கொள்ள அதிகாரம் அளித்துள்ளார். பதிலீடாக வரும் வைத்தியர்கள் உரிய அனுபவம் பெறும் வரை இடமாற்றங்களை அமுல்படுத்தத் தேவை இல்லை எனவும், படிப்படியாக அமுல்படுத்தினால் போதுமானது எனவும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

இந்த இடமாற்றங்களை அமுல்படுத்துவதன் மூலம் யாழில் உள்ள சிறிய வைத்திய சாலைகள் திறம்பட செயற்படும் என்பது உண்மைதான்.

ஆனால் நிர்வாக அமைப்பின்படி இந்த வைத்தியர்களுக்கு அனுபவம் இருந்தும் அவ்வவ் வைத்தியசாலைகளுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே சேவைகளை வழங்க முடியும்.

ஆனால் அவர்களால் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைக்காக அனுப்பப்படும் நோயாளர்களுக்கு சிகிச்சை வழங்க போதிய அளவிலும் அனுபவத்துடன் வைத்தியர்கள் யாழ்.போதனா வைத்தியசாலையில் இருக்க மாட்டார்கள்.

இதேவேளை மேற்படி சந்திப்பு தொடர்பாக யாழ்.போதனா வைத்தியசாலையின் பணிப்பாளருடன் தொலைபேசி ஊடாக தொடர்பு கொண்டு கேட்ட போது தான் இப்பொழுது கொழும்பில் நிற்பதாகவும் யாழ்ப்பாணத்துக்கு வந்தவுடன் நிலைமைகளை நேரில் விளக்குவதாகவும் கூறினார். (அ-6)

# வாரம் ஒரு தகவல்

## அனுமதி தேவை!

"என்ன சேர் சுவரிலே அடிக்க வேண்டிய அனைத்து ஆணிகளையும் அடித்து முடித்து விட்டீர்களா?"

"அடடே! வாருங்கள் சேர்... என்ன இருந்தாலும் இந்த வீட்டுச் சொந்தக்காரர் நீங்கள்தானே. நான் வாடகைக்கு குடியிருக்கிறவன். உங்களுடைய அனுமதி வாங்கிக் கொண்டுதான் ஆணி அடித்திருக்க வேண்டும். பக்கத்துப் போர்ஷன்லே தானே இருக்கிறீர்கள். அதனாலே பின்னர் சொல்லி விடலாம் என்று நினைத்துக் கொண்டு அவசரத்திலே அடித்து விட்டேன்"

"அதனாலே என்ன சேர் பரவாயில்லை. எல்லாம் நன்மைக்கே!"

"ஹிஹி... நன்றி"

"இந்த ஆணிகள் இருக்கட்டும். பாதங்களிலே ஆணி என்று சொல்கிறார்களே... அது என்ன ஆணி?"

பாதங்களிலே மட்டும் இல்லை... உள்ளங்கையில் கூட அது உருவாகும். அதற்கு Callosity என்று பெயர் உண்டு. ஒரே இடத்திலே அதிகமான அழுத்தம் அதிக நேரத்திற்கு இருந்தால் ஆணி உருவாவதற்கு அதிகம் வாய்ப்புள்ளது.

டெனிஸ் ஆடுகிறவர்களிற்கு உள்ளங்கையிலே இதுவரும். காலணிகள் சரியான அளவிலே இல்லையென்றாலும் உருவாகும்"

"இதற்கு வைத்தியம் இல்லையா?"

"அறுவை சிகிச்சை செய்யலாம். இருந்தாலும் இதுமாதிரி நீண்ட நேர அழுத்தங்கள் இல்லாமல் பார்த்துக் கொள்வது நல்லது"

"உங்களிடம் வந்தால் இது மாதிரி ஏதாவது உபயோகமான விடயங்களை தெரிந்து கொள்ள முடிகின்றது. அதற்காகவே அடிக்கடி வரவேண்டும் என்று நினைப்பதுண்டு. இப்பொழுது நான் வந்திருப்பது நீங்கள் சுவரிலே அடித்த ஆணி தொடர்பாகக் கேட்பதற்காகத்தான்!"

"புதிதாக ஒரு நாட்காட்டி இவ்வருடம் கிடைத்தது. அதை மாட்டிக் கொள்வதற்காகத்தான் இப்படி செய்து விட்டேன். உங்களிடம் அனுமதி வாங்காதது..." இப்பொழுது நான் வந்தது உங்களிடம் அனுமதி வாங்குவதற்காகத்தான்"

"என்ன சொல்கிறீர்கள்?"

நீங்கள் இந்தப் பக்கமாக சுவரிலே அடித்துள்ள ஆணி எங்களுடைய வீட்டு சுவர் பக்கமாக நீட்டிக் கொண்டு வெளியே வந்துள்ளது. அதிலே நானும் ஒரு நாட்காட்டியை மாட்டிக் கொள்ளலாமா என்று கேட்கத்தான் வந்தேன்!"

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# இராசி பலன்

29.09.2013
(புரட்டாதி 13, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.57 மணிக்கு
தசமி பின்னிரவு 2.58 மணிவரை
புனர்பூசம் முற்பகல் 8.59 மணிவரை
இராகுகாலம் 4.32-6.02 மணிவரை
சுபநேரம் 9.02-10.32 மணிவரை

**மேடம்** சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், தாய் வழியில் அனுகூலமுண்டு, கல்விக்காக எடுத்த முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**இடபம்** தைரியத்தோடு செயற்பட்டு சாதனை படைக்கும் நாள், தேக நலனில் கொஞ்சம் அக்கறை தேவை, உடன்பிறப்புக்கள் மூலம் உள்ளம் மகிழும் செய்திகள் வந்து சேரலாம்.

**மிதுனம்** நாவன்மையால் நற்பெயர் எடுப்பீர்கள், குடும்ப மகிழ்ச்சி கூடும், நிலையான வருமானத்துக்கு வழியமைத்துக் கொள்வீர்கள், கணபதி வழிபாடு காரிய வெற்றி தரும்.

**கடகம்** பயணத்தால் பலன் கிடைக்கும், விருப்பங்கள் நிறைவேற கண்ணனை வழிபட வேண்டிய நாள், மனதில் இனம்புரியாத சிந்தனைகள் தோன்றி மறையும், எடுத்த காரியத்தை முடிக்க அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள்.

**சிங்கம்** உறவினர்களைக் காண பயணமொன்றை மேற்கொள்ளும் சூழ்நிலை உருவாகும், சயன சுகக் குறைவான நாள், சுப செலவுகள் அதிகரிக்கும், சிலர் மீது காரணமில்லாமல் கோபம் ஏற்படலாம்.

**கன்னி** எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கப் பெறுவீர்கள், விரதங்களில் நம்பிக்கை கூடும், உறவினர் வருகையால் குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**துலாம்** குடும்பத்தினரின் ஒத்துழைப்பால் தொழில் முன்னேற்றத்துக்கு வழி வகுப்பீர்கள், முத்தான வாய்ப்புக்கள் இல்லம் தேடி வரலாம், ஆரோக்கியம் சீராகும், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்** சுறுசுறுப்போடு செயற்படுவீர்கள், பெரிய மனிதர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கப் பெறுவீர்கள், எதிர்பாராத பயணங்களால் நன்மையுண்டு, தொலைபேசித் தகவல் மகிழ்ச்சி தரும்.

**தனுசு** எதிர்பாராத வகையில் உறவினரிடையே சில மனஸ்தாபங்கள் தோன்றி மறையும், போசன சுகமுண்டு, எதையும் சிந்தித்து செயற்படுத்த வேண்டிய நாள், மனச்சஞ்சலங்கள் அதிகரிக்கும்.

**மகரம்** நண்பர்கள் சந்திப்புண்டு, சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும், போசன நன்மையுண்டு, தன்னம்பிக்கை அதிகரிக்கும், புதிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்.

**கும்பம்** ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும், குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் அகலும், தெய்விக சிந்தனை மேலோங்கும், கடன் பிரச்சினைகளை சுமுகமாக தீர்க்கும் எண்ணம் உருவாகும்

**மீனம்** புண்ணிய காரியங்களில் அதிக நாட்டம் காட்டுவீர்கள், தொலைபேசித் தகவல் மகிழ்ச்சிதரும் பெரிய மனிதர்களின் தொடர்புகள் உங்கள் தகுதியை உயர்த்தும்.

வளவன்

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி ரூபா | திருநெல்வேலி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 40 | 40 | 60 |
| உருளைக்கிழங்கு | 100 | 100-140 | 100 |
| பச்சைமிளகாய் | 60 | 60 | 80 |
| தக்காளி | 110 | 80 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 40 | 40 |
| கோவா | 60 | 60 | 60 |
| கரட் | 40 | 60 | 60 |
| பூசணி | 20 | 30 | 40 |
| புடோல் | 40 | 60 | 40 |
| வாழைக்காய் | 40 | 30 | 40 |
| சின்ன வெங்காயம் | 160 | 100--110 | 160 |
| பெரிய வெங்காயம் | 50-90 | 60 | 80 |
| பாகற்காய் | 90 | 80 | 80 |
| வெண்டிக்காய் | 40 | 60 | 40 |
| கருணைக் கிழங்கு | 50 | 60 | 80 |
| பயற்றங்காய் | 30 | 40 | 50 |
| லீக்ஸ் | 80 | 60 | 100 |
| பீற்றூட் | 15 | 20 | 30 |
| கறிமிளகாய் | 60 | 50 | 60 |
| முருங்கைக்காய் | 120 | 110 | 120 |
| போஞ்சி | 80 | 90 | 120 |
| கீரை - 1 பிடி | 10 | 15 | 30 |
| தேசிக்காய் | 500 | 350 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 40-50 | 35-45 |
| இராசவள்ளி | 80 | 60 | 120 |

# உரத்த குரலில் இலங்கையை தாக்கிய கனேடிய அமைச்சர்

## அதிர்ந்து போனாராம் பீரிஸ்

**பொறுப்புக்கூறவும் மனித உரிமைகள் குறித்த கடப்பாட்டை நிறைவேற்றவும் இலங்கை அரசு முன்வர வேண்டும் என்று கனேடிய வெளிவிவகார அமைச்சர் ஜோன் பயார்ட் அழைப்பு விடுத்துள்ளார்.**

ஐ.நா.பொதுச்சபைக் கூட்டத்தின் ஒருபக்க நிகழ்வாக கடந்த 26 ஆம் திகதி ஒழுங்கு செய்யப்பட்டிருந்த பொதுநலவாய வெளி விவகார அமைச்சர்களின் கூட்டத்தில் உரை யாற்றிய போதே கனேடிய வெளிவிவ கார அமைச்சர் இந்த அழைப்பை விடுத்துள் ளார்.

பொதுநலவாய செயலர் கமலேஸ் சர்மா, இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் ஆகியோரும் கலந்து கொண்ட இக் கூட்டத்தில் வைத்து இலங்கை குறித்து உரத்த குரலில் கனேடிய வெளிவிவகார அமைச்சர் காட்டமான கருத்துகளை வெளியிட்டுள் ளார்.

இந்தக் கூட்டத்தை முடித்து வெளியே வந்த கனேடிய வெளிவிவகார அமைச்சர்,

"இலங்கையின் மனித உரிமைகள் விவ காரம் குறித்து மீண்டும் இன்று நான் சத்த மாகவும் தெளிவாகவும் பேசினேன். போர்க் குற்றங்கள் குறித்த தீவிரமான குற்றச்சாட் டுகளுக்கு பொறுப்புக்கூற நடவடிக்கை எடுக் கப்படாமை, தமிழ்ச் சமூகத்துடன் நல்லிணக் கத்தை ஏற்படுத்த போதிய நடவடிக்கை எடுக் கப்படாமை, போர் முடிவுக்கு வந்த பின்னரும் தொடரும் நிகழ்வுகள் குறித்த கவலைகளை யும் அங்கு எடுத்துக் கூறியுள்ளேன்" என்று தெரிவித்துள்ளார்.

கனேடிய வெளிவிவகார அமைச்சர் அடிக் கடி உணர்ச்சிவசப்பட்டு உரத்த குரலில் பேசி யதை இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் அதிர்ச்சியுடன் பார்த்துக் கொண்டி ருந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ-2)

# இலங்கையை சில நாடுகள் பலவீனப்படுத்துகின்றன

## அல்-ஜெசீராவிற்கு ஜனாதிபதி செவ்வி

(கொழும்பு)

இலங்கையை சில நாடுகள் பலவீனப் படுத்துவதாகவும் இலங்கை சிறிய நாடு என்பதனால் அந்த நாடுகள் அதனை நிறுத்த வேண்டும் எனவும் ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷ தெரிவித்தார்.

அல்-ஜெசீரா தொலைக்காட்சிக்கு வழங் கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு கூறியு ள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எந்தச் சம்பவம் நடைபெற்றாலும் அரசாங் கத்தின் மீது விரல்கள் நீட்டப்படுகின்றன. தனிப்பட்ட சிறிய சம்பவங்களைக் கூட மேற்கு லக நாடுகள் பெரிய சம்பவங்களாக பார்க் கின்றன.

ஜெனீவா மனித உரிமை ஆணைக்குழு வின் ஆணையாளர் நாயகம் நவநீதம்பி ள்ளை தனது வாய் மொழி மூல அறி க்கையில், கூறிய பெரும்பாலானவ ற்றை நான் ஏற்றுக் கொள்ளவில்லை. மனித உரிமை ஆணையாளர் எப் போதும் எங்களுடன் மன வருத்தத் துடனேயே இருக்கி ன்றார்.

மனித உரிமை ஆணையாளர் நவ நீதம் பிள்ளையின் இலங்கை விஜயத் தின் போதும் அதற்கு பின்னரும் அவரை குறித்து வெளியி டப்படும் கருத்துக்கள் தொடர்பில் நவநீதம் பிள்ளை தனது அறி க்கையில் சுமத்தி யுள்ள குற்றச்சாட்டு குறித்து கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளி த்த ஜனாதிபதி.

எவரும் தாம் விரும்பிய கருத் துக்களை வெளி யிடுவ தென்பது ஜனநாயக உரிமையா கும்.

மனித உரிமை ஆணையாளர் தமது இல ங்கை விஜயம் தொடர்பான வாய்மொழி மூல அறிக்கையில் இலங்கைக்கு அவர் விஜயம் செய்த போது கண்டறிந்த பல விடயங்க ளைக் குறிப்பிட்டு கூறவில்லை.

அவரது குற்றச் சாட்டுக்கள் மற்றும் கவ லைகள் தொடர்பான விசாரணைகளுக்கு உத்தரவிட ஆதாரங்கள் தேவைப்படுகின்றன.

வடக்கில் இராணுவ பிர சன்னத்தைக் கொண்டு பராமரிக்க அரசாங் கத்திற்கு உரிமை உள்ளது. வடக்கில் இராணு வத்தின் எண்ணிக்கை தொடர்பில் சில குழுக்கள் முன்வைத்துள்ள விபரங்கள் சர்ச்சைக் குரி யவை என்றார். (செ-2)


# Ceylon Medical College Council

**Pharmacists' (External) Examination- December 2013**
**(Under Old and New Criteria)**

The above Examination for Pharmacist Apprentices who have completed two years of apprenticeship under Section 56(1) (a) of the medical Ordinance will be held on December 14, 2013. Only apprentices who have completed two years apprenticeship at October 14, 2013 are eligible to apply for this examination. Those who do not achive a satisfactory standard acceptable to the Ceylon Medical College Council at the written Examination will not be called for the practical and viva voce examination.

The fee of Rs.5,000/=should be paid at any branch of people's bank to the Credit of Ac.No.167-1001/1317-0313, Town Hall branch and the receipt should reach me on or before October 14,2013 with this application. (Name of the applicant should be written on the top left hand corner of the receipt) No refund of fees will be made under any circumstances. Application by post should be posted on or before Friday October 11,2013.

Applicants are requested to submit the following information, together with three self- addressed envolopes (9"x4") in size, each with Rs.40/= stamp pasted on envelopes.

**REGISTRAR**
**CEYLON MEDICAL COLLEGE COUNCIL**
**Faculty of Medicine, Kynsey Road, Colombo 8.**
**September 13, 2013.**

மாதிரி விண்ணப்படிவத்தை வலம்புரிக் காரியாலத்தில் பார்வையிடலாம்



செலான் வங்கி ஊடாக உங்களுக்கும் ஹொண்டா ட்ரீம் யுகா மோட்டார் சைக்கிள்

லீசிங், கடன் அல்லது கடனட்டை இவற்றில் உங்களுக்கு இலகுவான மீளச்செலுத்தும் முறையை தெரிவு செய்யுங்கள்

SEYLAN SMART Lease — ஒவ்வொரு ரூ.100,000/= க்கும் மாதாந்த லீசிங் தவணைக்கட்டணம் ரூ.5,185/=

LOAN — ஒவ்வொரு ரூ.100,000/= க்கும் மாதாந்த தவணைக்கட்டணம் ரூ.5,238/=

செலான் கடனட்டை மூலமாக இலகு தவணை கொடுப்பனவு முறைகள்




செலான் இலகு தவணை கொடுப்பனவு ஊடாக விசேட விலை ரூ.199,500/=

நீங்களும் மேற்குறிப்பிடப்பட்டுள்ள விசேட வசதிகளின் ஊடாக எந்தவொரு ஹொண்டா மோட்டார் சைக்கிளையும் கொள்வனவு செய்ய முடியும்.

அருகிலுள்ள ஹொண்டா விநியோகஸ்தர் நிலையத்திற்கு அல்லது செலான் வங்கி கிளைக்கு விஜயம் செய்யுங்கள்

011 2008888

லீசிங் வசதிகள் மற்றும் கடன் வசதிகள் 24 மாதங்களுக்கு கணக்கிடப்பட்டுள்ளது.
*நிபந்தனைகளுக்கு உட்பட்டது

(சி/4937)

HONDA

இலங்கையில் இறக்குமதி செய்து விநியோகிப்போர்,
வரை. ஸ்டபர்ட் மோட்டார் (தனியார்) நிறுவனம்
பிரதான காரியாலயம் : 718/7, மருதானை வீதி, கொழும்பு 10, தொ : 011-7607200
மோட்டார் சைக்கிள் காட்சியறை : 161, கொழும்பு வீதி, ரத்தனபிட்டிய. தொ: 011-7607450
மட்டக்களப்பு கிளை . இல 425, திருகோணமலை வீதி, மட்டக்களப்பு. தொ.பே: 065-7607200
மற்றும் நாடளாவிய ஹொண்டா விற்பனையாளர் வலையமைப்புகளூடாக

25 1988 - 2013
Web:www.eseylan.com
facebook www.facebook.com/SeylanBank

செலான் டவர்ஸ், இலக்கம் 90, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: +94 11 2456000
தொலைநகல்: +94 11 2456456
மின்னஞ்சல்: info@seylan.lk
Brand Finance Rating "A" Fitch Rating "A-(lKa)"
நிறுவன பதிவிலக்கம்: PQ 9
செலான் வங்கியானது இலங்கை மத்திய வங்கியின் கண்காணிப்பின் கீழ் செயற்படும் அனுமதிப்பத்திரம் பெற்ற வர்த்தக வங்கியாகும்.

செலான் வங்கி
அன்புடன் அரவணைக்கும் வங்கி

# சுன்னாகம் பிரதேசத்தில் பொலிஸார் தேடுதல்


(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் பொலிஸ் நிலையத்துக் குட்பட்ட பிரதேசத்தில் குற்றச் செயல்களைத் தடுக்கும் நோக்குடன் வீதிச் சோதனைகளிலும் தேடுதல் நடவடிக்கைகளிலும் சுன்னாக பொலிஸார் நேற்று முன்தினம் ஈடுபட்டனர்.

இதன்போது வீதி விதிமுறைகளை மீறிய 25 பேரையும் மது போதையில் வாகனம் செலுத்திய இருவரையும் பொது இடத்தில் வைத்துமது அருந்தி விட்டு பொதுமக்களுக்கு இடையூறு விளைவித்த நால்வரையும் கைது செய்து அவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

அத்தோடு நீதிமன்றத்துக்கு சமுகம் கொடுக்காமல் தலைமறைவாகியிருந்த நிலையில் நீதிமன்றினால் பகிரங்க பிடியாணை பிறப்பிக்கப்பட்ட ஒருவரை உடுவில் பகுதியில் வைத்து கைது செய்த பொலிஸார் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட மேலும் இருவரையும் உடுவில், கும்பிளான் ஆகிய பகுதிகளில் வைத்து கைது செய்துள்ளனர்.

இவர்கள் மூவரையும் நேற்று மல்லாகம் நீதிமன்ற நீதவானின் வாசஸ்தலத்தில் ஆஜர் படுத்தியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள் ளனர். குற்றச் செயல்களைத் தடுப்பதற்காக இவ்வாறான நடவடிக்கைகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படவுள்ளதாக சுன்னாக பொலிஸார் தெரிவித்தனர். (அ-9)




செய்தி : கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை செயற்படுத்த எந்தவித தொழில்நுட்ப உதவிகளையும் வழங்கத் தயார் -நவி பிள்ளை

# கோண்டாவில் வைத்தியசாலைக்கு ஆண் தாதியர்கள் இல்லை

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் பிரதேச வைத்தியசாலையில் ஆண் தாதி இன்மையால் மருந்து கட்டுவதற்கு வரும் ஆண் நோயாளர்கள் வேறு வைத்தியசாலைகளுக்கு அனுப்பப்படும் அவலம் தொடர்வதாக பிரதேச மக்களால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

காயத்திற்கு மருந்து கட்டுவதற்காக இங்கு வரும் ஆண் நோயாளர்கள், மருந்து கட்டுவதற்கு ஆண் தாதி இல்லை என்பதைக் காரணம் காட்டி வேறு பிரதேச வைத்தியசாலைகளுக்கு அனுப்பப்படுவதாகவும் இதனால் இவ்வாறு சிகிச்சை பெற வருவோர் பாரிய சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் குறித்த வைத்தியசாலையில் ஆண் தாதி வெற்றிடம் தொடர்ச்சியாகவே இருப்பதாகவும் இது தொடர்பில் உரிய தரப்பினரிடம் முறையிட்டபோதும் இதுவரையில் எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப் படாததோடு, இவ்விடயம் தொடர்பில் மெத்தனப் போக்கு கடைப்பிடிக்கப்படுவதாகவும் தெரிவிக்கைப்படுகின்றது.

ஆயிரக்கணக்கான மக்கள் சிகிச்சை பெற வரும் இப் பிரதேச வைத்தியசாலையில் காணப்படும் இப் பணி வெற்றிடத்திற்கு ஆண் தாதியர்களை நியமிக்க வேண்டியது மிகவும் அவசியமானதொன்று எனவும் சுட்டிக் காட்டப்படுகிறது. அத்துடன் இவ் வைத்திய சாலைக்கு இரவு நேர காவலாளி நியமிக்கப் படவில்லை எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனவே, மேற்படி ஆளணிப் பற்றாக் குறையுடன் இயங்கும் இவ்வைத்தியசாலையில் உள்ள வெற்றிடங்களை மிக விரைவில் பூர்த்தி செய்வதில் உரிய தரப்பினர் அக்கறை எடுக்க வேண்டும் என கோரப்பட்டுள்ளது. (அ-5)

# அஹிம்சைவழி போராட்டத்தையே முன்னெடுக்க வேண்டியுள்ளது

## இ.த.கட்சி துணை பொதுச்செயலர்

(யாழ்ப்பாணம்)

தியாகி திலீபனின் வழியில் நாங்கள் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டிய தேவை ஏற்பட்டு இருக்கின்றது என வடக்கு மாகாண சபையின் ஆளும் கட்சி உறுப்பினரும் இலங்கை தமிழரசுக் கட்சியின் துணைப் பொதுச் செயலருமான சீ.வீ.கே.சிவஞானம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

தமிழ் மக்களின் இனப் பிரச்சினை தீர்வுக்கான போராட்டம் ஆரம்பத்திலே அஹிம்சையாக இருந்து பின்பு ஆயுதப் போராட்டமாக பரிணமித்து மீண்டும் அஹிம்சை வழியில் போராட வேண்டிய தேவை ஏற்பட்டு இருக்கிறது.

முள்ளிவாய்க்காலில் யுத்தம் மௌனிக்கப்பட்ட பின்னர் இந்த போராட்டம் அஹிம்சை வழியிலே சர்வதேச மயப்படுத்தப்பட்டுள்ளது.

அஹிம்சை என்பதும் எங்களுடைய ஆயுத போராட்டத்தின் ஒரு அம்சமாகவே இருந்திருக்கிறது.

உதாரணமாக தியாகி திலீபன் விடுதலை புலிகளின் அரசியல் பிரிவு பொறுப்பாளராக இருந்தவர். ஐந்து அம்ச கோரிக்கைகளை முன் வைத்து (1987. 09.15) அன்று உண்ணா விரதத்தை ஆரம்பித்து, அதே ஆண்டு 27 ஆம் திகதி ஆகுதி ஆகி, அமைதியான அஹிம்சை வழியில் போராட்டத்தை முன்னெடுத்தவர்.

திலீபனின் வழியில் நாங்கள் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டிய தேவை ஏற்பட்டிருக்கிறது.

ஆயுதம் ஏந்த வேண்டிய நிலை இல்லாமல் அஹிம்சை வலையில் சர்வதேச ஆதரவோடும் சர்வதேச அனுசரணையோடும் அஹிம்சை வழியில் எங்களது போராட்டம் தொடரும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-6)

# குடிநீருக்கான கிணற்றினை அசுத்தம் செய்யும் விஷமிகள்

(கரணவாய்)

கரவெட்டி பிரதேச மக்களின் குடிநீர் தேவையைப் பூர்த்தி செய்கின்ற நன்னீர் கிணற்றினுள் விஷமிகள் தலைமுடிகளை போட்டு கிணற்றை அசுத்தப்படுத்தியுள்ளனர்.

இச்சம்பவம் கடந்த 23 ஆம் திகதி திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளது.


இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கரவெட்டி கிழக்கு கிழவித் தோட்டம் பிள்ளையார் கோயில் கட்டவேலி வயல் வெளியிலுள்ள நன்னீர் கிணற்றினுள்ளே வெட்டப்பட்ட தலை முடிகள் குவியலாகப் போடப்பட்டுள்ளன.

இச் செயற்பாட்டினால் மேற்படி பிரதேச மக்கள் நன்னீரின்றி அலைய வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

தற்போது கிணறு இறைத்தல் செயற்பாடு நடைபெற்று வருகின்ற போதிலும் மேலும் பல தடவைகள் கிணறு இறைத்து துப்புரவு செய்தால் மட்டுமே நன்னீரைப் பெறமுடியும் என அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இக் கிணற்றினுள் முன்னர் ஒரு தடவை விஷமிகளால் ஒயில் ஊற்றப்பட்டு பின்னர் கரவெட்டிபிரதேசசபையினர் அதனை சுத்தம்செய்து கொடுத்தமை குறிப்பிடத்தக்கது. (செ-9-60)




# விண்ணப்பங்கள் மீள் பரிசீலனை

(தும்பளை)

சிறுவர்களை குடும்பங்களுடன் மீளிணைப்பு செய்வதற்காக காணாமற் போனோர் தொடர்பாக ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட விண்ணப்பங்களை மீள்பரிசீலனை செய்யவுள்ளதாக வடமாகாண சிறுவர் நன்னடத்தை பராமரிப்பு சேவை திணைக்களம் அறிவித்துள்ளது.

இதற்கான கடிதமொன்று அனைத்துப் பிரதேச செயலகங்களுக்கும் அனுப்பி வைகக்கப் பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.(அ-9-19)




இலங்கை மின்சார சபையின் வடக்கு மாகாண ஊழியர் நலன்புரி மற்றும் விளையாட்டுச் சங்கத்தின் ஒன்று கூடல் வைபவமும் விளையாட்டுப் போட்டியும் நேற்று யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் இடம் பெற்றது. இதில் இலங்கை மின்சார சபையின் வடக்கு மாகாண பிரதிப் பொது முகாமையாளரும் சங்கத்தின் போசகருமான டி.கே.பி.யு.குணதிலக்க பிரதம விருந்தினராக கலந்து கொண்டு சிறப்பிப்பதையும் விளையட்டு நிகழ்வு இடம் பெறுவதையும் நிகழ்வில் கலந்து கொண்ட ஒரு தொகுதியினரையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- எஸ்.ஆர்.கரன்)

# சிறுநீரக நோய் தாக்கல் காரணங்களை சுகாதார அமைச்சே அறிய வேண்டும்

## அரச மருத்துவ அலுவலகங்கள் சங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

**சிறுநீரக நோயினால் மக்கள் பாதிக்கப்படுகின்றமைக்கான சரியான காரணத்தை சுகாதார அமைச்சே கண்டறிய வேண்டும். தற்போது நாட்டில் காணப்படும் நோய்கள் மற்றும் சுகாதாரக் குறைபாடுகள் தொடர்பில் ஜனாதிபதிக்கு அறிக்கை சமர்ப்பிப்போம் என அரச மருத்துவ அலுவலகங்கள் சங்கம் தெரிவித்துள்ளது.**

மேலும் அதிகாரிகளின் தனிப்பட்ட சுயநலங்களுக்காக அப்பாவி மக்களைக் கொலை செய்யக் கூடாது எனவும் அச்சங்கம் கூறியுள்ளது.

அரச மருத்துவ அலுவலகங்கள் சங்கத்தினால் நேற்று முன்தினம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த செய்தியாளர் சந்திப்பின் போதே மேற்கண்டவாறு கருத்து முன்வைக்கப்பட்டது.

இது தொடர்பாக வைத்தியர் ஆரியரத்ன கருத்து தெரிவிக்கையில்,

இலங்கையில் தற்பொழுது பலர் சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டு வருகின்றனர். இந்நோய் தொடர்பில் எவரும் சரியான காரணத்தை இதுவரையில் கண்டறியவில்லை.

இலங்கையில் குறுகிய காலத்தினுள் பல் வேறுபட்ட இனங்காணப்படாத நோய்களால் பலர் பாதிக்கப்பட்டுள்ளனர். எனினும் சுகாதார அமைச்சோ, வைத்திய உயர் பொறுப்பதிகாரிகளோ இது தொடர்பில் அக்கறை காட்டுவதாகவோ மக்களை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பதாகவோ தெரியவில்லை.

எனவே, இச்செயற்பாடுகளுக்கும் மக்களின் பாதிப்புக்கும் சுகாதார அமைச்சே பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும்.

மேலும் இலங்கையில் ஒவ்வொரு பிரதேசத்திற்குமான வைத்தியர்களின் இடமாற்றம் கட்டாயமானதாகும். எனினும் இதைப் பெரும்பாலான வைத்தியர்கள் விரும்புவதில்லை. தமது தனிப்பட்ட நலன்களுக்காகவும் சுயநலத்திற்காகவும் இடமாற்றங்களைத் தவிர்த்து வருகின்றனர்.

1990 ஆம் ஆண்டில் 90 விகிதமாக இருந்த வைத்திய இடமாற்றமானது 2010 ஆம் ஆண்டிற்குப் பின்னர் 40 வீதத்திற்கு குறைவடைந்துள்ளது.

நகர்ப்புறங்களைப் போன்றே பின்தங்கிய கிராமங்களிலும் வைத்திய சேவைகள் காணப்படாது அக்கிராமங்களிலும் சுகாதார வசதிகள் குறைந்த பகுதிகளிலும் மக்கள் அதிகம் பாதிக்கப்படுகின்றனர்.

எனவே, இவற்றைக் குறைக்க வேண்டுமாயின் வைத்தியர்கள் சிந்தித்து பொறுப்புடன் செயற்பட வேண்டும்.

சுகாதார அமைச்சின் சட்ட திட்டங்கள் சரியானதாகவும் கட்டாயமான விதிகள் பிர யோகிக்கப்படுவதாகவும் இருக்குமாயின் சுகாதாரத் துறையில் இவ்வாறான சிக்கல்கள் ஏற்படாது. எனவே, இவை தொடர்பாக அறிக்கையொன்றை தயாரித்து ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப் போவதாகவும் அவர் தெரிவித்தார். (அ-2)

# நவி அம்மை கூறும் விடயங்களை கவனத்திலெடுக்க போவதில்லை

## வெளிவிவகார அமைச்சின் செயலாளர்

மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் குறித்து ஆராய இலங்கையில் உள்நாட்டு ரீதியில் செயற்பாடு ஒன்று முன்னெடுக்கப்படாவிடின் சுயாதீன சர்வதேச விசாரணை பொறிமுறை ஊடாக சர்வதேசம் தனது கடமையை செய்யும் என்று கூறுவதற்கு ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளைக்கு எந்தவிதமான உரிமையும் இல்லை என்று வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கருணாதிலக்க அமுனுகம தெரிவித்தார்.

மேலும் நவநீதம்பிள்ளை கூறும் விடயத்தை ஏற்பதற்கான கடப்பாடு இலங்கைக்கு இல்லை என்றும் நவநீதம்பிள்ளை தனது கருத்தையே வெளியிட்டுள்ளார் என்றும் அவர் குறிப்பிட்டார்.

உள்நாட்டு ரீதியில் குற்றச்சாட்டுக்கள் குறித்து ஆராயும் செயற்பாடு ஒன்று எதிர்வரும் 2014 ஆம் ஆண்டு மார்ச் மாதத்துக்குள் முன்னெடுக்கப்படாவிடின் சுயாதீன விசாரணை பொறிமுறை ஊடாக சர்வதேசம் தனது கடமையை செய்யும் என்று ஐக்கிய நாடுகளின் மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் வாய்மூல அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

இலங்கையில் சர்வதேச விசாரணை பொறிமுறை ஒன்று முன்னெடுக்கப்படும் என்று கூறுவதற்கு ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணையாளருக்கு எந்தவிதமான உரிமையும் கிடையாது.

ஆனால் எந்தவொரு விடயம் குறித்தும் கருத்துக்களை நவநீதம்பிள்ளை வெளியிடலாம். கருத்துக்களை வெளியிடும் உரிமை அவருக்கு உள்ளது. நாம் கூட யாதொரு விடயம் குறித்தும் கருத்துக்களை வெளியிடலாம்.

ஆனால் சர்வதேச விசாரணையை முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் கூற முடியாது. இதேவேளை ஐக்கிய நாடுகளின் மனித உரிமை ஆணையாளர் கூறும் விடயங்களைக் கேட்கவேண்டிய கடப்பாடு இலங்கைக்கு இல்லை. இந்த விடயத்தையும் தெளிவாக குறிப்பிட வேண்டும் என்றார். (அ-2)

# நூல் வெளியீடும் கருத்துப் பகிர்வும்

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தினால் உள்ளூராட்சி தொடர்பான ஏழு நூல்களின் வெளியீடும் கருத்துப் பகிர்வு நிகழ்வும் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நாவலர் வீதியிலமைந்துள்ள தியாகி அறக்கொடை நிலையக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் இயக்குநர் கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய மும்மொழிகளிலும் வெளியிடப்படும் இந்நூல் உள்ளூராட்சி உறுப்பினர்களுக்கு இலவசமாக வழங்கப்படவுள்ளது. (செ-7)

# நீர் விநியோக கலந்துரையாடல்

(கிளிநொச்சி)

இரணைமடு குளத்திலிருந்து நீர் விநியோகம் தொடர்பான அவசர கலந்துரையாடலொன்று இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு கரைச்சி பிரதேச சபை கேட்போர் கூடத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் கிளிநொச்சி மாவட்ட விவசாய சங்கங்கள், விவசாய சம்மேளனங்கள், கமக்கார அமைப்புக்கள் மற்றும் விவசாயிகளைத் தவறாது கலந்து கொள்ளுமாறு சிறீதரன் எம்.பி.கேட்டுக்கொண்டுள்ளார்.

மேலும் இந்தக் கலந்துரையாடலில் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள புத்திஜீவிகள், வர்த்தகர்கள் போன்றோரையும் கலந்துகொண்டு ஆக்கபூர்வமான கருத்துக்களை முன்வைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-6)

# சந்தேக நபருக்கு விளக்கமறியல்

ஒட்டுசுட்டான் பகுதியில் கத்திவெட்டுடன் தொடர்புடைய சந்தேக நபர்களை விளக்கமறியலில் வைக்குமாறு முல்லைத்தீவு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஒட்டுசுட்டான் பகுதியில் தமது மாமனாரையும் மைத்துனனையும் கத்தியால் வெட்டியும் உருட்டுக் கட்டையால் அடித்தும் படுகாயப்படுத்திய நபர்கள் இருவரை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா உத்தரவிட்டுள்ளார்.

காயப்பட்டவர் அநுராதபுரம் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் அவருக்கு கழுத்து, நெஞ்சு பகுதிகளில் கடும் காயங்களை குற்றவாளிகள் விளைவித்துள்ளதாகவும் பொலிஸார் மன்றில் தெரிவித்தனர்.

காணி பிரச்சினை ஒன்று சம்பந்தமாக வாக்குவாதத்தில் ஈடுபட்ட வேளையிலேயே இச்சம்பவம் நிகழ்ந்துள்ளது. (ம)

# முதியோர் தின விழா

(குருமன்காடு)

சர்வதேச முதியோர் தினத்தை முன்னிட்டு வவுனியா கூமாங்குளம் முதியோர் சங்கம் நடத்தும் முதியோர் தினவிழா எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 3 ஆம் திகதி வியாழக்கிழமை கூமாங்குளம் சித்திவிநாயகர் வித்தியாலயத்தில் கிராம அலுவலர் துசிதா புஸ்பராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் எம்.கே.பந்துல ஹரிஸ்சந்திர கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக வவுனியா மாவட்ட முதியோர் சமாசத்தின் தலைவர் வைத்தியர் க.இராமச்சந்திரன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். கௌரவ விருந்தினர்களாக வவுனியா பிரதேச செயலர் கா.உதயராசா, வெங்கலச் செட்டிகுளம் பிரதேச செயலர் நா.கமலதாசன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ம-250)

# வவுனியாவில் மஞ்சள் பயிர்ச்செய்கை



வவுனியாவில் மஞ்சள் பயிர்ச் செய்கை மேற்கொள்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக வவுனியா விவசாய திணைக்களத்தின் பிரதி பணிப்பாளர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

விவசாய திணைக்களத்தினால் பரீட்சார்த்த முறையில் மஞ்சள் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டு அது வெற்றியுமளித்துள்ளது.

இப்பயிர்ச்செய்கை தொடர்பாக ஏற்றுமதி அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகள், விவசாய போதனாசிரியர்கள் உட்பட 25 விவசாயிகள் இப்பயிற்சியை நிறைவு செய்துள்ளனர்.

இப்பயிர்ச்செய்கை பம்பைமடு, மாந்தை, பாலமோட்டை, நெடுங்கேணி முதலான இடங்களில் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் இப்பயிர்ச் செய்கைக்கு ஏற்றுமதி அதிகாரசபையின் உதவியும் நாடப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்தார். (அ-250)



## தம்பியுடையான்...



தம்பி எழுந்தான்
பள்ளி செல்லவென - தந்தை
பையில் எடுத்த காசை
பெப்சி சோடாவிலும்
கொத்து ரொட்டியிலும்
கொட்டிவிட்டு
வாயில் கொள்ளி வைத்தபடி
கடைப்பக்கம் ஒதுங்குகின்றான்
புகையில் மூழ்குகின்றான்
அவன் வாழ்வு புகைப்பதறியாமல்

மாவை.நா.கஜேந்திரன்

## வரலாறு படைத்திடுவீர்

காரிருள் சூழ்ந்த வாழ்வை
களைந்திட வந்தோம் என்று
களமிறங்கி நின்றவர்கள்
காணாமல் போய்விட்டார்
கண்ணெதிரே முப்பத்தெண்மர்
களிப்புடன் வலம்வந்து
கையசைத்து மகிழ்கின்றார்
வடபுலத்தின் சொத்தாக
வந்துதித்த முத்துக்களே
கூடிழந்த குருவியாகி
குலைந்திட்ட எம் வாழ்வதனை
குதூகலிக்கச் செய்வதற்கு
கால்கோள் போட்டிடுவீர்
வாழ்வியலும் வதிவிடமும்
தொலைத்துவிட்ட எம்மவரின்
வாழ்வதனை மேம்படுத்தி
வரலாறு படைத்திடுவீர்

ந.சந்திரலிங்கம், அச்சுவேலி

## தூது விடுகிறேன்

கனவுகளுக்குள் அகப்பட்ட
உன் நினைவுகளை
நெஞ்சோடு பொத்திப்பொத்தி
உன் நினைவோடு வாழ்கிறேன்
இனிமையான உன் பேச்சை
நான் ரசித்திட
உன்னிடம் நான் வேண்டுவது
என்னுடன் நீ வேண்டும்
தூரத்தில் இருந்து கொண்டு- நீ
என்னை எண்ணுவதேயில்லையா?
ஏன் எமக்குள் இடைவெளி
எடுத்துவிடுவோம் அதை
மாலை தொடுத்திட்டால்
எவர் வரினும் பிரிந்திடோம்
அதுவரை
இதயத்தால் இணைந்திருப்போம்!!

நவீனா . கொக்குவில்

## தத்தளிப்பு

உணர்வுகளை
உள்ளத்தினுள்ளடக்கி
உதடுகளை மூடி
உறவுகளையிழந்து
மிஞ்சியவர் அஞ்சி
ஊமைகளாய் வந்தனர்
மாட்டுப்பட்டனரா?
மாண்டுவிட்டனரா?
மீட்கப்பட்டனரா?
தொலைந்த வாழ்வை
மீட்பதற்காய்
பூட்டப்பட்ட
இரும்புத் திரைக்குள்ளிருந்து
வழிதேடுகின்றனர்!
நேரம் நாளாகி
மாதம் வருடமாகி
ஆண்டு காலமாகி கழிகின்றது!
ஒளிர்கின்ற எதிர்காலம்
அகப்பட்ட சுழிக்குள்
மீள்வதற்காய்
தத்தளிக்கின்றனர்
தடுப்புச் சுவர்களுக்குள்ளிருந்து

கொட்டடி கோமகன்
யாழ்ப்பாணம்

## வல்லரசுகளே...

வல்லரசுகளே எங்களை
வாழவிடுங்கள்...
வல்லரசுகளே உங்கள்
வல்லாண்மையை விடுங்கள்...
வளர்ந்த நாடுகளே உங்கள்
வர்த்தக வஞ்சகத்தை விடுங்கள்...
உங்களின் கைத்தொழில் பொருட்களையெல்லாம்
எங்களிடத்தில் சந்தையாக்குகிறீர்கள்
எங்களின் விளைபொருட்களையெல்லாம்
வில்லா விலைக்கு வாங்குகிறீர்கள்
நீங்கள் அணு ஆயுதங்களை
நல்லாய் அடுக்கி வைக்கலாம்...
நாங்கள் சக்தித் தேவைக்காக
அணு உற்பத்தி செய்தால் பிழை;தடை...
நீங்கள் செய்வது யுத்த உற்பத்தி;
நாங்கள் செய்வது ஆக்க உற்பத்தி;
உங்களின் பொருள் உதவியெல்லாம்
எங்களின் உழைப்பை உறிஞ்சிவிடும்...
முதலிட்டு உம் ஊழியரைக் கொண்டே
முனைந்து திட்டங்களை முடிப்பீர்கள்...
நிபுணர் கொடுப்பனவு, சம்பளமென்றே
உறிஞ்சி எடுத்துவிடுங்கள் அபிவிருத்தி நிதியை;
ஒரு கையால் கொடுப்பீர்கள் உதவியென்று...
மறுகையால் எடுப்பீர்கள் பராமரிப்பென்று

புத்தூர் கு.குகன்

# கவிதைக் கலசம்



# மௌனத்தின் தேடல் - 171

## அன்புச் சகோதரா

முட்கம்பி வேலிக்குள்- உன்னை
முடக்கி விடலாமென
கனவு காண்பவனை அடக்கிட- உன்
விழிக்கூர்மை போதுமடா
நீயே உலகின் நீதிபதியாய்த்
தீர்ப்பெழுதிட...

வீ.வினிஸ்
சாந்தை

## வலிகள்

நெடுநாளாய் தொடரும்- எமது
வாழ்க்கை எனும் வட்டம்- இந்த
முள்வேலிகளில் இருந்து
வீழ்வது எப்போது...?

உதயம் ரூபன்
நயினை

## காப்பரண்

காவல் முட்கம்பி
வேலியருகே நிற்கும்
மகவே! நீ தமிழரின்
காப்பரணாய் காக்கும்
வீரனாய் வாழும்
நாளின்வரை
வாழ்த்திடுவோம்!

சி.ஜெயருக்ஷன்
சாவகச்சேரி

## விடிவு கிடைத்திடுமா?

முள்ளுக் கம்பிகளை மட்டுமே பார்த்து
பழகிய கண்களில் இனியாவது
நல்ல எதிர்காலம் தென்படுமா?

றூபி விமலதாஸ்
நவாலி

## தேடல்

ஓ மானிடா!
அதோ
ஒரு நிழற்படம்
உன்னுள் என்னை
மனிதத்தை
தேட வைக்கிறது

க.ஞானசீலன்
கொற்றாவத்தை

## ஊனம்

கம்பிச் சுருளுக்குள்
உன் குறும்புத்தனம்
ஊனம் என
முத்திரை குத்துமுன்
துணிந்து தூக்கி
எறிந்துவிடு
நாளை உன் பெயர் சொல்லி
சமூகம் வாழும்

யோ.கீர்த்திகா
மிருசுவில்

## யாரிடம் சொல்வோம்

உடன்பிறவாத உறவே
உந்தன் முகத்தில்
பால் மணம் மாறவில்லை
யார் செய்த பாவம்
ஏன் உனக்கு இந்தத்
தண்டனை
யாரிடம் சொல்வோம்
என் அருமை உறவே

ஆ.ரூபகரன்
மட்டுவில்

## முயன்றிடு

சிறுவனே முட்கம்பிகள்
முட்டப் பார்க்கிறது- நீயோ
முந்திவிடப் பார்க்கிறாய்
உன்னைப் பார்ப்பதற்கு
உன் அன்னை வருவாளோ?

க.கபில்ஸ்ரன்

## ஏதிலி

பாலகனே
ஏன் இந்த மௌனம்
உனக்கும் உலகில்
வாழ்வுண்டு
சிந்திக்காதே
செயலில் காட்டு
பெற்றவர் எங்கே
ஏதிலியா நீ
ஆண்பிள்ளை என்றாலும்
இனியும் இல்லை
இவ்வுலகில் இப்படி
ஒரு வார்த்தை

யு.சோபியா
விசுவமடு

## எதிர்பார்ப்பு

அம்மா என்னை
தவிக்க விட்டு இங்கு
சென்று விட்டாய்?
நீ எனக்காக வந்து
இந்த முள்ளுக் கம்பியை
எடுத்துவிடம்மா எனக்கு
கிழித்து விடப்போகின்றது

ச.புவித்ரா
சாவகச்சேரி

## காலம் கனியும்

காலம் காலமாய் கம்பிக்குள்
இருப்போம் எனக்
கனவு காண்கிறார் சிலர்
என்றோ ஒருநாள்
கம்பியை விட்டு
வெளியே வருவோம்
என்பது உறுதி

கணபதி தாசன்

## முனைப்போடு முறுவலிக்கும்

எட்டிப் பார்க்கின்றாயா தம்பி!
ஒட்டிப் பார்க்கின்றாயா தம்பி!
ஏழ்மை நிலை வந்தாலும்
குறுக்கு வழியில் முன்னேற நினைப்பது
தவறு என்பதைப் புரிந்துகொள்...
ஏணிப்படியாக உன் உழைப்பை
ஆணித்தரமாய் உயர்த்திக்கொள்
அனைவர் பார்வையும் உன்பக்கம்
முனைப்போடு முறுவலிக்கும்

வ.ச.செல்வராசா
திருநாவலூர்

## நாளை நிலைமை மாறும்

முட்கம்பி வேலிக்குள்
முடங்கிக் கிடக்கும் சிறுவர்
எட்டிப் பார்க்கின்றார்
எப்படித் தப்பிக்கலாமென்று
தம்பியரே! கவலையை விடுங்கள்
நம்பிக்கையோடு இருங்கள்
நாளை நிலைமை மாறும்
நல்ல செய்தி வந்து சேரும்

துரை, தென்மட்டுவில்

## கண்களில் விடியலுக்கான தேடலோ?

சிறுவனே நீ பூச்செடிக்கு
பின்னால் நின்றாலும்
வறுமையின் வரட்சியிலும்
வெறுமையின் வேதனையிலும்
முட்கம்பிகளுக்கு பின்னால் நிற்கும்
எம்மினிய தமிழினத்தின்
நினைவுகளே விடியல் கிட்டும்
வரை வேதனை தந்து கொண்டிருக்கும்

க.அபர்ணா
வட்டுக்கோட்டை

# சங்குநாதம் மௌனத்தின் தேடல் -172



### அன்பு வாசகர்களே !

உங்கள் எண்ணத்தில் தோன்றும் கவிதைகள் மற்றும் வியாசர் பதிலுக்கான கேள்விகளை

ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.



எனும் முகவரிக்கு 03.10.2013 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளுக்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

சு.ஜெயரூபன், பருத்தித்துறை

அன்பின் வியாசரே!

பெண்களே இல்லாத ஊரில் நான் வாழ ஆசைப்படுகிறேன். என் ஆசை நிறைவேறுமா?

பெயரில் வெற்றியை வைத்திருக்கும் நீர் வாழ்வில் வெற்றி பெறவில்லை போலும்? உமது ஆசை நிராசையாகி விடுவது உண்மை.

கணபதிதாசன், கட்டைக்காடு

அன்பின் வியாசரே!

போனைக் கையிலெடுத்தால் போவோர் வருவோர் தெரியாமல் பேசும் பெண்க ளைப் பற்றி?

யாழ். கஸ்தூரியார் வீதியில் நடந்த உண்மை சம்பவமொன்று. ஒரு பெண் தொலைபேசியில் பேசிக் கொண்டே வந்து சாக்கடைக்குழாயில் தவறி வீழ்ந்து விட்டார். கண்டவர்கள் அந்தப் பெண்ணுக்கு ஏதும் ஆகிவிட்டதென எண்ணி பதறியடித்து ஓடிச் சென்றால் அப்பெண் குழிக்குள் வீழ்ந்தும் தொலைபேசி உரையாடல் நின்று விடவில்லை. தூக்கச் சென்றவர்கள் தூற்றிச் சென்றார்கள். தொலை பேசி உரையாடல் தொடர்ந்து கொண்டே இருந்தது.

**அன்பு வாசகர்களே....!**

**உங்கள் கேள்விகளை**
**ஆசிரியர், வியாசர் பதில்கள்**
**இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி , யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்**

எஸ்.விஜிதபாமா , கோண்டாவில்

அன்பின் வியாசர் அண்ணாவே!

நீங்கள் காதலித்து திருமணம் முடித்தால் உங்களுக்கு இதயம் இல்லையென்று நினைக்கிறேன். ஏன் என்றால் காதலிப்பவர்கள் கூறுவார்கள் என் இதயம் என்னிடம் இல்லை அதை உன்னிடம் தந்து விட்டேன் என்று.

பேச்சுக்கு சொல்லுறதையெல்லாம் பெரிசா எடுக்கக் கூடாது.

நீங்கள் பிரதம விருந்தினராகப் போயிருக்கிறீர்களா?




ச.புவித்ரா, சாவகச்சேரி

அன்பின் வியாசரே!

இன்றைய 21 ஆம் நூற்றாண்டில் வாழ உண்மை, நேர்மை முக்கியமா? அல்லது பணம் முக்கியமா? இதில் எதை செய்தால் வாழ்வில் வெற்றி கொள்ளலாம் வாசகர் அண்ணா?

காலச்சக்கரத்தில் பணம் வரும் போகும். உண்மையும் நேர்மையும் ஒருவரிடமிருந்து தவறினால் அதை மீண்டும் நிலை நாட்டிவிட முடியாது.

போனைக் கையிலெடுத்தால் போவோர் வருவோர் தெரியாமல் பேசும் பெண்க ளைப் பற்றி?

கே.எஸ்.சிவஞானராஜா, கொக்குவில்

அன்புள்ள வியாசரே!

நீங்கள் பிரதம விருந்தினராகப் போயிருக்கிறீர்களா?

ம்ம்ம்ம்... பலத்த காற்றடிக்கும் இடத்தில் மங்கல விளக்கேற்ற நான் பட்ட பாடிருக்கே சொல்லிமாளாதப்பா...

ரி.விஜி

அன்பின் வியாசரே!

நாட்டில் இப்போது நட்பெனும் போர்வையில் காதலை கொச்சைப்படுத்துகிறார்கள். இதனால் நல்ல நட்பும் களங்கப்படுகிறது. இதில் நல்ல நட்புக்கும் காதலுக்கும் என்ன வித்தியாசம் நீங்கள் கூறுங்கள்?


உள்ளதைக் கொடுத்தால் அது நட்பு. உள்ளத்தைக் கொடுத்தால் அது காதல்.

***கொஞ்சம் சிரிங்கப்பா...***

**ஜோக்ஸ்**

"அன்பே! நம்ம காதலைப் பற்றி உங்க வீட்டுல சொல்லிட்டியா?"

"என் வீட்டுல சொல்லிட்டேன். இன்னும் புகுந்த வீட்டுல சொல்லலை."



வி.பிரான்சிஸ், காவலூர்

அன்பின் வியாசர்!

மறதிக்கு மருந்து என்ன?

*ஐயோ பிரான்சிஸ் இந்தக் கேள்வியை இத்துடன் மூன்று தடவை கேட்டு விட்டீர்களே! ஒரே பதிலை மறுபடி மறுபடி கூற உம்மை விட மறதி எனக்கு அதிகமாச்சே.*

வே.வே. அகிலேஸ்வரன் மருதங்கேணி

வியா மாமா!

சொர்க்கம், நரகம் என்று உண்டா?

***நீர் இன்னமும் திருமணம் முடிக்கவில்லை போலும். உமக்கு திருமணம் முடிந்தால் தெரியும் சொர்க்கம் எது நரகம் எது என.***

# வாக்குசீட்டு மீட்கப்பட்ட விவகாரம்; விசாரணைக் குழு விரைகிறது

புத்தளம் வாக்கு எண்ணும் நிலைய மொன்றிலிருந்து வாக்குச் சீட்டுகள் அடங்கிய பொதிகள் மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பில் புத்தளம் உதவி தேர்தல் ஆணையாளர் சுமித் சந்தன உடன் அமுலுக்கு வரும் வகையில் கொழும்புக்கு இடமாற்றப்பட்டுள்ளார்.

மேற்படி சம்பவம் தொடர்பான விசாரணைகளுக்காகவே அவர் கொழும்பிலுள்ள தேர்தல் திணைக்களத்திற்கு திருப்பி அழைக்கப்பட்டதாக மேலதிக தேர்தல் ஆணையாளர் ரத்னாயக்க தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து விசாரிப்பதற்காக முன்னாள் சிரேஷ்ட தேர்தல் அதிகாரி சுமணசிறி தலைமையிலான மூவரடங்கிய குழு வொன்றை தேர்தல் ஆணையாளர் நியமித்துள்ளார்.

இக்குழு நேற்று முன்தினம் புத்தளத்திற்கு விஜயம் மேற்கொண்டு விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக ரத்னாயக்க குறிப்பிட்டார்.

இந்தக் குழுவில் குருணாகல் மேலதிக உதவி தேர்தல் ஆணையாளர் நாமல் தலங்கம, மத்திய மாகாண பிரதி கணக்காளர் அப்துல் காதர் ஆகியோரும் அங்கம் வகிக்கின்றனர். இவர்கள் 3 தினங்கள் அங்கு தங்கியிருந்து சம்பந்தப்பட்டவர்களை சந்தித்து தகவல்கள் திரட்டவுள்ளனர்.

வடக்கு ,வடமேல் மற்றும் மத்திய மாகாண சபைகளுக்கான தேர்தல் கடந்த 21 ஆம் திகதி நடைபெற்றது. ஆனால் தேர்தல் முடிபுகள் அறிவிக்கப்பட்ட பின்னர் கடந்த செவ்வாயன்று புத்தளம் புனித அன்ரூ பாடசாலையில் இருந்து வாக்குச்சீட்டுகள் கொண்ட இரு மூடைகள் கண்டுபிடிக்கப்பட்டன.

இந்தச் சம்பவத்தினால் பெரும் பரபரப்பும் குழப்பமும் ஏற்பட்டது. வாக்குகளை மீள எண்ணுமாறு தோல்வியடைந்த வேட்பாளர்கள் கோரியதுடன் சிலர் உண்ணாவிரதத்திலும் ஈடுபட்டனர். இதனையடுத்து மேற்படி சம்பவம் தொடர்பாக தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய ஸ்தலத்திற்கு சென்று விசாரணைகளை மேற்கொண்டார்.

இதுதொடர்பில் நடத்தப்பட்ட ஆரம்ப கட்ட விசாரணைகளின் பிரகாரம் தேர்தல் ஆணையாளரினால் புத்தளம் மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் சுமித் சந்தன கொழும்புக்கு இடமாற்றப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் முடிவடையும் வரை இவர் கொழும்பு பிரதான அலுவலகத்தில் இருப்பார். இவருக்குப் பதிலாக புத்தளம் மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளராக சமந்த ஜெயசிங்க நியமிக்கப்பட்டுள்ளதாக ரத்னாயக்க தெரிவித்தார்.

இதேவேளை மேற்படி சம்பவம் தொடர்பாக 5 பேரடங்கிய குழுவொன்றை நியமிக்குமாறு தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய பொதுநிர்வாக அமைச்சின் செயலாளர் பீ.பீ. அபேகோனிடம் கோரியுள்ளார். இதில் ஓய்வுபெற்ற முன்னாள் தேர்தல் அதிகாரி ஒருவரும் புத்தளம் மாவட்ட தேர்தல் அதிகாரி ஒருவரும் தேர்தல் ஆணையாளர் சார்பில் நியமிக்கப்படவுள்ளனர். (அ-2)

# தங்க பிஸ்கட் கடத்தியவர் கைது

(கொழும்பு)

சுமார் 75 இலட்சம் ரூபா பெறுமதியான தங்க பிஸ்கட்டுகளை குதவாயினுள் மறைத்துக் கொண்டு செல்ல முற்பட்ட நபர் ஒருவர் விமான நிலைய சுங்க அதிகாரிக ளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

9 டபிள்யூ 225 ரக ஜெட் எயார் வேஸ் க்கு சொந்தமான விமானம் மூலம் நேற்று முன்தினம் அதிகாலை 5.30 இற்கு விமான நிலையம் வந்த நிக்கவெரட்டிய பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவரே இவ் வாறு கைது செய்யப்பட் டுள்ளார்.

விமான நிலைய சுங்க அதிகாரி கொண்ட தலைமையிலான குழுவினர் இவரை சோதனையிட்ட போதே தங்க பிஸ்கட்டுகள் மறைத்து வைக்கப்பட்டிருந் தமை கண்டுபிடிக்கப்பட்டது.

இவரிடமிருந்து சுமார் ஆயிரத்து 500 கிராம் கொண்ட தங்க பிஸ்கட்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளன. இம்மாதத்தில் மட்டும் 7 நபர்கள் தங்க் கடத்தலில் ஈடுபட்டு பிடிபட்டனர். இந்நபர் எட்டாவது ஆளாக நேற்று முன்தினம் கைதானார். (அ-2)

# புதுச்சேரிக்கு சென்ற இலங்கை பிரதிநிதிக்கு தமிழ் அமைப்புகள் கடும் எதிர்ப்பு

(சென்னை)

இந்தியாவில் இடம்பெறும் வர்த்தகசபைக் சவட்டத்தில் பங்கேற்க, புதுச்சேரி சென்ற இலங்கை பிரதிநிதிக்கு தமிழ் அமைப்புகள் கடும் எதிர்ப்பு தெரிவித்ததில் அங்கு பரபரப்பு ஏற்பட்டது.

இலங்கையில் நடைபெறவுள்ள உலகளாவிய வர்த்தக கண்காட்சிக்கான அழைப்பு விடுப்பதற்காக இலங்கையைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவர் நேற்று முன்தினம் புதுச்சேரி சென்றுள்ளார்.

இலங்கை வர்த்தகர் வந்திருக்கும் தகவல் கசிய ஆரம்பித்ததால் அவருக்கு தமிழ் அமைப்புகள் கடும் எதிர்ப்பு தெரிவித்து அவர் தங்கியிருந்த விடுதி முன்பு திரண்டனர்.

நிலைமை சிக்கலடைந்ததைத் தொடர்ந்து சென்னையிலுள்ள இலங்கை தூதரக அதிகாரிகளுக்கு இலங்கை வர்த்தகர் தகவல் தெரிவித்தார். இதன்பின்னர் எந்த நிகழ்விலும் கலந்து கொள்ள வேண்டாம். உடனடியாக நாடு திரும்புமாறு இலங்கை அதிகாரிகள் அவருக்கு தெரிவித்துள்ளனர்.

அதன்படி நிகழ்ச்சிகளை இரத்து செய்து விட்டு பிற்பகல் 2.10 மணிக்கு இலங்கை வர்த்தக பிரதிநிதி சென்னைக்கு புறப்பட்டு சென்றார். (அ-2)

# ஐ.தே.கட்சியில் அடுத்த வாரத்திற்குள் மாற்றம்

ஐக்கிய தேசியக் கட்சியில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக அடுத்த வாரத்துக்குள் இறுதித் தீர்மானத்தை எடுப்பது தொடர்பில் அந்த கட்சி கவனம் செலுத்தியுள்ளது.

அடுத்த மாதம் முதல் வாரத்தில் கட்சியின் தொழிற் சங்க கூட்டத்தில் கட்சியில் ஏற்படுத்தப்படவுள்ள மாற்றங்கள் குறித்த யோசனைகள் முன்வைக்கப்படவுள்ளன. மேற்கு, தெற்கு மற்றும் ஊவா மாகாணங்களுக்கான தேர்தலில் கட்சியின் மூத்த உறுப்பினர்கள் போட்டியிடுவது குறித்து அவதானம் செலுத்தப்படவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ-2)

# இலங்கையின் செயற்பாட்டுக்கு பல நாடுகள் ஆதரவாம்

இலங்கையின் ஐக்கியம் மற்றும் நல்லிணக்கத்துக்கு ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக்குழுவில் அங்கம் வகிக்கும் ஆசியா, ஆபிரிக்கா மற்றும் லத்தீன் அமெரிக்காவைச் சேர்ந்த பல நாடுகளின் ஆதரவு கிடைத்துள்ளதாக ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கை நிரந்தரவதிவிடப் பிரதிநிதியின் அலுவலகம் தெரிவித்துள்ளது.

மனித உரிமை ஆணையாள்ர் நவநீதம் பிள்ளையின் அறிக்கை மற்றும் அது தொடர்பாக இலங்கை அளித்த பதில்களை கவ்னத்தில் கொண்டு மீள்குடியேற்றம், புனர்வாழ்வு, காணிப் பிரச்சினைகளை தீர்த்தல், கண்ணிவெடிகளை அகற்றுதல் உட்பட பல விடயங்கள் சம்பந்தமாக இந்த நாடுகள் தமது பாராட்டை தெரிவித்துள்ளதாகவும் அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

எகிப்து, பிலிப்பைன்ஸ், குவைத் ஆகிய நாடுகள் மட்டுமன்றி பாகிஸ்தான், ரஷ்யா, கியூபா, பொலிவியா, வெனிசுலா, பெலாரஸ் ஆகிய நாடுகளும் இது சம்பந்தமாக பாராட்டியுள்ளதாக ஐ.நாவுக்கான இலங்கையின் வதிவிட பிரதிநிதியின் அலுவலகம் மேலும் குறிப்பிட் டுள்ளது. (அ-2)

# லயன்ஸ் ஏற்பாட்டில் சேவைத் திட்டம்

லயன் எஸ்.சதீஸ்குமார், லயன் பெண்மணி ரோகினி ஆகியோரின் அனுசரணையுடன் ஊர்காவற்றுறை லயன்ஸ் கழகம் ஏற்பாடு செய்துள்ள சேவைத் திட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யா/வேலணை சரஸ்வதி வித்தியாசாலையில் இடம்பெறவுள்ளது.


இந்நிகழ்வில் முதியோரைக் கௌரவித்து புதிய உடைகள் வழங்குதல், கர்ப்பிணித் தாய்மார்களுக்கு சத்துணவு வழங்கல், மரம் நடுகையும் மரம் வழங்கலும் மாணவர்களுக்கு பற்பசை, தூரிகை வழங்கல் ஆகிய சேவைத் திட்டங்கள் இடம்பெறவுள்ளன. (செ)



# சிறுவர் அரங்கம்

589

## கஞ்சனுக்குக் கிடைத்த பரிசு



ஆக்ரா நகரில் ஒரு மனிதன் வசித்து வந்தான். அவன் மிகப்பெரிய செல்வந்தனாக இருந்தும் கருமியாக இருந்தான். பலர் அவன் தனக்கு உதவி புரிவான் என எண்ணி அவனைத் தேடிச்செல்வர். ஆனால், அவனோ யாருக்கும் எதையும் தரமாட்டான். அவர்கள் புன்னகைத்துச் செல்லுமாறு சமாளித்து பொய்யாக எதையாவது கூறுவான்.

ஒருநாள், ராய்தாஸ் என்ற இளம் கவிஞன் அவனைக் காணச் சென்றான். அவனை புன்முறுவலோடு வரவேற்று, உனக்கு என்னால் என்ன உதவி செய்ய முடியும்? எனக் கேட்டான் செல்வந்தன்.

நான் கவிதைகள் புனைந்துள்ளேன். உங்களிடம் அவற்றைப் பாடிக் காண்பிக்க ஆசைப்படுகிறேன் என்றான் ராய்தாஸ்.


என்ன அற்புதம்! எனக்குக் கவிதைகள் என்றால் மிகவும் பிடிக்கும். அதனால் அவற்றைப் படித்துக் காட்டு என்றான் கருமி.

ராய்தாஸின் கவிதைகளை மிகவும் ரசித்துக் கொண்டான். அதிலும் தன்னைப் பணத்தின் அதிபதியான குபேரனோடு ஒப்பிட்டுப் பாடிய பாடல் செல்வந்தனை மிகவும் கவர்ந்தது.

உன்னுடைய கவிதைகளைக் கேட்டு நான் பூரிப்படைகிறேன். உன்னுடைய திறமைக்கு நான் பரிசளிக்க விரும்புகிறேன். தயவுசெய்து நாளை வந்து பரிசுகளைப் பெற்றுச்செல் என்றான் கருமியாகிய செல்வந்தன்.

ராய்தாஸ் மிகவும் மகிழ்ச்சி அடைந்தான். அவன் சரியென தலையாட்டி விட்டுச் சென்றான். ஆனால், மறுநாள் செல்வந்தனைக் காணச் செல்லும் போது, அவன் அப்போதுதான் ராய்தாஸைச் காண்பது போல் நடித்தான்.

நான் உங்களை நேற்று கண்டு கவிதைகளால் பாடினேன். இன்று என்னைப் பரிசுகளைப் பெற்றுச் செல்ல வரச் சொன்னீர்கள் என்றான் ராய்தாஸ்.



ஓ! ஆமாம்! நீ ஒரு நல்ல கவிஞன்தான். ஆனால், உனக்கு பொதுஅறிவு இல்லை. உனக்குப் பரிசுகளை அளிக்க விரும்பியிருந்தால் நான் நேற்றே உனக்கு அளித்திருப்பேன். உன்னைப் புண்படுத்தக் கூடாது என்பதால்தான் இன்று வரச் சொன்னேன். என்னை நீ வீணாகத் தொல்லை செய்கிறாய் என்றான் செல்வந்தன்.

ராய்தாஸ் இதனைக் கேட்டு சோகமுற்றான். ஆனால், அவனால் ஒன்றும் செய்ய இயலவில்லை. அதனால் அங்கிருந்து சென்றுவிட்டான். அவன் வீடு திரும்புகையில் எதிரே குதிரையில் பீர்பால் வருவதைக் கண்டான்.

பீர்பால் அவர்களே! தாங்கள்தான் நான் என்ன செய்ய வேண்டும் எனச் சரியாகக் கூறவல்ல தகுதியுடைய மனிதர் என்றான்.

என் வீட்டிற்கு வந்து விவரமாகக் கூறு என்றார் பீர்பால்.

ராய்தாஸ் பீர்பாலிடம் நடந்தது அனைத்தையும் கூறினான்.

அச் செல்வந்தன் செய்தது தவறு. அவனுக்கு நல்ல பாடம் புகட்ட வேண்டும். சரி, உனக்கு நம்பிக்கையான நண்பன் யாராவது உள்ளனவா சொல்? என்று பீர்பால் கேட்டார்.

உள்ளான் என ராய்தாஸ் கூறினான்.

அவனிடம் நீ சென்று இந்த 5 தங்க நாணயங்களைக் கொடு, அதை வைத்துக்கொண்டு அவனை வரும் பௌர்ணமியன்று இரவு ஒரு நல்ல விருந்துக்கு ஏற்பாடு செய்யச்சொல்.

அவ்விருந்துக்கு செல்வந்தரை அழைக்கச் சொல். மற்றவைகளை நான் பிறகு சொல்கிறேன் என்றார் பீர்பால்.



(தொடரும்)




## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1227 - புனித உரோமப் பேரரசன் இரண்டாம் பிரெடெரிக் சிலுவைப் போரில் பங்குபற்றாமல் போனதை அடுத்து திருத்தந்தை ஒன்பதாம் கிரகரி, அவனை மதவிலக்கம் செய்தனர்.
- 1567 - பிரான்சில் இரண்டாம் சமயப் போர் ஆரம்பமானது
- 1833 - மூன்று வயதுள்ள இரண்டாம் இசபெல்லா ஸ்பெயின் அரசியாக முடிசூடினாள்.
- 1850 - லண்டனிலும் வேல்சிலும் உரோமன் கத்தோலிக்க உயர் சபையை திருத்தந்தை ஒன்பதாம் பயஸ் மீண்டும் அமைத்தார்.
- 1885 - உலகின் முதலாவது மின்சார திராம் வண்டி லண்டனில் சேவையை ஆரம்பித்தது.
- 1911 - இத்தாலி ஒட்டோமான் பேராட்சிக்கெதிராகப் போர் தொடுத்தது.
- 1916 - ஜோன் ரொக்பெல்லர் உலகின் முதலாவது கோடீஸ்வரர் ஆனார்.
- 1918 - முதலாம் உலகப்போர்: பல்கேரியா கூட்டுப் படைகளுடன் அமைதி ஒப்பந்தத்தை ஏற்படுத்தியது.
- 1938- செக்கோஸ்லோவாக்கியாவின் சுடெட்டென்லாந்துப் பகுதியை ஆளும் உரிமையை ஜேர்மனிக்கு வழங்குவதற்கான உடன்படிக்கையில் பிரித்தானியா, பிரான்ஸ், ஜேர்மன் மற்றும் இத்தாலி ஆகியன கைச்சாத்திட்டன.
- 1941- உக்ரேனின் கீவ் நகரில் குறைந்தது 33,771 யூதர்கள் நாசி ஜேர்மனியரினால் கொல்லப்பட்டனர்.
- 1962 - கனடாவின் முதலாவது செய்மதி அலூட் 1 ஏவப்பட்டது.
- 1971 - அரபுக் கூட்டமைப்பில் ஓமான் இணைந்து கொண்டது.
- 1972 - ஜப்பான் மக்கள் சீனக் குடியரசுடனான தூதரக உறவை மீள அமைத்து, சீனக் குடியரசுடனான உறவை முறித்துக்கொண்டது.


### பிறப்புகள்

- 1901- என்றிக்கோ பெர்மி, இத்தாலிய இயற்பியலாளர், நோபல் பரிசு பெற்றவர் (இ.1954)
- 1920 - அரங்க, சீனிவாசன், தமிழகக் கவிஞர், எழுத்தாளர் (இ.1996)
- 1936 - சில்வியோ பெர்லுஸ்கோனி, இத்தாலியப் பிரதமர்
- 1951 - மிசெல் பாச்செலெட், சிலியின் குடியரசுத் தலைவர்
- 1975 - ஸ்டுவட் கிளார்க், அவுஸ்திரேலிய துடுப்பாட்ட வீரர்
- 1988 - கெவின் டுரான்ட், அமெரிக்க கூடைப் பந்து ஆட்டக்காரர்

### இறப்புகள்

- 1969 - சி.டபிள்யூ.டபிள்யூ. கன்னங்கரா, இலங்கையில் இலவசக்கல்வித் திட்டத்தை அறிமுகப்படுத்தியவர். (பி.1884)

### கி.வி.வி. கன்னங்கரா



சி.டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கரா என அழைக்கப்படும் கிறிஸ்தோபர் வில்லியம் விஜயக்கோன் கன்னங்கரா ஒரு வழக்கறிஞரும் அரசியல்வாதியும் ஆவார். 20 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஆரம்பமான, இலங்கையின் விடுதலைப் போராட்டத்தில் முக்கிய பங்கு வகித்த இவர், இலங்கை அரசாங்க சபையின் முதல் கல்வி அமைச்சரானார். மேலும், நாட்டின் கல்வித் துறையில் பாரிய சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்துவதிலும் முக்கிய பங்காற்றினார். இவரது சீர்திருத்தங்களால் சமூகத்தின் அனைத்து மட்டத்திலும் இருந்த சிறுவர்கள் கல்வி பெறக்கூடியதாய் இருந்தது.

கல்வித் திறமை மூலம், அக்காலத்தில் சிறந்து விளங்கிய காலி ரிச்மண்ட் கல்லூரியில் கல்வி கற்கும் வாய்ப்பைப் பெற்றுக் கொண்ட இவர் ஆரம்பத்தில் ஒரு வழக்கறிஞராகப் பணியாற்றினார்.

1923 இல் இலங்கை சட்டவாக்கப் பேரவைக்கு முதலில் தெரிவான கன்னங்கர, பின்னர் அரசாங்க சபைக்கு தெரிவு செய்யப்பட்டார். இவர் இலங்கைத் தேசியக் காங்கிரசின் தலைவராகவும் செயற்பட்டுள்ளார்.

1940 களில் அரசாங்க சபையில் கல்வி அமைச்சராகப் பணியாற்றிய கன்னங்கர, இலங்கையின் கல்வித்துறையில் பாரிய சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்தினார். கல்வியை இலவசமாக்கியதன் மூலம், நாட்டின் கிராமப்புறங்களிலுள்ள வறிய மாணவர்கள் உட்பட அனைத்து மாணவர்களும் கல்வி பெறுவதற்கான வாய்ப்பை உருவாக்கினார்.

மத்திய மகா வித்தியாலயங்கள் எனும் திட்டத்தை ஆரம்பித்ததன் மூலம், நாட்டின் கிராமப்புறங்களில் தரம் வாய்ந்த இரண்டாம் நிலைப் பாடசாலைகளை நிறுவினார். கல்வித்துறையில் கன்னங்கர ஏற்படுத்திய சீர்திருத்தங்களின் விளைவாக இவர் இலங்கையின் இலவசக்கல்வியின் தந்தை எனப் போற்றப்படுகிறார்.

# குண்டலி சக்தி என்றால் என்ன?



ஆன்மீகம் 128

...அரசியல்வாதியோடு சினிமாக் காரன்களிடம் சூனியம், சூழ்ச்சி, காக்கா பிடிப்பது, பொய், ஏமாற்று வேலை அனைத்தும் இருந்தால் தான் வாழ முடியும். அதனால்தான் சினிமாக்காரர்கள் சீக்கிரம் அரசிய லுக்கு வந்து ஆட்சி பிடித்து சுவிஸ் பேங்கில் கோடி, கோடியாய் போட்டு வைக்கிறார்கள். ஒரே பட்டனில் சாம்பல் பவுடராக உடம்பு வெந்து விடும் என்று தெரிந்தால் பொது மக்களை கண் போல் காப்பார்களே.

குண்டலி சக்தி என்கிற புத்த கத்தை படித்ததும் யாராவது ஒரு நல்ல சித்தரைக் கண்டுபிடிக்க பல வகையிலும் இரவு பகலாக முயற்சி செய்து கனவு கண்டதே மிச்சம்.

என் கனவு பலித்ததுபோல் பகவான் ஸ்ரீ காகபுஜண்டர் மகரிஷி யைக் காணும் பாக்கியம் பெற்றது மட்டுமல்ல வா ராஜா வா! உன்னைத் தான் ரொம்ப நாளாக தேடினேன். நல்ல நேரத்தில் வந்துவிட்டாய் என்று கூறிய பகவானின் வார்த்தைகள் இன்னும் என் நெஞ்சில் நீங்காமல் ஒளிந்து கொண்டிருக்கிறது.

ஒருமுறை சித்தர் பெருமான் ஆந்திரா காளஹஸ்தி மலையில் அகத்தியரின் சீடர்கள் 1008 பேர் தங்கி தவம் செய்து 1008 லிங்கமாய் இருக்கும் வையலிங்க கோனே என்ற- பால் போல் இன்று வரை இருக்கும் தீர்த்தம் உள்ள இடத்துக்கு சிலரை அழைத்துப்போய் ஏதோ மூலிகைப் பொடி கொடுக்க ஒவ்வொருவரும் சித்தரைப் புகழ்ந்து அவர், அவர் எண்ணம் போல் அதிசயமாக கூறு



வதைக் கேட்டு அடியேன் சினிமாக் காரன் என்பதால் நம்ப முடியாமல் முழித்தேன்.

அதற்கு முன்னால் சித்தரிடம் குண்டலி சக்தி என்னவென்று கேட் டேன். அது ஒன்றுமில்லை என் கை தொட்டால் குண்டலி எழுந்துவிடம் என்றார். சரி இதைப் பற்றி இவருக்கு தெரியாத விடயம். கேட்பது தவறு என்று என் முட்டாள் புத்தக புத்தியை பெருமை என்று கருதி விட்டு விட்டேன்.

மறுநாள் காளஹஸ்தியில் அந்த ஞானமூலிகையை கொடுத்து அவர்- அவர் வித்தியாசமான விவரங்களை கூறும்போது என்னால் ஆச்சரியப் படாமல் இருக்க முடியவில்லை. ஏற்கனவே அன்பர் இளையராஜா திரு.கங்கை அமரன், திரு லெனின் போன்றோர்களுடன் சுவாமி வேதாத் திரி மகரிஷியின் யோகப் பயிற்சி நிலையத்திற்கு போய் கடுப்பாகிப் போன அனுபவம் உண்டு.

எனக்கு எது கிடைத்தாலும் உடனே கிடைக்க வேண்டும். இல்லை என்றால் நம்பமாட்டேன். சரி! சரி! நீங்கள் கூறம் அந்த அதிசய ஞான மூலிகையை எனக்குக் கொஞ்சம் கொடுங்கள் என்றேன்.

அவர்கள் அரைஸ்பூன் இனிப்பும் கசப்பும் கலந்த மூலிகைப் பொடி கொடுக்க அதனை சாப்பிடு முன் சித்தரிடம் காட்டி ஏதோ மூலிகை பொடி கொடுத்தார்கள் சாப்பிடலாமா என்று கேட்க அவ்ரும் சிரித்துக் கொண்டு உன் விருப்பம் போல் சாப்பிடலாம் என்றார்.

மூலிகைப் பொடியை சாப்பிட்ட வுடன் என் கண்கள் இரண்டும் என் புருமத்தியில் லயித்தன. நான் பல்வேறு விதமான காட்சிகளைக் காணத் தொடங்கினேன். அக்காட்சி களில் விதவிதமான பறவைகள், மிருகங்கள், பூக்கள், பூந்தோட்டங் கள் ஆகியன காணப்பட்டன. சினிமாப் படம் பார்ப்பது போல் இருந்தது. நான் தொடர்ந்து புரு மத்தியில் நோக்கினேன்.

அன்னை சித்தர்
இராஜ்குமார் குருஜி

(தொடரும்)

# வலி சுமக்கும் மக்களின் நியாயமான எதிர்பார்ப்பை காப்பாற்ற வேண்டும்



வட மாகாணசபைத் தேர்தலில் எதிர் பார்த்ததுதான் நடந்தது. மூன்றிலிரண்டு பெரும்பான்மையைத் தாருங்கள் என்றும், வரலாற்று வெற்றியை வழங்குங்கள் என் றும் தமிழ்த் தேசியக்கூட்டமைப்புக் கேட்டது.

36 உறுப்பினர்களைத் தெரிவுசெய்யும் போட்டியில் இருபத்திநான்கு சக ஒன்று எனக் கூட்டி வரும் இருபத்தைந்து மூன்றிலி ரண்டு. ஆனால், தமிழர்கள் மேலதிகமாக மூன றைக் கொடுத்து இருபத்தெட்டு ஆக் கிய தால். போனஸ் இரண்டு இடங்கள் கிடை க்க, தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் வெற்றி எண்ணிக்கை முப்பது ஆனது. இது ஐந்தில் நான்கு ஆகும்.

வலி சுமந்து வாழும் மக்கள் அதனை உலகுக்குக் காட்டும் வழியாக இந்தத் தேர் தலைக் கருதியதால், பல்வேறு அச்சுறுத் தல்களையும் மீறி தற்துணிவுடன் அவர்கள் வழங்கிய வாக்கு சர்வதேச நகர்வுக்கான அங்கீகாரமாகக் கொள்ளப்பட வேண்டியது.

இதன் மறுபக்கமாக சர்வதேச மட்டத்திலும சிங்கள நாட்டிலும் இடம்பெற்ற, இடம்பெறு கின்ற சில நிகழ்வுகளை அவதானிக்கலாம்.

அமெரிக்கா தேர்தல் முடிவை வரவேற் றுள்ளதோடு, இலங்கை அரசு சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி வட மாகாணசபையுடன் இணை ந்து செயற்படுமாறு கேட்டுள்ளது.

வடக்கில் தேர்தல் நடைபெற்றுள்ளதை வரவேற்றுள்ள பிரித்தானிய அரசு, தேர்தல் கால அச்சுறுத்தல் மற்றும் வன்முறைகளை யிட்டு நீதி விசாரணை தேவை என்று கேட் டுள்ளது.

இத்தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு வெற்றியீட்டியதை வரவேற்றுள்ள ஐரோப்பிய ஒன்றியம், அரசியல் நல்லிணக் கம் ஒன்றை ஏற்படுத்த அரசுக்கு நல்ல வாய் ப்பு என்று தெரிவித்துள்ளது.

வட மாகாணசபைத் தேர்தல் நடை பெற்றதும் அதன் முடிவும் இந்தியாவின் வெற்றி என்று அமைச்சர்களான நாராயணசாமி, சிதம்பரம், வாசன் உட்பட காங்கிரஸ்காரர் பலரும் தங்களுக்குத் தாங்களே முடிசூட்டி மகிழ்கின்றனர்.

"இருபத்தைந்து ஆண்டுகள் ஜனநாயகம் மறுக்கப்பட்ட வடக்கில்தேர்தல்நடத்திஒருசபையை ஏற்படுத்தியதானது தனது அரசியல் ஜனநாயக நடைமுறைக்குக் கிடைத்த பெரு வெற்றி" என்று கருத்து வெளியிட்டுள்ளார் ஜனாதிபதி மகிந்த ராஜ பக்ச.இங்கு அவரது அரசாங்க தரப்பு வென்றி ருந்தால், அவரின் அறிக்கை வேறு விதமாக அமைந்திருக்கும்.

"வட மாகாணசபையுடன் ஒத்துழைக்கத் தயார். வடக்கின் அபிவிருத்தி வேலைகளை யும் அதனிடமே ஒப்படைக்கிறேன்" என்று பெரு மனதுடன் கூறியுள்ளார் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர்.

ஜெனிவாவிலும் நடைபெற்ற ஐ.நா.வின் இரண்டு கூட்டங்கள் உலக சமுகத்தின் கவனத்தை ஈர்த்துள்ளன.

இதன் பொதுச்சபைக் கூட்டம் நியூ யோர்க்கில் 24ஆம் திகதி ஆரம்பமானது. இங்கு தொடக்க உரை ஆற்றிய செயலாளர் நாயகம் பான் கி மூன் "இலங்கையில் ஐ.நா.வுக்குத் தோல்வி" என்று பகிரங்கமாக ஒப்புக்கொண்டுள்ளார். ஆனால் கொல் லப்பட்ட, காணாமற்போன தமிழர்களின் உயிரை அவரால் மீளப் பெற்றுத்தர முடி யாது.

கடந்த மாதம் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட ஐ.நா. மனித உரிமை ஆணை யாளர் நவநீதம் பிள்ளையின் வாய்மூல அறிக்கை 25ஆம் திகதி ஜெனிவாவில் சமர்ப்பிக்கப்பட்டது.

இலங்கை அரசின் நம்பகமற்ற விசார ணைகள், நல்லிணக்கம் மற்றும் பொறுப் புக்கூறல் ஆகியவற்றை மறுப்பது ஆகியவை களைச் சாடியுள்ள இந்த அறிக்கை, அடுத்த மார்ச் மாதத்துக்கு முன்னர் இவ்விடயங்களில முன்னேற்றம் காணப்படாவிட்டால் இது சம்பந்தமான விசாரணையை மேற்கொளவது சர்வதேசத்தின் பொறுப்பு என்று வலியுறுத் தியுள்ளார்.

2014 ஜூலையில் நவநீதம் பிள்ளையின் பதவிக் காலம் முடிவடையவுள்ளது. அதற்கு முன்னர் மார்ச்சில் நடைபெறவுள்ள 25வது கூட்டத் தொடரில் இலங்கை சில நெருக்க டிகளை எதிர்கொள்ள நேரிடலாம். அதற்கிடை யில் வட மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வர னூடாக இந்திய உதவியைப் பெற்று நிலை மையை இலங்கை தணித்துவிடக்கூடும் எனும் அச்சம் பலரிடம் காணப்படுகின்றது.

விக்னேஸ்வரனின் அபார வெற்றி கூட்ட மைப்பின் வெற்றியென்று பார்க்கப்படு கின்றது.

படித்தவர், சட்டம் தெரிந்தவர், நீதி வழங்கியவர், சமயப் பற்றாளர் என்ற பல சிறப்புகளைக் கொண்டவர் என மக்கள் நம்பும் விக்னேஸ்வரன் உடனடியாகக் கவனிக்க வேண்டிய இரு விடயங்கள் சவால்களாக முன்னால் தெரிகின்றன.

1. மாகாணசபைகளுக்குக் காணி அதிகா ரங்கள் இல்லை என்று உயர்நீதிமன்றம் இந்த மாதம் 25ஆம் திகதி அறிவித்துள்ளது. வட மாகாணசபைத் தேர்தல் வெற்றியின் பின்னரே அவசரமாக இந்த முடிவு அறிவிக் கப்பட்டுள்ளது.

2. சகல மாவட்டங்களுக்கும் மாவட்ட அமைச்சர்களை நியமிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

1970இல் சிறிமாவோ ஆட்சியில் அரசா ங்க தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒவ்பொரு மாவட்டங்களுக்கும் அரசியல் அதிகாரி என்று நியமிக்கப்பட்டனர்.

1977இல் பதவிக்கு வந்த ஜே.ஆர். ஜெயவர்த்தன 25 மாவட்டங்களுக்கும் தமது கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களை மாவட்ட அமைச்சர்களாக நியமித்தார்.

இப்போது மாகாணசபைகள் உருவாகி, முக்கியமாக வட மாகாணசபை பறிபோன நிலையில் மாவட்ட அமைச்சர்கள் நியம னம் எதற்காக?

வட மாகாணசபைக்கு முதலமைச்ச ருடன் நான்கு மாகாண அமைச்சர்கள் இயங்கப்போகிறார்கள். ஆனால், இங் குள்ள ஐந்து மாவட்டங்களுக்கும் ஐந்து மாவட்ட அமைச்சர்கள் வரப்போகிறார்கள்.

வட மாகாண அரசாங்கத்தின் அதி காரங்களை தட்டிப்பறிக்கும் திட்டம் இது. மாவட்ட அமைச்சரின் நிர்வாகத்தின் கீழ் வட மாகாண முதலமைச்சரை செயற்பட வைக்கும் தேவையுடன் அரசாங்கம் இதனைச் செய்கின்றது.

தேர்தலுக்கு முன்னர் கூறியது போன்று சட்டத்தின் துணைகொண்டு உடனடியாக இவ்விடயங்களை வெட்டியாட வேண்டியது முதலமைச்சர் என்னும் வகையில் விக்னேஸ வரனின் அதிமுக்கிய கடமை.

வாக்களித்து வெற்றிவாகை சூட்டிய வலி சுமக்கும் மக்களின் நியாயமான ஆகக் குறைந்த எதிர்பார்ப்பையாவது

விக்னேஸ்வரன் காற்றில் பறக்க விடாது காப்பாற்ற வேண்டும்.

-பனங்காட்டான்-

# தமிழ் மக்களை காப்பாற்ற தவறிய ஐ.நா.அதிகாரிகளை விசாரிக்குக

## ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ சூளுரை

(சென்னை)

**இலங்கையின் வடக்கு மாகாணத்தில் நடத்தப்பட்ட தேர்தல் இந்திய-இலங்கை அரசுகளின் சதித் திட்டமாகும் என ம.தி.மு.க.பொதுச் செயலாளர் வைகோ குற்றம் சுமத்தியுள்ளார்.**

வேலூர் மத்திய ஆண்கள் சிறையில் உள்ள ராஜீவ் கொலை வழக்கின் தூக்கு தண்டனைக் கைதிகள் பேரறிவாளான், முருகன், சாந்தன் ஆகியோரை நேற்றுமுன்தினம் அவர் சந்தித்தார்.

அதன் பின்னர் செய்தியாளர்களிடையே வைகோ உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் எள்ளளவும் தொடர்பில்லாத பேரறிவாளன், முருகன், சாந்தன் ஆகியோர் வாழ்க்கையின் பெரும்பகுதி சிறைச்சாலையிலேயே கழிந்துவிட்டது.

அவர்கள் நிரபராதிகள் என்பதால் அவர்களுக்கு விதிக்கப்பட்ட தூக்குத் தண்டனையை இரத்து செய்வதற்காக நீதிமன்றத்தில் போராடி வருகிறோம்.

எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 22



ஆம் திகதி உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி முன்னிலையில் நடைபெறவிருக்கும் விசாரணைகளில் பல மரண தன்டனை வழக்குகள் எடுத்துக் கொள்ளப்படவுள்ளன.

இதில் இவர்கள் மூவரின் வழக்கு எடுத்துக் கொள்ளப்படுமா? அல்லது இல்லையா என்பது அன்றைய தினமே தெரியவரும்.

இலங்கை வடக்கு மாகாணத்தில் தேர்தல் நடத்தியது இந்திய-இலங்கை அரசுகளின் சதித்திட்டமாகும்.

13 ஆவது சட்ட திருத்தத்தை தமிழர்கள் ஏற்காத சூழலில், அச் சட்டத்தை நீர்த்துப்போக செய்வதற்காக இலங்கை அரசு களம் இறங்கியுள்ளது.

இலட்சக்கணக்கான தமிழர்களின் உயிர்களைக் காக்கத் தவறிய பான் கீ மூன் மற்றும் ஐ.நா. அதிகாரிகள் மீது விசாரணை நடத்தப்பட வேண்டும். இலங்கையில் நடந்த இனப் படுகொலைக்கு சுதந்திரமான சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்பதுதான் எங்கள் கோரிக்கை

இலங்கை பொதுநலவாய அமைப்பில் இருந்து நீக்கப்பட வேண்டும். பொதுநலவாயத்தின் நம்பகத்தன்மை காப்பாற்றப்பட வேண்டுமெனில் அந்த மாநாடு இலங்கையில் நடைபெறக் கூடாது என்றார். (அ-2)

# படகு கவிழ்ந்ததில் 22 பேர் பாலியாகினர்

(கொழும்பு)

அவுஸ்திரேலியாவிற்கு அகதிகளை ஏற்றிச் சென்ற படகு ஒன்று ஜாவா தீவுகளுக்கு தெற்கே அமைந்துள்ள கடலில் மூழ்கியதாக இந்தோனேசிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இப் படகு விபத்தில் குறைந்தது 22 பேர் வரை பலியாகியிருக்கலாம் என அறியப்படுகிறது. இதில் 25 பேர் மீட்கப்பட்டுள்ளனர்.

மேலும் பலரைக் காணவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்கள் எந்த நாடுகளைச் சேர்ந்தவர்கள் என்ற தகவல்களை உடனடியாக அறியமுடியாதுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளதோடு இவர்களில் இலங்கையர்களும் அடங்கியிருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

அவுஸ்திரேலியாவின் புதிய பிரதமர் டோனி அப்பொட், அகதிகள் அவுஸ்திரேலியாவுக்கு வருவது குறித்துப் பேசுவதற்கென ஜாவாவுக்கு செல்வதற்கு சில தினங்களுக்கு முன்னதாகவே இந்தச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

அண்மைய வருடங்களில் நூற்றுக்கணக்கானவர்கள், அவுஸ்திரேலியாவில் தஞ்சம் கோருவதற்காக இந்தோனேசியாவின் ஊடாக மரப் படகுகளில் பயணம் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (அ-2)

# ஐ.தே.க.உறுப்பினர் ஆளும் கட்சியில்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் மற்றுமொரு முக்கிய உறுப்பினர் ஆளும் கட்சியில் இணைந்து கொள்ளத் தீர்மானித்துள்ளார்.

தென் மாகாணத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் முக்கிய நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரே இவ்வாறு ஆளும் கட்சியில் இணைந்து கொள்ளவுள்ளார்.

அடுத்த கட்டமாக தென், மேல் மற்றும் ஊவா மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் நடைபெறவுள்ளன.

இவ்வாறான ஓர் பின்னணியில் குறித்த ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் இணைந்து கொள்ளவுள்ளார்.

மேலும் இவர் ஆளும் கட்சியில் இணைந்து எதிர்வரும் தென் மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடவுமுள்ளார்.

அமெரிக்கா விஜயம் செய்துள்ள ஜனாதிபதி நாடு திரும்பியதும் இது குறித்த இறுதிக்கட்ட பேச்சு வார்த்தைகள் நடத்தப்படவுள்ளன. (அ-2)





சுவிஸ் அரசின் அபிவிருத்தி மற்றும் ஒத்துழைப்புத் திட்டத்தில் கிளாலி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் வித்தியாலயத்தில் 14.2 மில்லியன் ரூபா செலவில் நிரந்தர கட்டடங்களை அமைப்பதற்கான அடிக்கல் நாட்டு வைபவம் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது. இவ் வைபவத்தில் சுவிஸ் தூதரக கொழும்பு, யாழ். அதிகாரிகள் கலந்து கொண்டு அடிக்கல்லை நாட்டி வைப்பதைப் படங்களில் காணலாம்.

# கூட்டமைப்பின் காணி அதிகார கோரிக்கையை ஏற்க முடியாது

(கொழும்பு)

காணி அதிகாரம் குறித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கோரிக்கை நியாயமற்றது என சிரேஷ்ட சட்டத்தரணி கொமின் தயாசிறி தெரிவித்துள்ளார்.

இந்திய -இலங்கை உடன்படிக்கையில் சிக்கல்கள் காணப்படுகின்றன. நாட்டின் அரசியல் அமைப்பைக் கவனத்திற்கொள்ளாது உடன்படிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் காணி அதிகாரங்கள் மத்திய அரசாங்கத்திற்கே உரியன என்ற உயர் நீதிமன்றத் தீர்ப்பு இதனை உறுதி செய்கின்றது.

இலங்கையின் அரசியல் அமைப்பு குறித்து போதிய விளக்கமற்ற இந்தியர்களால் 13 ஆவது திருத்தச் சட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

எனவே, தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் காணி அதிகாரக் கோரிக்கை ஏற்றுக் கொள்ளக்கூடியதல்ல.

மேலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொலிஸ் அதிகார கோரிக்கைகளுக்கும் சட்ட ரீதியாக பதிலளிக்க விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# கயட்ட செவன மர நடுகை திட்டம்

"கயட்ட செவன" எனும் தேசிய மர நடுகை நிகழ்ச்சித் திட்டத்தை இவ் வாண்டும் நடைமுறைப்படுத்த வேண்டுமென அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

2010 ஆம் ஆண்டு, ஜனாதிபதியின் பிறந்த நாளை முன்னிட்டும், அவரது 2 ஆவது பதவியேற்பை நினைவு கூறும் முகமாகவுமே இம் மர நடு கைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

அதற்கமைய இதனை நடைமுறைப் படுத்துதல் தொடர்பான சுற்றறிக்கை சகல அமைச்சின் செயலாளர்கள், மாகாண சபை பிரதம செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், மாவட்ட செயலகங்கள், பிரதேச செயலகங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் முக்கிய சபைகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டது. (அ-9-19)

# புலி ஆதரவாளருக்கு 15 ஆண்டுகள் சிறை

தமிழீழ விடுதலைப்புலி ஆதரவாளர் ஒருவருக்கு அமெரிக்காவில் 15 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்படக் கூடுமென தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையைச் சேர்ந்த கனேடிய பிரஜையான நபருக்கே 15 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்குமாறு அமெரிக்க சட்டத்தரணிகள் கோரியுள்ளனர்.

புலிகளுக்கென தான் ஆயுதங்களைக் கொள்வனவு செய்ததாக இந் நபர் நீதிமன்றில் ஒப்புக்கொண்டிருந்தார். குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டுள்ள நிலையில், எத்தனை ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்படும் என்பது குறித்த சர்ச்சை தற்போது காணப்படுகின்றது. தண்டனைக் காலத்தை குறைக்குமாறு கனேடிய பிரஜையின் சட்டத்தரணிகள் கோரி வரும் நிலையில் அதிகபட்ச தண்டனை விதிக்கப்பட வேண்டுமென அரச சட்டத்தரணிகள் கோரி வருகின்றனர்.

எதிர்வரும் ஒக்டோபர் மதம் 28 ஆம் திகதி குறித்த நபருக்கு தண்டனையை அமரிக்க நீதிமன்றம் அறிவிக்கவுள்ளது.

அதற்கு எதிராக குறித்த கனேடிய பிரஜை மீண்டும் மேன்முறையீடு செய்யவிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# ஐக்கிய தே.கட்சியின் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அடிப்படையற்றவை

## கபீர் ஹசீம் எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

**13ஆவது அரசியல் அமைப்புத் திருத்தச் சட்டத்தின் மூலம் ஐ.தே.கட்சி இலங்கை ஒருமைப்பாட்டுக்கு பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் மாகாண சபைகளுக்கு அதிகாரங்களை வழங்கியுள்ளதாக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் அடிப்படையற்றவை என்பது தற்போது நிரூபணமாகியுள்ளதாக அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கபீர் ஹசீம் தெரிவித்துள்ளார்.**

அனுராதபுரத்தில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்,

மாகாண சபைகளின் காணி அதிகாரங்கள் தொடர்பில் உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின் மூலம் இது உறுதியாகியுள்ளது என அவர் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையின் காணி அதிகாரங்கள் மாகாண சபைகளிடம் இல்லை. அவை இலங்கையின் மத்திய அரசிடமே இருக்கின்றன என்பதை உயர் நீதிமன்றம் அண்மையில் வழங்கிய தீர்ப்பு உறுதிப்படுத்தியது.

13 ஆவது அரசியல் அமைப்புத் திருத்தம் தொடர்பில் அரசாங்கத்தின் பிரசார இயந்திரங்கள் மூலம் ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிராக சுமத்திய குற்றச்சாட்டுக்கள், மக்களை ஏமாற்றுவதற்காக செய்த முயற்சி என்பது உறுதியாகியுள்ளது என கூறியுள்ளார்.

அதேவேளை கிராமங்கள் வரை அதிகாரத்தை பரவலாக்கும் நோக்கத்தில் இந்த மாகாண சபை முறைமை ஏற்படுத்தப்பட்டதாக நீர் வழங்கல் வடிகாலமைப்பு பிரதியமைச்சர் டபிள்யூ. பி. ஏக்கநாயக்க தெரிவித்தார்.

மாகாண சபை முறைமையை சரியாக அமுல்படுத்தினால் கிராம புறங்களை அபிவிருத்தி செய்வது இலகுவானது என்றும் அவர் கூறினார். (அ-2)

# சட்ட விரோத மீன்பிடி படகுகள் அரசுடைமையாக்கப்படும்

## அமைச்சர் ராஜித தெரிவிப்பு

சட்ட விரோதமாக மீன்பிடியில் ஈடுபடும் இந்திய மீனவர்களின் படகுகள் அரசுடைமையாக்கப்படும் என மீன்பிடி வளத்துறை அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

இந்திய மீனவர்கள் அத்து மீறல்கள் தொடர்பில் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்டபோதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

இலங்கை கடற்பரப்பில் அத்து மீறி பிரவேசித்து சட்ட விரோதமான முறையில் மீன்பிடியில் ஈடுபடும் இந்திய படகுகள் அனைத்தும் இவ்வாறு பறிமுதல் செய்யப்படவுள்ளன.

அத்துடன் அத்து மீறி மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்களை மட்டும் விடுதலை செய்து படகுகளை அரசுடைமயாக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு இந்திய மீனவர்களின் படகுகளைப் பறிமுதல் செய்வது குறித்து சட்டமா அதிபர் ஆலோசனை பெற்றுக் கொள்ளப்படவுள்ளதாக அவர் கூறினார். (அ-2)

# வேட்பாளர் நியமனம் வெளிநாடுகளின் தெரிவு

## அமைச்சர் பசில் தெரிவிப்பு

(கொழும்பு)

வடமாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட வேட்பாளர்களில் பலரை சில வெளிநாடுகளே தெரிவு செய்திருந்தன என இலங்கை பொருளாதார அபிவிருத்தி அமைச்சரான பசில் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு வடமாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்காக வேட்பாளர்களைத் தெரிவு செய்து கொண்டிருந்த வேளை யாழ்ப்பாணத்துக்குச் சென்றிருந்த சில நாடுகளின் இலங்கைக்கான தூதுவர்கள் தங்களுக்கு பிடித்தமான சிலரின் பெயர்களைக் குறிப்பிட்டு அவர்களையும் வேட்பாளர்களாக களமிறக்கும் படி கேட்டுக் கொண்டனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையிலேயே தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் சில வேட்பாளர்கள் வடபுலத்தில் போட்டியிட நிறுத்தப்பட்டனர் என்றும் அவர் கூறியுள்ளார். (அ-2)

# பொதுநலவாய உச்சி மாநாட்டில் பங்கேற்று அழுத்தம் கொடுங்கள்

## கனடாவை வலியுறுத்துகிறது அங்நாட்டு பத்திரிகை

(கொழும்பு)

இலங்கையில் நடைபெறவுள்ள பொது நலவாய நாடுகள் அமர்வில் கனேடிய பிரதமர் பங்கேற்பதன் மூலம் இலங்கை அரசாங்கத்துக்கு அதிக அழுத்தங்களை பிரயோகிக்க முடியும் என த.குளோபல் மெயில் என்ற கனேடிய செய்தித்தாள் தமது ஆசிரியர் தலையங்கத்தில் இக்கோரிக்கையை விடுத்துள்ளது.

இலங்கையின் வடமாகாணத்தில் தற்போது தமிழர்கள் தமக்குரிய நிர்வாகத் தலைமையை தெரிவு செய்துள்ளனர்.

இதன்போது அந்த தலைமையை தெரிவு செய்வதை தடுக்கும் முகமாக பல்வேறு முறைகேடான சம்பவங்கள் நடத்தப்பட்டன.

இந்நிலையில் சுமார் 3 இலட்சம் தமிழர்களை கொண்டுள்ள கனடாவின் பிரதமர் தமது பங்குக்கு கொழும்பு மாநாட்டில் பங்கேற்று இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்துக்கு அழுத்தத்தை பிரயோகிக்க வேண்டும்.

இதன்மூலம் வடமாகாணத்தில் தெரிவு செய்யப்பட்டுள்ள அரசாங்கத்துக்கு கனடா உதவ முடியும் என்று த.குளோபல் மெயில் சுட்டிக்காட்டியுள்ளது. (அ-2)



ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கடந்த வியாழக்கிழமை பிற்பகல் ஈரான் ஜனாதிபதி ஹசன் ரொஹானியை சந்தித்து கைலாகு கொடுப்பதைப் படத்தில் காணலாம்.

# தேர்தலின் பின்னர் வன்முறை சம்பவங்கள் அதிகரிப்பு

(கொழும்பு)

தேர்தலின் பின்னரான வன்முறைச் சம்பவங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அண்மைய நாட்களாக தேர்தலின் பின்னரான வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்துள்ளதாக தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்கள் தெரிவித்துள்ளன.

குருநாகல் மாவட்டத்தில் அதிகளவான தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்று பதிவாகியுள்ளதாக கபே அமைப்பு சுட்டிக் காட்டியுள்ளது.

மாகாணசபைத் தேர்தலில் வெற்றியீட்டிய தயாசிறி ஜயசேகர மற்றும் ஜொஹான் பெர்னாண்டோ ஆகியோரின் ஆதரவாளர்களுக்கு இடையிலேயே இம்மோதல் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

தமது ஆதரவாளர்கள் தாக்கப்படுவதாக இரண்டு தரப்பினரும் ஒருவர் மாறி ஒருவர் குற்றம் சுமத்திக் கொள்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தேர்தலுக்கு பின்னரான வன்முறைகளை ஒழிக்க சட்டம் ஒழுங்கை பாதுகாக்கும் தரப்பினரும் அரசியல்வாதிகளும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென கபே கோரியுள்ளது. (அ-2)

# வட மாகாணத்தின் ஆங்கில தினப்போட்டி

(மன்னார்)

வட மாகாண ஆங்கில தினப் போட்டிகள் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 10, 11, 12ஆம் திகதிகளில் மன்னார் புனித சேவியர் பெண்கள் கல்லூரியில் நடைபெறவுள்ளன என வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.செல்வராஜா தெரிவித்துள்ளார். (அ-5)

# என்னை ஜனாதிபதியாக பார்க்கவே மக்கள் விரும்புகின்றனர்- சஜித்

(கொழும்பு)

என்னை ஜனாதிபதியாக பார்க்கவே மக்கள் விரும்புவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

தென் மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவது தொடர்பில் சிங்கள ஊடகமொன்று எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

தென்மாகாண முதலமைச்சராக தம்மை பார்க்க மக்கள் விரும்பவில்லை எனவும் தன்னை நாட்டின் ஜனாதிபதியாக பார்க்கவே மக்கள் ஆர்வம் காட்டுகின்றனர் எனவும் கூறினார்.

கட்சியின் மெய்யான பிரச்சினைகளை மூடி மறைத்து என்னை மாகாணசபை ஒன்றுக்குள் வரையறுக்க கட்சியைச் சேர்ந்த சிலர் முயற்சிக்கின்றனர்.

ஆனால் நான் எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடப் போவதில்லை.

கட்சி உறுப்பினர்கள் விரும்பினால் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட தயார் என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# பொதுநலவாய தலைவர்களுக்கு ஏழு நட்சத்திர ஹோட்டல்கள்

(கொழும்பு)

பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாட்டில் பங்கு பற்றும் தலைவர்களுக்கு தங்குமிட வசதிகளை வழங்கும் 7 நட்சத்திர ஹோட்டல்களில் இரண்டு ஹோட்டல்கள் திடீர் பரிசோதனைக்கு உள்ளாக்கப்பட்டன.

பரிசோதனையின் போது ஒரு ஹோட்டலில் உணவுகளை களஞ்சியப்படுத்தும் குளிர்சாதன உபகரணங்கள் அசுத்தமாக இருந்ததாக கொழும்பு பிரதம வைத்திய அதிகாரி டாக்டர் பிரதீப் காரியவசம் தெரிவித்தார்.

ஹோட்டல்களின் களஞ்சியங்களில் குறைபாடுகள் காணப்பட்டதுடன் பழுதான பழங்களும் இதன்போது கண்டு பிடிக்கப்பட்டன.

குளிர்சாதன உபகரணங்களில் உணவுகளைக் களஞ்சியப்படுத்தும் சரியான முறை கருத்திற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

இது தொடர்பாக ஹோட்டல் நிர்வாகத்தினருக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன என்றும் டாக்டர் காரியவசம் தெரிவித்தார்.

கொழும்பு மாநகர சபை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் 45 பேர் வரை இச்சோதனை நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டதாக அவர் மேலும் குறிப்பிட்டார். (அ-2)

# இலங்கை அரசை பிணையெடுக்குமா சர்வதேச கண்காணிப்புக் குழுக்கள்?

வடக்கு மாகாணசபைத் தேர்தல் நடந்து முடிந்துள்ள நிலையில், இந்தத் தேர்தல் எந்தளவுக்கு சுதந்திரமாக நடைபெற்றது என்ற கேள்விக்கான பதிலையே உலகம் அடுத்து எதிர்பார்க்கப் போகிறது.

எந்தத் தரப்பு வெற்றி பெற்றது என்பதற்கு அப்பால், யார் ஆட்சியமைக்கப் போகிறன்றனர் என்ற கேள்விக்கு அப்பால், தேர்தல் நீதியாகவும் சுதந்திரமானதாகவும் நடந்துள்ளதா என்பதே சர்வதேச சமூகத்துக்கு முக்கியமானது. ஏனென்றால் தேர்தல் நியாயமான முறையில் நடைபெற்றது என்பதை உறுதிப்படுத்திக் கொண்டால்தான், தேர்தல் முடிவை அங்கீகரிக்க முடியும்.

இலங்கையின் தேர்தல் வரலாற்றிலேயே மாகாணசபைத் தேர்தல் ஒன்று வெளிநாடுகளின் உன்னிப்பான அவதானிப்பை பெற்றுள்ளது, இதுவே முதல் முறை. அதுமட்டுமின்றி மாகாணசபைத் தேர்தல் ஒன்றில் வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்கள் தேர்தலைக் கண்காணிக்க அழைக்கப்பட்டுள்ளதும் இதுவே முதல் தடவை. இது அர்சாங்கம் தனது வசதிக்கேற்ப நடத்திக்கொள்ளும்.

ஏனைய மாகாணசபைத் தேர்தல்களைப் போலல்லாது, தனியான கவனத்தையும் உலகளவில் பெற்றிருந்தது. ஐ.நா. மனித உரிமைகள் பேரவை, பொதுநலவாய மாநாடு உள்ளிட்ட அமைப்புகளால் இது உன்னிப்பாக அவதானிக்கப்பட்ட ஒரு தேர்தல்.

அமெரிக்கா, இந்தியா, பிரித்தானியா, ஜேர்மன் உள்ளிட்ட பல நாடுகளும் பொதுநலவாய மாநாட்டு செயலாளர் கமலேஸ் சர்மா, ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை உள்ளிட்டோரும் வடக்கு மாகாணசபைத் தேர்தல் சுதந்திரமாகவும் நியாயமாக்வும் நடத்தப்பட வேண்டும் என்று ஏற்கனவே பலமுறை வலியுறுத்தியிருந்தனர்.

தேர்தல் நியாயமாகவும் சுதந்திரமாகவும் நடத்தப்பட்டால்தான், வடக்கில், தமிழ் மக்கள் தமக்கான ஒரு நிர்வாகத்தை அமைக்கவும், தமிழ்மக்கள் மத்தியில் நல்லிணக்கத்தை உருவாக்கவும் முடியும் என்பதே பெரும்பாலான நாடுகளின் கருத்தாக உள்ளது.

தேர்தலுக்கு இரண்டு நாட்கள் முன்னதாக ஐ.நா. பொதுச் செயலர் பான் கீ மூன் வெளியிட்ட அறிக்கையில் இந்தக் கருத்து பிரதிபலித்திருந்ததையும் காணலாம்.

இலங்கை அரசாங்கத்துக்கு கொள்கை ரீதியாக ஆதரவு வழங்கும் சீனா, பாகிஸ்தான் போன்ற நாடுகள் கூட இந்தக் கருத்துடன் முரண்பட வாய்ப்பில்லை.

இந்தத் தேர்தல் நியாயமாக நடத்தப்படாது போனால், தமிழ் மக்கள் ஜனநாயக அரசியல் வழிமுறைகளின் மீது நம்பிக்கையிழந்து போய் விடுவர் என்று அமெரிக்கா போன்ற நாடுகள் கருதுகின்றன. அதனால்தான் வடக்கு மாகாணசபைத் தேர்தலை இலங்கை அரசாங்கம் விரைவாகவும் சுதந்திரமாகவும் நடத்த வேண்டும் என்று சர்வதேச சமூகம் அழுத்தம் கொடுத்தது.

இப்போது தேர்தல் முடிந்து விட்டது. ஆனால், அதனை சர்வதேச சமூகம் எந்தளவுக்கு நியாயமானது என்று அங்கீகரிக்கப் போகிறது என்பதே முக்கியமான கேள்வி.

சர்வதேச சமூகம், இந்தத் தேர்தல் நீதியாக நடத்தப்பட்டதா என்பதை முடிவு செய்வதற்கு, முக்கியமான அடிப்படையாக இருக்கப் போவது, இந்தத் தேர்தலைக் கண்காணித்த குழுக்களின் அறிக்கைகள்தான். இந்த தேர்தலைக் கண்காணிப்புக் குழுக்களின் அறிக்கைகள் இதில் எந்தளவுக்கு கவனம் செலுத்தும் என்று தெரியவில்லை. ஆனால், வெளிநாட்டுக் கண்காணிப்புக் குழுக்களின் அறிக்கை மிகவும் முக்கியமானது.

செப்டெம்பரில் இந்தத் தேர்தல் நடத்தப்படும் என்று அரசாங்கம் கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகளாகவே கூறி வந்தது. ஆனால், கடந்த ஜூலை மாதம் வடக்கு மாகாணசபையை உருவாக்கும் பிரகடனத்தை ஜனாதிபதி வெளியிட்டு தேர்தலை நடத்த ஒழுங்கு செய்யுமாறு தேர்தல் ஆணையாளரைப் பணித்திருந்தார். இதனை அரசாங்கம் ஏற்கனவே செய்திருக்கலாம். ஆனால், மிகத் தந்திரமாக அதைச் செய்யாமல் தவிர்த்திருந்தது.

செப்ரெம்பரில் தேர்தல் நடக்கப்போகிறது என்று தெரிந்ததும் அது நியாயமாக நடத்தப்படுவதை உறுதிப்படுத்த சர்வதேச கண்காணிப்பாளர்களை அழைக்க வேண்டும் என்று எதிர்க்கட்சிகளும், பொது அமைப்புகளும் அரசாங்கத்தை நச்சரிக்கத் தொடங்கின. அதைவிட சர்வதேச சமூகம் இந்தத் தேர்தலை நியாயமாக நடத்தப்படுவதை உறுதி செய்ய வேண்டும் என்று அழுத்தம் கொடுத்து வந்தது. இந்நிலையில் சர்வதேச கண்காணிப்பைத் தவிர்ப்பதற்காகவே கடைசிநேரத்தில் தேர்தல் அறிவிப்பை அரசாங்கம் வெளியிட்டது. இல்லாவிட்டால் ஐரோப்பிய ஒன்றிய கண்காணிப்புக் குழுவை அழைக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கும். ஐரோப்பிய ஒன்றிய கண்காணிப்புக்குழுவை அழைப்பதானால் மூன்று மாதங்களுக்கு முன்னரே அழைப்பு விடுக்க வேண்டும். அதைத் தடுப்பதற்காகவே இரண்டு மாதங்களுக்குள் தேர்தல் அறிவிப்பு வெளியிடப்பட்டது.



ஐரோப்பிய ஒன்றிய கண்காணிப்புக்குழு வந்தால் தமக்குச் சிக்கலை ஏற்படுத்தும் என்பது அரசாங்கத்துக்குத் தெரியும். அதனால்தான் அவர்களைத் தந்திரமாக கழற்றிவிட்டது அரசாங்கம். எனினும் சர்வதேச சமூகத்தை திருப்திப்படுத்தியாக வேண்டிய தேவை அரசாங்கத்துக்கு இருந்ததால்தான் சார்க் மற்றும் கொமன்வெல்த் கண்காணிப்புக் குழுக்களை அரசாங்கம் அழைத்தது. 21 பேரைக் கொண்ட சார்க் கண்காணிப்புக் குழுவுக்கு இந்தியாவின் முன்னாள் தேர்தல் ஆணையாளர் கோபாலசுவாமி தலைமை தாங்கினார். ஆறு பேரைக் கொண்ட கொமன்வெல்த் கண்காணிப்புக் குழுவுக்கு கென்யாவின் முன்னாள் துணை அதிபர் ஸ்ரீபன் கலொன்சோ முஸ்யோகா தலைமை தாங்கினார்.

தேர்தல் முடிந்து மூன்று நாட்களுக்குள், தமது அறிக்கையை கையளிப்போம் என்று சார்க் கண்காணிப்புக் குழுவின் தலைவரான கோபாலசுவாமி கூறியிருந்தார். எனவே, அடுத்த இரண்டொரு நாட்களில் இந்த அறிக்கை வெளியாகும். இது எவ்வாறு அமையப்போகிறது என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

ஆனால், சுதந்திரமான தேர்தல் ஆணைக்குழு உருவாக்கப்படாது- வலுவான தேர்தல் சட்டங்களைக் கொண்டிராத இலங்கையின் தேர்தல் முறைக் குறைபாடு குறித்து இரு வெளிநாட்டுக் கண்காணிப்புக் குழுக்களும் சுட்டிக் காட்டுவதற்கு வாய்ப்புக்கள் உள்ளன.

குறிப்பாக, இந்தத் தேர்தலுக்காக அத்தனை அரச வளங்களும் பயன்படுத்தப்பட்டன. புதிய கட்டடங்கள் திறக்கப்பட்டன.

வீதிகள், பாலங்கள் திறந்து வைக்கப்பட்டன.

இந்தியாவின் உதவியுடன் அமைக்கப்பட்ட ரயில் பாதை கூடத் திறக்கப்பட்டது.

மூடப்பட்ட வீதிகள் திறந்து விடப்பட்டன.

இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக படையினரின் கட்டுப்பாட்டில் இருந்த நிலங்கள் விடுவிக்கப்பட்டன.

இப்படியான எல்லாவற்றையுமே செய்து வடக்கிலுள்ள மக்களின் கவனத்தை தன் பக்கம் இழுக்க முனைந்தது அரசாங்கம். இவையெல்லாம் தேர்தலுக்காக அரசாங்கம் செய்தவை.

சுதந்திரமான தேர்தல் ஆணைக்குழு ஒன்று உள்ள ஒரு நாட்டில் இறுக்கமான தேர்தல் விதிமுறைகள் கடைப்பிடிக்கப்படும் ஒருநாட்டில் இவையெல்லாம் சட்டவிரோதமானவை. அதுவும் கோபாலசுவாமி தேர்தல் ஆணையாளராக இருந்த இந்தியாவில் இவையெல்லாம் கடுமையான தேர்தல் விதிமீறல்கள். தேர்தலையே நிறுத்தும் அளவுக்கு இவை மோசமான குற்றங்கள். இத்தகைய மீறல்களையெல்லாம் கோபாலசுவாமி போன்ற கண்காணிப்பாளர்கள் சாதாரணமாக எடுத்துக் கொள்வார்கள் என்றோ, சகித்துக் கொள்வார்கள் என்றே எதிர்பார்க்க முடியாது.

இந்நிலையில் சர்வதேச கண்காணிப்புக் குழுக்கள் இந்தத் தேர்தல் குறித்து சமர்ப்பிக்கவுள்ள அறிக்கைகள், சர்வதேச அழுத்தங்களில் இருந்து அரசாங்கத்தைப் பிணையெடுக்கும் என்று நம்புவது கடினமான காரியம்தான்.

(தொல்காப்பியன்)

# இலங்கையின் பால் உற்பத்திக்கு உதவ நியூசிலாந்து விருப்பம்

(கொழும்பு)

**இலங்கையின் பால் உற்பத்தித் துறையை முன்னேற்றுவதற்கான தொழில்நுட்ப ஒத்துழைப்புக்களை வழங்குவதற்கு நியூசிலாந்து அரசாங்கம் விருப்பம் தெரிவித்துள்ளது.**

நியூயோர்க்கில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கும் நியூசிலாந்து பிரதமர் ஜோன் கேவுக்குமிடையில் நடைபெற்ற இருதரப்பு பேச்சுவார்த்தையின் போதே நியூசிலாந்து பிரதமர் இந்த இணக்கப்பாட்டைத் தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்திப்பு சிநேகபூர்வமாக அமைந்ததுடன் இரு நாடுகளுக்குமிடையிலான நல்லுறவைப் பலப்படுத்துவதாகவும் அமைந்திருந்தது என தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் எதிர்வரும் நவம்பரில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாட்டை மிகுந்த ஆவலுடன் எதிர்பார்த்திருக்கிறோம்.

இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய அரச தலைவர்கள் மாநாட்டில் கலந்து கொள்ளவுள்ளோம். 2011 இல் அவுஸ்திரேலிய பேர்த் நகரில் நடைபெற்ற பொதுநலவாய அரச தலைவர்கள் மாநாட்டில் என்னால் பங்குபற்ற முடியாமற் போனது. இதனால் இலங்கையில் நடைபெறும் மாநாடு தொடர்பில் மிகுந்த அக்கறை கொள்டுள்ளேன் என்றார்.

பொதுநலவாய நாடுகளின் வியாபார வர்த்தகப் பேரவைக்கு நியூசிலாந்து பிரதிநிதிகள் குழுவொன்றைப் பங்கேற்கச் செய்யுமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விடுத்த வேண்டுகோளை ஏற்றுக் கொண்ட நியூசிலாந்து பிரதமர் வர்த்தகத் தூதுக் குழுவொன்றை அனுப்பவும் இணக்கம் தெரிவித்தார்.

இலங்கையானது நியூசிலாந்தின் பால் உற்பத்தித் துறைக்கு சிறந்த சந்தையாக விளங்குகின்றது. இது தொடர்பில் தமது நாட்டுக்கு சிறந்த நிபுணத்துவ அனுபவமுள்ளது. இலங்கையின் பால் உற்பத்தித்துறை அபிவிருத்திக்கு நியூசிலாந்தின் அனுபவத்தைப் பகிர்ந்து கொள்ள முடியும்.

எதிர்வரும் 2015 தொடக்கம் 2016 கால வரையறையில் ஐ.நா. பாதுகாப்புச் சபையில் ஆசனம் ஒன்றை உரித்தாக்கிக் கொள்வதற்கு நியூசிலாந்து நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. அதற்கு இலங்கை பூரண ஒத்துழைப்பை நல்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

இதற்கு கருத்து தெரிவித்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, இலங்கையில் யுத்தம் முடிபுக்குக் கொண்டு வரப்பட்டதையடுத்து இலங்கையின் அபிவிருத்தி மேம்பாடு அடைந்துள்ளது. மேலும் இலங்கையில் வறுமை மற்றும் வேலைவாய்ப்பின்மை வெகுவாகக் குறைந்து சிறந்த பொருளாதார சூழல் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது எனவும் ஐ.நா. பாதுகாப்பு சபையில் ஆசனம் பெறுவது தொடர்பில் இலங்கையானது யாருக்கு ஒத்துழைப்பு வழங்குவது என்ற தீர்மானத்தை இதுவரை எடுக்கவில்லை எனவும் இந்த கோரிக்கை தொடர்பில் கவனமெடுக்கப்படும் எனவும் ஜனாதிபதி நியூசிலாந்து பிரதமரிடம் தெரிவித்தார். (அ-2)

## மாத்தறை-கிளிநொச்சிக்கு மற்றுமொரு ரயில் சேவை

புகையிரத சேவையானது, மாத்தறையிலிருந்து அநுராதபுரம் வரை வார இறுதி நாட்களில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு வந்தது.

இந்நிலையில் இச் சேவையை கிளிநொச்சி வரை சேவையில் ஈடுபடுத்த புகையிரத திணைக்களம் நடவடிக்கைகளை மேற் கொண்டுள்ளது.

இதனடிப்டையில் சனிக்கிழமை காலை 7 மணிக்கு மாத்தறையிலிருந்து புறப்படும் புகையிரதம் மு.ப. 9.50 இற்கு கோட்டை புகையிரத நிலையத்தையும் பி.ப.3.50 இற்கு கிளிநொச்சி புகையிரத நிலையத்தையும் வந்தடையவுள்ளது.

கிளிநொச்சியிலிருந்து ஞாயிற்றுக்கிழமை மு.ப.11 மணிக்கு பயணத்தை ஆரம்பிக்கும் புகையிரதம், மாலை 5.15 இற்கு கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்தையும் இரவு 7.15 மணிக்கு மாத்தறை புகையிரத நிலையத் தையும் சென்றடையும். வடக்கு தெற்குக்கான உறவுப் பாலமாக இந்த போக்குவரத்து சேவை செயற்படுவதாக சுட்டிக்காட்டப்படுகின்றது. (அ-2)

## அமைச்சர்கள் மாநாட்டில் இலங்கை விடயம் அவுட்

(கொழும்பு)

பொதுநலவாய நாடுகள் வெளிவிவகார அமைச்சர்கள் மாநாட்டில் இலங்கை குறித்து பேசப்படமாட்டாது என தெரிவிக்கப்படுகிறது. பொதுநலவாய நாடுகள் வெளிவிவகார அமைச்சர்கள் மாநாடு நேற்றுமுன்தினம் நியூயோர்க்கில் ஆரம்பமானது. இம் மாநாட்டின் நிகழ்ச்சி நிரலில் இலங்கை விவகாரம் உள்ளக்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறெனினும் பிஜி தீவுகள் குறித்தே வெளிவிவகார அமைச்சர் மாநாட்டில் முக்கிய கவனம் செலுவுத்தப்படவுள்ளது. மாலைதீவு விவகாரம் குறித்தும் வெளிவிவகார அமைச்சர்கள் கூட்டு அறிக்கை ஒன்றை வெளியிடவுள்ளனர்.

இலங்கை விவகாரம் குறித்து விவாதம் நடத்தப்பட வேண்டுமென மனித உரிமை அமைப்புக்கள் கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

## கூட்டமைப்பின் வெற்றி நல்லுறவை ஏற்படுத்தும்

(கொழும்பு)

தேர்தல் முடிவுகள் நல்லிணக்கத்தை ஏற்படுத்த வழிகோலும் என அவுஸ்திரேலியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் திசரசமரசிங்க தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நீண்டகால யுத்தத்தின் பின்னர் ஜனநாயக ரீதியாக தேர்தல் நடத்தப்பட்டுள்ளது.

இதன்பேறாக வட மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றியீட்டியமை இலங்கையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் எனவும் நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவதே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இலக்காக அமைந்துள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சர்வதேச அழுத்தங்கள் காரணமாக மாகாணசபைத் தேர்தல்கள் நடத்தப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார். (அ-2)

## ஒக்டோபர் 21 முதல் 27 வரை உணவுப் பாதுகாப்பு வாரம்

கடைகளில் விற்பனை செய்யப்படும் உணவுகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்த கடும் அவதானம் செலுத்துமாறு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் டாக்டர் பாலித மஹிபால சகல உணவு, மருத்துவ பரிசோதகர்களை கேட்டுள்ளார்.

உணவுப் பாதுகாப்பு தொடர்பான உத்தேச வேலைத் திட்டம் குறித்து பொரளை மருத்துவ ஆராய்ச்சி நிறுவன கேட்போர் கூடத்தில் மருத்துவப் பரிசோதகர்களுக்கு விளக்கம் ஒன்றை அவர் அளித்தார்.

எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 21 ஆம் திகதி முதல் 27 ஆம் திகதி வரையான காலப் பகுதி தேசிய உணவுப் பாதுகாப்பு வாரத்தைப் பிரகடனம் செய்யுமாறு சுகாதார அமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

ஒக்டோபர் மாதம் 16 ஆம் திகதி உலக உணவு தினத்தை ஒட்டி இது பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

உணவு விஷம் காரணமாக சீனா மற்றும் அமெரிக்காவில் ஆயிரக்கணக்கானோர் பலியாகின்றனர். இலங்கையிலும் கடந்த பல வருடங்களாக ஏராளமானோர் உணவு விசமாக மாறியதில் பலியாகியுள்ளமையை புள்ளி விபரங்கள் மூலம் அறிய முடிகின்றது.

1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க உணவுச் சட்டத்தை மீறும் நபர்களுக்கு எதிராக சட்டத்தை கடுமையாக அமுல்படுத்த வேண்டும். அத்தோடு உணவுப் பாதுகாப்பு தொடர்பாக எடுக்க வேண்டிய சகல நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

## சிறுவர் தின விழாவில் முதற்பெண்மணி

(கொழும்பு)

சர்வதேச சிறுவர் தினத்தையொட்டி ஜனாதிபதி செயலக மத விவகாரங்களுக்கான பிரிவு ஏற்பாடு செய்துள்ள சிறுவர் கலாசார விழா முதல் பெண்மணி திருமதி ஷிராந்தி ராஜபக்சவின் தலைமையில் எதிர்வரும் ஒக்டோபர் முதலாம் திகதி காலி முகத்திடலில் அமைந்திருக்கும் கிறிஸ்து ஆலய அரங்கில் நடைபெறவுள்ளது.

அரசாங்கத்தின் சிரேஷ்ட அமைச்சர்கள் மற்றும் பிரபல கலைஞர்கள் பலரும் கலந்து கொள்ளவுள்ள இவ்விழாவில் வடக்கு கிழக்கு மலையக பெருந்தோட்டப் பகுதி சிறுவர்களது கலை, கலாசார நிகழ்ச்சிகள் அரங்கேற்றப்படவுள்ளன.

சர்வதேச சிறுவர் தினம் ஒக்டோபர் முதலாம் திகதி அனுஷ்டிக்கப்பட இருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (அ-2)

## வங்கி அட்டைமுறைகேடு; இலங்கையர் கைது

(கொழும்பு)

பிரித்தானியாவின் க்ளொவ்ஸ்டர் செயர் பிரதேசத்தில் தொடர்ச்சியான தன்னியக்க கருவியில் பண மோசடி செய்ததாக குற்றம் சுமத்தப்பட்ட இலங்கையர்கள் நால்வர் நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டனர்.

இவர்கள் கடந்த 23 ஆம் திகதி கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் மீது பிரித்தானிய வங்கி களில் வங்கி அட்டைகளின் மூலம் முறைகேடுகளை மேற்கொண்ட குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது. (அ-2)



இணுவில் பொது நூலக சனசமூக நிலைய தகவல் தொழில் நுட்ப கட்டடம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. உடுவில் பிரதேச செயலர் மு.நந்தகோபால் கட்டடத்தை திறந்து வைப்பதையும் பார்வையிடுவதையும் படங்களில் காணலாம்.

# பாகிஸ்தானில் ஒரு இலட்சம் மக்கள் உணவு, குடிநீரின்றி தவிப்பு





பாகிஸ்தானில் பூகம்பம் தாக்கிய பகுதியில் உணவு, குடிநீரின்றி ஒரு இலட்சம் மக்கள் தவிக்கின்றனர்.

பாகிஸ்தானின் தென் மேற்குப் பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை பயங்கர நில அதிர்வு ஏற்பட்டது.

இதன்போது 515 பேர் உயிரிழந்தனர். 620பேர் காயம் அடைந்தனர்.மீட்பு நடவடிக்கையில் 10 உலங்குவானூர்திகளும் ஆயிரம் இராணுவத்தினரும் ஈடுபட்டு வருகின்றனர்.

எனினும் இந்த பூகம்பம் தாக்கிய பகுதியில் சுமார் ஒரு இலட்சம் மக்கள் உணவு, குடிநீர், மருத்துவ வசதிகள் இன்றி வெட்டவெளியிலேயே தங்கியிருக்கிறார்கள். இவர்களை மீட்டு அழைத்து வருவதற்கு போதிய உலங்குவானூர்திகள் இல்லாமையே காரணம் என்று கூறப்படுகிறது. இதனால் கூடுதலாக நவீன சி-130 ரக ஹெலிகொப்டர்களை அனுப்பி வைக்க பிரதமர் நவாஸ் ஷெரீப் உத்தரவிட்டார். பூகம்பம் பாதித்த பகுதிக்கு 2ஆயிரத்து 600 கூடாரங்கள் மற்றும் உணவு பொட்டலங்கள், குடிநீர் போத்தல்களை அனுப்பி மீட்பு நடவடிக்கை இரவு, பகலாக நடைபெற்று வருவதாக அதிகாரிகள் கூறினர்.

இதேவேளை நிலநடுக்கத்தின் அதிர்வுகள் அடங்கிய நிலையில் க்வாடர் நகரத்தின் கடற்கரைப் பகுதியில் வாழும் மக்கள் ஒரு புதிய தீவு ஒன்று கடற்பரப்பில் தோன்றியுள்ளதைப் பார்க்க நேர்ந்தது.

இந்தப் புதிய தீவு 600 அடி விட்டமும் 30 அடி உயரமும் உள்ளது என்று இயற்கைக்கான உலகளாவிய நிதியம் அமைப்பின் தொழில்நுட்ப ஆலோசகரான முகமது மோசம் கான் தெரிவித்தார்.

கற்களும், மென்மையான மண்ணும் நிரம்பியுள்ள இந்தத் தீவின் மேற்பரப்பில் வாயு வெளியேறிக் கொண்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இது தவிர பலுசிஸ்தான் கடற்பகுதியிலும் இரண்டு புதிய தீவுகள் தோன்றியுள்ளன.

ஓமாரா நகரின் அருகேயுள்ள இந்தத் தீவுகள் சிறியவை என்றும், 30-40 அடி விட்டமும், 2-3 அடி உயரமும் கொண்டவை என்றும் கான் தெரிவித்தார். இந்தத் தீவுகளில் இருந்தும் வாயு வெளிவந்து கொண்டிருப்பதாக அவர் கூறினார்.

இதேவேளை பாகிஸ்தான் பலுசிஸ்தான் மாகாணத்தில் நேற்று நிலநடுக்கம் உணரப்பட்டுள்ளது.

இது கராச்சியிலிருந்து 250 கிலோமீற்றர் தூரத்தில் மையங்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலநடுக்கம் ரிக்டர் அளவு கோலில் 7.2 ஆக பதிவாகியுள்ளதென பாகிஸ்தானின் இடர்முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

பாகிஸ்தானில் ஏற்பட்ட நிலநடுக்கத்தின் அதிர்வு டில்லி உள்ளிட்ட இந்தியாவின் வடமாநிலங்களில் உணரப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (2)

## இராட்சத குளவிகள் கூட்டம் தாக்கி 28 பேர் உயிரிழப்பு

சீனாவில், இராட்சத குளவிகள் கூட்டமாக வந்து தாக்கியதில் கடந்த மூன்று மாதங்களில் 28 பேர் உயிரிழந்துள்ளனர்.

சீனாவின் ஷான்சி மாகாணத்தில் ஆன்காங் உள்ளிட்ட பகுதிகளில், இராட்சத குளவிகள் அதிகம் காணப்படுகின்றன. குறிப்பாக, மே மாதம் முதல் நவம்பர் மாதம் வரை வெப்பம் அதிகம் உள்ள காலங்களில் இவை கூட்டமாக பறந்து திரிகின்றன.

இந்த சமயத்தில் அங்குள்ள மக்கள் மீது இவை தாக்குதல்களை நடத்துகின்றன.

கடந்த மூன்று மாதங்களில், இராட்சத குளவிகள் கொட்டியதில் 28 பேர் உயிரிழந்துள்ளனர்.

இராட்சத குளவிகளின் கொடுக்குகள் அதிக விஷம் உள்ளவை. இந்த குளவிகள் தாக்கிய நபர்கள் சிறுநீரக கோளாறாலும் பல்வேறு ஒவ்வாமைகளாலும் பாதிக்கப்படுகின்றனர். இந்த குளவிகள், ஒரே நேரத்தில் 200 மீற்றர் தூர நீளத்துக்கு கும்பலாக பறக்கும். அந்த சமயத்தில் யாராவது எதிர்ப்பட்டால் அவர் கதி, அதோகதி தான் எனக் கூறப்பட்டுள்ளது. (2)




# செவ்வாய்க்கிரகத்தில் தண்ணீர் கண்டுபிடிப்பு


செவ்வாய்க் கிரகத்தின் மேற்பரப்பில் உள்ள மண்ணில் தண்ணீர் இருப்பதாக நாசாவின் ரோவர் விண்கலம் நடத்திய ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் நாசா விண்வெளி ஆய்வு நிலையம் கடந்த 2012ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதத்தில் ஆய்வுப் பணிக்காக ரோவர் விண்கலத்தை செவ்வாயக் கிரகத்திற்கு அனுப்பியது.

அதன் மூலம் சேகரிக்கப்பட்ட மாதிரிகளின் முதல் ஆய்வு தற்பொழுது நடைபெற்றுள்ளது. அதில், செவ்வாய்க் கிரகத்தில் உள்ள மண்ணில் தண்ணீர் இருப்பது தெரிய வந்துள்ளது.

இதுகுறித்து நாசா விஞ்ஞானிகள் கூறுகையில்,

செவ்வாய்க் கிரகத்தின் மேற்பரப்பில் உளள மண்ணில் 2 சதவிகிதம் தண்ணீர இருப



பதற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன.

மேலும் இந்த மண்ணில் கார்பன் டை ஆக்ஸைடு, ஒட்சிசன் மற்றும் சல்பர் மூலக் கூறுகள் இருப்பதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்றும் இந்தத் தகவல் செவ்வாய்க் கிரகத்தில் தண்ணீர் இருப்பதற்கான கண்டுபிடிப்பில் நல்ல முன்னேற்றத்தைத் தந்துள்ளதெனவும் விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.(2)

# பெற்றோல் விலையுயர்வை எதிர்த்து சூடான் மக்கள் போராட்டம்

## துப்பாக்கிச் சூட்டில் 50பேர் பலி



சூடானில் பெற்றோல் விலை உயர்வை எதிர்த்து போராட்டம் நடத்தியவர்கள் மீது துப்பாக்கி சூடு நடத்தியதில் 50 பேர் பலியாகினர்.

சூடான் நாட்டில் சமீபத்தில் பெற்றோல் மற்றும் டீசல் விலை உயர்த்தப்பட்டது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து பொதுமக்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இந்த நிலையில், நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை தொழுகை முடித்துவிட்டு இளைஞர்கள் பெருமளவில் போராட்டத்தில் ஈடுபட்டனர். சுமார் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் தலைநகர் கார்மோம் மற்றும் அதன் துணை நகரமான ஓம்துர் மான் நகரிலும் திரண்டு போராட்டம் நடத்தினர். இதன் போது பல பெற்றோல் பங்குகள் மற்றும் வர்த்தக நிறுவனங்கள் தீ வைதது கொளுத்தப்பட்டன.

அப்போது போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது அங்கு குவிக்கப்பட்டிருந்த பொலிஸார் சரமாரியாக துப்பாக்கி சூடு நடத்தினர். இச்சம்பவத்தில் 50 பேர் அதே இடத்தில் பலியாகினர்.

மேலும் பலர் காயம் அடைந்தனர். அவர்கள் அனைவரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். (2)

# இந்தியாவுடன் பேச பாக்.தயாராகவுள்ளது

## நவாஸ் ஷெரீப் தெரிவிப்பு

இந்தியாவும் பாகிஸ்தானும் இணைந்தால் இருதரப்புக்கும் பலன் கிடைக்கும் என பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் தெரிவித்துள்ளார்.ஐ.நா.பொதுச்சபைக்கூட்டத்தில் காஷ்மீர் விவகாரம் தொடர்பாக பேசிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.


அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், காஷ்மீர் பிரச்சினை நெடுங்காலமாக தீர்க்கப்படாது இருக்கிறது என்று தமக்கு முந்தைய பாகிஸ்தான் பிரதமர்களை போல நவாஷ் ஷெரீப்பும் புகார் கூறினார். காஷ்மீர் மக்களுக்கு சுயநிர்ணய உரிமை கிடைக்க ஐ.நா. கவனம் செலுத்த வேண்டும் அவர் கேட்டுக் கொண்டார்.

இதுதொடர்பாக ஐ.நா பாதுகாப்பு சபையில் எழுப்பப்பட்ட கோரிக்கை 70 ஆண்டு காலமாக கிடப்பில் இருப்பதாக அவர் குற்றம் சாட்டியதோடு காஷ்மீர் பிரச்சினை தொடர்பாக தமது நாட்டின் ஒட்டுமொத்த ஆதங்கத்தையும் வெளிபடுத்தியுள்ளார். நவாஸ் ஷெரீப், மேலும் இந்தியாவும் பாகிஸ்தானும் இணைந்து செயற்பட்டால் அது இருதரப்புக்கும் ஏராளமான நன்மைகளை கொடுக்கும் என்றும் கூறினார்.



இதற்காக இந்தியாவுடன் பேச்சுவார்த்தை நடத்த பாகிஸ்தான் தயாராக இருக்கிறது என்றும் அமைதி பேச்சுவார்த்தையில் ஈடுபட தாம்தயார் என நவாஸ் ஷெரீப் பேசியுள்ளார். இவ்வாறு அவர் பேசுவதற்கு சில மணிநேரத்துக்கு முன்னதாக எல்லையில் இந்திய நிலைகள் மீது பாகிஸ்தான் படையினர் அத்துமீறி துப்பாக்கிச் சூடுகளை நடத்தினர்.

காஷ்மீரின் பூஞ்ச் மாவட்டத்தில் மெந்தார் என்ற இடத்தில் இந்திய நிலைகள் மீதே பாகிஸ்தான் இராணுவத்தினர் கண்மூடித்தனமாக இந்த துப்பாக்கிச் சூடுகளை நடத்தினர் என்று இதற்கு இந்திய இராணுவத்தினரும் தகுந்த பதிலடி கொடுத்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (2)




பீஜிங்கில் உள்ள கிரேட் அரங்கத்தில் ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி ஹமீர் கர்சாய் சீனப்பிரதமர் லீ கெஹியாங்கை சந்தித்து கைலாகு கொடுப்பதை படத்தில் காணலாம்.


# இந்திய சினிமா நூற்றாண்டு விழா




தமிழக முதல்வர் மங்கல விளக்கேற்றுகிறார்



5 நாயகர்கள் அருகருகே



ரஜனிக்கு விருது வழங்கும்போது...



கமலுக்கு விருது வழங்கும்போது..

தமிழக அரசின் துணையுடன் இந்திய சினிமாவின் நூற்றாண்டு விழா சிறப்பாக நடைபெற்றது. ஆனால் திரைக்கு மறைவில் நடந்த பல விடயங்கள் பெரும் சுவாரஸ்யமாக உள்ளன. திரையுலகினரும், திரையுலகம் சம்பந்தப்பட்டவர்களும் இந்த கசமு சாக்கள் குறித்து பெரும் மன வேதனையிலும், விரக்தியுடனும், கோபத்திலும் உள்ளனராம்.

## இறுதி நேரத்தில் கருணாநிதிக்கு

திமுக தலைவர் கருணாநிதிக்கு விழா தொடங்குவதற்கு சில மணி நேரங்களுக்கு முன்புதான் அவருக்கே அழைப்பு கொடுத்தார்களாம். இப்பத்தான் என் ஞாபகம் வந்ததா என்று அழைப்பிதழுடன் வந்தவர்களிடம் கருணாநிதி சிரித்தபடி கேட்டாராம். ஆனால் அதற்கு அவர்களால் பதில் சொல்ல முடியாமல் போனதாம்.

## 590 பேருக்கு விருது

590 பேருக்கு இந்த விழாவில் விருது கொடுத்தனர். 29 பேருக்கு கொடுத்து முடித்த பிறகுதான் ரஜினிகாந்த் அழைக்கப்பட்டார். மேடையேறி வந்த ரஜினி, விருதை வாங்கிய கையோடு வேகமாக கீழே இறங்கிப் போய் விட்டார்.

கமல்ஹாசனுக்கு விருது வழங்கிய போது முதல்வர் முகத்தில் சலனம் இல்லை. கமல்தான் பாவம், ரொம்பக் கஷ்டப்பட்டு சிரித்தபடி விருதை வாங்கிக் கொண்டு இடத்தைக் காலி செய்தாராம்.

ரஜினிகாந்த்தும், கமல்ஹாசனும் உரையாற்றியபோது அனைவரும் அதை உன்னிப்பாக கவனித்தனர். குறிப்பாக, கமல்ஹாசனை ரஜினிகாந்த் வெகுவாக புகழ்ந்து பேசினார். அவரை மகான் என்றும் குறிப்பிட்டு பெருமைப்படுத்திப் உரையாற்றினார்.

விழாவில் விஜய்யும் உரையாற்றினார். தலைவா வலியிலிருந்து இன்னும் கூட மீளாத அவர் முகத்தில் வரவழைத்துக் கொண்ட கஷ்டமான புன்னகையுடன் முதல்வர் ஜெயலலிதாவை வாழ்த்திப் பேசினார். பேச்சின்போது, எவ்வளவோ செய்து விட்டார் முதல்வர் என்று அவர் கூறியதை பலரும் கேட்டு சிரித்துக்கொண்டிருந்தனர்.

ஒரு வீடியோ படத்தையும் தென்னிந்திய திரைப்பட வர்த்தக சபை தயாரித்து ஒளிபரப்பியது. அதில் பலருடைய படங்கள், புகைப் படங்கள், படக் காட்சிகள் இடம்பெற்றன. அதில் கருணாநிதி, விஜய் ஆகியோர் சில விநாடிகளே பிளாஷ் போல வந்து போயினர். அதிலும் விஜயகாந்த் நடித்த 2 படங்களின் காட்சியைக் காண்பித்தவர்கள், அதில் விஜயகாந்த் முகம் தெரியாதது போல பார்த்துக் கொண்டது ரொம்பவே குறிப்பிடத்தகுந்தது.

வந்தவர்களை விட வராத பிரபலங்களின் பட்டியல்தான் மிகப் பெரியது. தமிழ் சினிமாவுக்குத் தனித் தரத்தையும், அடையாளத்தையும் கொடுத்த பிதாமகர்களான பாலுமகேந்திரா, பாரதிராஜா, கவுண்டமணி, எம்.எஸ்.விஸ்வநாதன், வடிவேலு, எஸ்.பி. பாலசுப்ரமணியம், ஷங்கர், மணிரத்னம், பி.சுசீலா, எஸ்.ஜானகி என பலரையும் காணவில்லை.

இசைப் புயல் ஏ.ஆர்.ரஹ்மானுக்கு இந்த விழாவில் விருது கொடுக்கப்படவில்லை. தமிழ் சினிமாவைப் பெருமைப்படுத்தும் அளவு 2 ஒஸ்கார் விருதுகளை வாங்கியவர் அவர். ஆனால் செம்மொழியான தமிழ் மொழியாம் என்று பாட்டுப் போட்டதால் அவருக்கு விருது கிடைக்காமல் போய் விட்டதாக சொல்லிக் கொள்கிறார்கள்.

## சமந்தாவின் கவலை



தான் நடித்த திரைப்படம் வெளியாவதற்கு முன்னரே காட்சிகள் வெளியானதால் கவலையில் உள்ளார் சமந்தா.

பவன் கல்யாண், சமந்தா மற்றும் பலர் நடிக்க த்ரிவிக்ரம் இயக்கியுள்ள படம் அத்தரின்டிக்கி தாரெடி.

பவன் கல்யாண் நடிப்பில் வெளியான 'கபார் சிங்' படம் ஆந்திராவில் வசூல் மழை கொட்டியது.

அவரது நடிப்பில் அடுத்து 'அத்தரின்டிக்கி தாரெடி' படம் தான் வெளியாகிறது என்பதால் ஏகத்திற்கு எதிர்பார்த்தார்கள்.

ஓகஸ்ட் 9ஆம் திகதி வெளியாக வேண்டிய இப்படம் தெலுங்கானா பிரச்சினையால் காலதாமதம் ஆனது.

தசரா விடுமுறையை முன்னிட்டு வரும் ஒக்டோபர் 9ஆம் திகதி படத்தை வெளியிட திட்டமிட்டிருந்த நிலையில், 90 நிமிட அளவுக்கு படம் இணையத்தில் வெளியாகி அதிர்ச்சியளித்துள்ளது.

அதாவது கிட்டத்தட்ட பாதிப் படம் வெளியாகி விட்டது.

இந்நிலையில் அப்படத்தின் நாயகியான சமந்தா தனது ட்விட்டர் பக்கத்தில், அத்தரின்டிக்கி தாரெடி படத்தில் நிறைய பேரின் உழைப்பு அடங்கியிருக்கிறது.

அதுமட்டுமல்ல, படத்தின் பட்ஜெட்டும் மிக அதிகம். ஆகையால் அனைவருமே தயவுசெய்து திரையரங்கில் படத்தினை ரசியுங்கள். இது எங்கள் தாழ்மையான வேண்டுகோள் எனத் தெரிவித்துள்ளார்.



## சூர்யாவின் எக்ஸிமோ காதல்

குறும்பட இயக்குநர் நலன் குமரசாமி தனது அடுத்த படத்திற்கான அறிவிப்பை விடுத்துள்ளார். இந்த படத்தை திருக்குமரன் என்டர்டெய் மெண்ட் நிறுவனமே தயாரிக்கவுள்ளதாம்.

இப்படத்திற்கு எஸ்கிமோ காதல் என்று பெயரிட்டுள்ளனர்.

மேலும் இப்படத்தை பற்றிய ஏனைய தகவல்கள் விரைவில் அறிவிக்கப்படும் என்று படக்குழு தெரிவித்துள்ளது.

ஏற்கனவே இதே நலன் இயக்கத்தில் தான் சூர்யா நடிக்க விருப்பதாக கோலிவுட்டில் தண்டோரா அடிக்கப்பட்டது.

ஆனால் அது இந்த படத்தில் தானா என்பது பொறுத்திருந்து தான் பார்க்கவேண்டும்.

சூர்யா தற்போது கௌதம் மேனனின் "துருவ நட்சத்திரம்" மற்றும் லிங்குசாமியின் பெயரிடப்படாத ஒரு படத்திலும் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## சுவிசுக்கு செல்கின்றது கதிர்வேலன் காதல் படக்குழு



உதயநிதியோடு டூயட் பாட சுவிட்சர்லாந்து செல்கிறாராம் நயன்தாரா. ஒரு கல் ஒரு கண்ணாடி பிரமாண்ட வெற்றியைத் தொடர்ந்து உதயநிதி நடிக்கும் திரைப்படம் இது கதிர்வேலன் காதல்.

இதில் உதயநிதிக்கு ஜோடி போட்டுள்ளார் நயன்தாரா.

இவர்களுடன் இப்படத்தில் சந்தானம், சாயாசிங் மற்றும் பலர் நடித்துவருகின்றனர். இப்படத்தை சுந்தரபாண்டியன் புகழ் எஸ்.ஆர்.பிரபாகரன் இயக்கி வருகிறார்.

காதல் மற்றும் நகைச்சுவை கலந்த இப்படத்தின் படப்பிடிப்பானது பரபரப்பாக நடந்து கொண்டிருக்கும் நிலையில் சுவிஸ் நாட்டிற்கு பறக்கிறார்களாம்.

அங்கிருந்துகொண்டு ஸ்பெயின் மற்றும் போர்சுகல் நாட்டிற்கு செல்கிறார்களாம்.

ரெட் ஜெயண்ட் மூவிஸ் தயாரிக்கும் இப்படத்திற்கு ஹாரிஸ் ஜெயராஜ் இசையமைக்கிறார்.

# இந்தியா-அமெரிக்கா இடையே அணுசக்தி துறையில் ஒப்பந்தம்

(டில்லி)

**இந்தியா-அமெரிக்கா இடையே அணுசக்தி துறையில் முதல் வர்த்தக ஒப்பந்தம் கையெழுத்தானது. இந்தியா-அமெரிக்கா இடையே கடந்த 5 ஆண்டுகளுக்கு முன்பு அணுசக்தி ஒத்துழைப்பு ஒப்பந்தம் கையெழுத்தானது. அதன்பின் முதன்முறையாக இந்த துறையில் வர்த்தக ரீதியிலான முதல் ஒப்பந்தம் நேற்றுமுன்தினம் கையெழுத்தானது.**

அமெரிக்கா சென்றுள்ள பிரதமர் மன்மோகன்சிங், நேற்று முன்தினம் வெள்ளை மாளிகையில் ஜனாதிபதி ஒபாமாவை சந்தித்து பேசினார். பின்னர் அவர்கள் இருவரும் கூட்டாக நிருபர்களுக்கு பேட்டி அளித்தனர்.



அதன் போது, கடந்த சில நாட்களில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின்போது, இந்திய அணுசக்தி கழகத்திற்கும், அமெரிக்க நிறுவனம் ஒன்றுக்கும் இடையே இந்தியாவில் அணுசக்தி மின் திட்டம் அமைப்பது தொடர்பாக முதல் வர்த்தக ஒப்பந்தம் கையெழுத்தானதாக ஒபாமா தெரிவித்தார்.

அதே நேரத்தில், இந்தியா நிறைவேற்றியுள்ள அணுமின் திட்ட விபத்து இழப்பீடு சட்டத்திற்கு அமெரிக்கா எதிர்ப்பு தெரிவித்து வருவது குறித்து, ஒபாமா தனது பேட்டியில் எதுவும் குறிப்பிடவில்லை.

மேலும் இந்தியாவுடனான நல்லுறவை வலுப்படுத்த தான் உறுதி பூண்டு இருப்பதை மீண்டும் வலியுறுத்திய அவர், இந்தியா ஆசிய அளவில் மட்டுமின்றி உலக அளவிலும் பெரிய சக்தியாக விளங்கி வருவதாக கூறினார்.


பிரதமர் மன்மோகன்சிங்கும் இரு நாட்டு நல்லுறவு மேம் பாட்டில் ஒபாமாவின் கருத்தை பிரதிபலித்தார்.

இதேவேளை பிரதமர் மன்மோகன்சிங், தனது பேட்டியின் போது பாகிஸ்தான் பயங்கரவாதத்தின் மையப்பகுதியாக தொடர்ந்து திகழ்ந்து வருவதாக கூறினார்.

தீவிரவாதிகளின் சொர்க பூமியாக பாகிஸ்தான் திகழ்வதாகவும் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவிடம் பிரதமர் மன்மோகன்சிங் புகார் தெரிவித்துள்ளார்.

அத்துடன் பாகிஸ்தான் மீது அடுக்கடுக்கான புகார்களை தெரிவித்த அவர் ஜம்மு காஷ்மீரில் இராணுவமுகாம், காவல் நிலையம் மீதான தாக்குதலை சுட்டிக்காட்டி, இந்தியாவின் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டை போடும் விதமாக பாகிஸ்தான் மாறிவருவதாக கூறி னார்.

மேலும் பல்வேறு துறைகளில் இந்தியாவின் முக்கியவத்துவம் வாய்ந்த கூட்டாளியாக அமெரிக்கா திகழ்கிறது என்றும் இரு நாட்டு நல்லுறவு மேம்பட கடந்த காலங்களில் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்றும் வருங்காலத்திலும் நல்லுறவு மேலும் வலுப்பெற எடுக்க வேண்டிய உத்திகள்குறித்து இருவரும் ஆலோசனை நடத்துவோம். இந்தி யாவின் மேம்பாட்டுக்கு அமெரிக்கா பொருளாதார ரீதியாகவும், தொழில் நுட்ப ரீதியாகவும் ஆதரவளித்து வருகிறது. மேமபாட்டுத் திட்டங்க ளுக்கு புதிய பரிமாணம் அளிக்க முயற்சி மேற்கொள்ளப்படும் எனவும் கூறினார். (2)





உலக சுற்றுலா தினத்தையொட்டி ஒடிசாவின் புரி கடற்கரையில் மணல் சிற்ப கலைஞர் மனஸ் சாஹு உருவாக்கியுள்ள மணல் சிற்பத்தினை படத்தில் காணலாம்.

## பாரதச் செய்தி

# பயணிகள் பேருந்து கவிழ்ந்ததில் 21 பேர் பலி

(சிம்லா)

இமாச்சல பிரதேசத்தில், பயணிகளை ஏற்றிச் சென்ற மினி பேருந்து, மலைப்பாதையிலுள்ள பள்ளத்தில் கவிழ்ந்ததில் 21 பேர் பலியாயினர். சர்மாவூர் மாவட்டத்தில் மலைப்பாதையில 21 பயணிகளுடன் சென்ற, மினி பேருந்து திடீரென கட்டுப் பாட்டை இழந்து 600 அடி பள்ளத்தில் கவிழ்ந்தது. இதில், 19 பேர், சம்பவ இடத்திலேயே பலியாகினர். பலத்த காயம் அடைந்த இருவர் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் இறந்தனர்.



விபத்து குறித்து தகவல் அறிந்த பொலிஸார் விரைந்து சென்று உடல்களை மீட்கும் பணியில் ஈடுபட்ட னர். மழை பெய்ததால் மீட்புப் பணி யில் தொய்வு ஏற்பட்டதாக கூறப்பட்டுள்ளது. (2)

# இலங்கை அரசு பறிமுதல் செய்த விசைப்படகுகள் மீட்கப்படும்


## ஜி.கே.வாசன் உறுதி

நாகபட்டினம், புதுக்கோட்டை, இராமநாதபுரம், கடலூர், காரைக்கால் மாவட்டங்களை சேர்ந்த மீனவர் சங்க பிரதிநிதிகள் நேற்று சத்திய மூர்த்திபவன் வந்தனர். அனைவரும் மத்திய மந்திரி ஜி.கே.வாசனை சந்தித்து தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்தினார்கள்.

அப்போது மீனவர் தரப்பில் பேசிய பிரதிநிதிகள், 'நமது கடலில் 12 நாட்டிக்கல் மைல் தூரம்வரை சென்று மீன் பிடிக்க உரிமை உள்ளது. ஆனால் இலங்கை கடற்படையினர அதைவிட குறைந்த தூரம் செல்லும் நமது மீனவர்களை அத்து மீறி நுழைவதாக கூறி கைது செய்கிறார்கள்.

மீனவர்களை சித்திரவதை செய்வதுடன், படகுகளையும் பறிமுதல் செய்து விடுகின்றனர். இதனால் எங்களின் தொழில்பாதிக்கப்படுகிறது. பல இலட்சம் இழப்பும் ஏற்படுகிறது. எனவே இலங்கை கடற்படை பறிமுதல் செய்துள்ள படகுகளை மீட்டு தர வேண்டும். சிறையிலுள்ள மீனவர்களையும் உடடியாக மீட்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்கள்.

இதற்கு பதில் அளித்த ஜி.கே.வாசன், "மத்திய அரசின் அழுத்தம் மற்றும் வலியுறுத்தல் காரணமாகவே சிறைபிடிக்கப்படும் நமது மீனவர்கள் விடுவிக்கப்பட்டு வருகிறார்கள். தற்போது இலங்கை சிறையில் இருக்கும் மீனவர்களும் அடுத்த வாரத்துக்குள் விடுவிக்கப்படுவார்கள் என்று நம்பிக்கையுள்ளது.



படகுகளையும் ஒரு வாரத்துக்குள் மீட்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. எதிர்வரும் 7ஆம் திகதி மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் இலங்கை செல்கிறார். அதற்கு முன்னதாக அவரிடம் நமது பிரச்சினைகளை எடுத்துக் கூறுவோம். தமிழக மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்காத வகையில் மீனவர் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வுகாண தமிழக காங்கிரஸ் வலியுறுத்தி வருகிறது. மத்திய அரசு நிச்சயம் நடவடிக்கை எடுக்கும்" என்று மீனவர்களுக்கு உறுதி அளித்தார். (2)

# இலங்கையில் நடந்தது போர் அல்ல தமிழர்களுக்கெதிரான படுகொலை

## ராமதாஸ் தெரிவிப்பு

இலங்கையில் நடைபெற்றது போரா அல்ல, தமிழ்ாக்ளுக்கு எதிராக நடத்தப்பட்ட இனப் படுகொலையாகும்.

இவ்வாறு ஜெனீவாவில் நடைபெற்ற மனிதவுரிமை ஆணைய கூட்டத்தில் பங்கேற்று விட்டு சென்னை திரும்பியுள்ள மத்திய அமைச்சர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

நாடு திரும்பிய அவருக்கு சென்னை விமான நிலையத்தில் வைத்து உற்சாக வரவேற்பு அளிக்கபட்டது.

அதன் பின்னர் அவர் நிருபர்களிடம் கூறுகையிலே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தொடர்ந்து கூறுகையில்,

ஜெனீவாவில் நடைபெற்ற மனித உரிமை ஆணைய கூட்டத்தில் இந்தியாவில் இருந்து பசுமை தாயகம் சார்பில் கலந்து கொண்டு பேசினேன். அப்போது இலங்கையில் நடந்தது போர் அல்ல தமிழர்களுக்கு எதிராக நடத்தப்பட்ட இனப்படுகொலை என்பதை விளக்கினேன்.

இந்த இனப் படுகொலைக்கு காரணமான அனைவரையும் தண்டிக்க வேண்டும். சுதந்திரமான பன்னாட்டு விசாரணை வேண்டும் என்று வலியுறுத்தினேன்.

ஐ.நா.மனித உரிமை ஆணையாளர் நாயகம் நவநீதம்பிள்ளை இலங்கைக்கு சென்று அங்குள்ள நிலைமைகளை நேரில் பார்த்து தாக்கல் செய்துள்ள அறிக்கையை நாங்கள் வரவேற்கிறோம்.

அந்த அறிக்கையில் இலங்கை இராணுவத்தின் அத்துமீறல், தமிழர்கள் தாக்கப்படுவது, பெண்களுக்கு எதிரான பாலியல் கொடுமை, தமிழர்கள் பகுதியில் சிங்களர்கள் குடியமர்த்தப்படல் ஆகியவை சுட்டி காட்டப்பட்டுள்ளன. அந்த அறிக்கையின் படி ஐ.நா. மன்றம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

புலம் பெயர்ந்த தமிழர்களும் இந்திய அரசு இலங்கைக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்பதையே எதிர்பார்க்கிறார்கள். இந்தியா அழுத்தம் தராவிட்டால் பாகிஸ்தான், சீனா போன்ற நாடுகளால் நம் நாட்டுக்கு பாதகம் ஏற்படும். (2)

# இலங்கையைக் காப்பாற்ற முயற்சிக்கிறதா இந்தியா?

ஐ.நா. மனித உரிமைப் பேரவையின் 24வது கூட்டத் தொடர் ஜெனிவாவிலுள்ள ஐ.நா. பணிமனையில் நடைபெற்று முடிந்துள்ளது. அங்கு இலங்கைக்கு எதிராக ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் கடுமையான குற்றச்சாட்டுகளை சுமத்தியுள்ளார்.




ஆனால், இந்தியா மீண்டும் இலங்கையைக் காப்பாற்ற கொடிபிடிக்க ஆரம்பித்து விட்டது. வட மாகாணசபைத் தேர்தலை இலங்கை அரசு நடத்தியதை நவநீதம்பிள்ளை கவனத்தில் எடுக்கத் தவறிவிட்டார் என இந்திய பிரதிநிதி அங்கு தெரிவித்துள்ளார்.

வட மாகாணசபைத் தேர்தலை நடத்துமாறு இந்தியா கேட்டுக்கொண்டதேயன்றி வட மாகாண மக்கள் கேட்கவில்லையே. அந்தத் தேர்தல் தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைக்கு எந்தத் தீர்வையும் தராது என்பது அவர்களின் முடிவு.

அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்க்க நவநீதம்பிள்ளை இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்கிறார்.

ஆனால், இந்தியா அதனைத் திசை திருப்ப முயற்சிக்கின்றது. வட மாகாண சபைத் தேர்தல் இராணுவக் கெடுபிடிகளுக்கு மத்தியில் நடைபெற்று முடிந்தது. இப்போது அங்கு என்ன நடக்கின்றது என்பது இந்தியாவுக்குத் தெரியுமா?

ஏன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களித்தீர்கள் எனக் கேட்டு அதிகார வர்க்கத்தில் உள்ளோர் தாக்குதலில் ஈடுபட்டுள்ளார்கள். பல இடங்களில் தமிழர்கள் தாக்கப்படுகின்றார்கள்.

முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் பல தமிழர்களின் வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. இளைஞர்கள் கடுமையாகத் தாக்கப்படுகின்றார்கள்.

இந்தியா இவற்றைக் கண்டுகொள்ளாமல் வட மாகாணசபைத் தேர்தலை நடத்தியதற்காக இலங்கையைப் பாராட்டுமாறு கூறுகின்றதா? இந்தியா தமிழர்களை அழிக்க தொடர்ந்தும் விரும்புவதன் காரணம்தான் என்ன?

மாகாணசபைச் சட்டத்தில் காணி அதிகாரம் எதுவும் இல்லையென உயர்நீதிமன்றம் திடீரென தீர்ப்பு வழங்கியுள்ளது. ஜனாதிபதி மகிந்தவின் எடுபிடியாக செயற்பட்ட பிரதம நீதியரசர் மொகான் பீரிஸ் வட மாகாண சபையின் உத்தியோகபூர்வ கூட்டம் நடைபெறுவதற்கு முன்பே இதனை அறிவித்துள்ளார். இது உயர் நீதிமன்றத் தீர்ப்பு என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்போது இந்தியா இதற்கு என்ன பதில் கூறப்போகின்றது? 13ஆம் அரசியல் அமைப்பு திருத்தச் சட்டத்தில் உள்ள சட்டங்களை அவ்வாறே அமுல்படுத்துமாறு இந்தியா கோரியது என்னவாயிற்று? முதலில் வடக்கிலிருந்து கிழக்கு மாகாணம் பிரிக்கப்பட்டது.

அதற்கும் ஓர் உயர்நீதிமன்ற தீர்ப்பே காரணமாகக் கூறப்பட்டது. இப்போது வட மாகாணசபை சட்ட விதிகளில் உள்ள காணி அதிகாரம் பறிக்கப்பட்டதற்கும் உயர்நீதிமன்றத் தீர்ப்பே காரணமாக கூறப்படுகின்றது.

எலும்புக்கூடாகவுள்ள 13வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்திலுள்ள எலும்புகளும் ஒவ்வொன்றாகப் பிடுக்கங்கப்படப் போகின்றதா?

இலங்கை அரசு செய்துள்ள போர்க்குற்றம், இனப்படுகொலை, மனித உரிமை மீறல் போன்ற மிகப் பாரிய குற்றங்களுக்கு எலும்புக்கூடாகவுள்ள வட மாகாணசபைத் தேர்தல் பரிகாரமாகுமா? இந்தியா ஏன் முழங்காலுக்கும் மொட்டைத் தலைக்கும் முடிச்சுப் போடப் பார்க்கின்றது?

தேர்தல் வெற்றியைக் கொண்டு மாகாண சபைத் திட்டத்தை தமிழர்கள் ஏற்றுக் கொண்டதாக இந்தியா கருதிவிடக் கூடாது. அதற்காக இலங்கைக்கு மன்னிப்பு வழங்கப்பட வேண்டுமென்றா இந்தியா பரிந்துரைக்க முயற்சிக்கின்றது?

வட மாகாணசபைக்கான தேர்தல் முடிவுகள் சர்வதேச ரீதியியல் பலத்த அதிர்வுகளை ஏற்படுத்தியுள்ளன. உலகின் முன்னணி செய்தி ஊடகங்கள் இதற்கு மிக முக்கியத்துவம் கொடுத்துள்ளன.

ஏ.எ.ப்.பி., ரொய்டர் செய்தி நிறுவனங்கள் உட்பட பிரித்தானியா, கனடா, ஆஸ்திரேலியா, இந்தியா, அமெரிக்கா ஆகிய நாடுகளின் முன்னணி ஊடகங்களும் தேர்தல் முடிவுகளைப் பல கோணங்களில் ஆராய்ந்துள்ளன. இலங்கையில் உள்ள ஒன்பது மாகாணங்களில் வட மாகாணமும் ஒன்று.

## தப்பிக்கவிடுவாரா நவநீதம்பிள்ளை?

ஆனால், ஊடகங்கள் அவ்வாறு கருதவில்லை. அங்கு தமிழர்கள் கூடுதலாக வாழகிறார்கள். போர்க்குற்றங்கள் பரவலாக இடம்பெற்ற இடமும் அது என்பதால், அவை வட மாகாணசபைத் தேர்தலுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றன.

ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை இலங்கை விஜயத்தின் போது வட மாகாணத்துக்கே அதி முக்கியத்துவம் கொடுத்தார். தமிழரின் பிரச்சினை சர்வதேச மயப்படுத்தப்படுவதற்கான சம்பவங்களும் இங்குதான் இடம்பெற்றுள்ளன.

எனவே, அனைத்து முன்னணி செயதி ஊடகங்களும் வட மாகாணத் தமிழ் மக்களின் செய்தியை உலகமெங்கும் பரப்பி வருகின்றன. கால் நூற்றாண்டுக்கும் மேலாக இங்கு மாகாணசபைத் தேர்தல் இடம்பெறவில்லை.

இங்குள்ள தமிழ் மக்கள் இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் இருப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே குறிப்பிட்டுள்ளது. அப்படியிருக்க சுதந்திரமான தேர்தல் இடம்பெற்றிருக்க முடியுமா?

இதனை ஏ.எ.ப்.பி. செய்தி நிறுவனம் ஏற்கனவே குறிப்பிட்டிருந்தது. அதனை உறுதிப்படுத்துவதைப் போல் 'சார்க்' நாடுகளின் கண்காணிப்புக் குழுவும் அறிக்கைகளை வெளியிட்டுள்ளது.

வட மாகாணத்தில் இராணுவத்தின் அச்சுறுத்தல் இருப்பதாக இரு கண்காணிப்புக் குழுக்களுமே சுட்டிக் காட்டியுள்ளன. அதேநேரத்தில் அரச வளங்கள் முழுமையாக அரச கூட்டணி கட்சிகளினால் பயன்படுத்தப்பட்டதாகவும் அவை குறிப்பிட்டுள்ளன.

பொதுநலவாய அமைப்பு நாடுகளின் தேர்தல் கண்காணிப்புக்குழு இலங்கையின் அரச சார்பு பத்திரிகைகள் பற்றியும் குறிப்பிட்டுள்ளது. தேர்தல் செய்திகளை வெளியிடுவதில் சில பத்திரிகைகள் ஒருபக்கச் சார்பாகச் செயற்பட்டதாகவும், சில ஊடகங்கள் பக்கச் சார்ப்பு சுயதணிக்கைகளில் ஈடுபட்டதாகவும் அக்குழு தெரிவித்துள்ளது.

சர்வதேச ஊடகங்கள் தேர்தல் கண்காணிப்புக் குழுக்களின் அறிக்கைகளை முக்கியத்துவம் கொடுத்து வெளியிட்டுள்ளன. அது மாத்திரமல்ல, சில ஆதாரங்களையும் அவை படங்களோடு வெளியிட்டுள்ளன.

வடமாகாண சபைக்கான தேர்தலின் போது இராணுவ அச்சுறுத்தலுக்கு மத்தியிலேயே தமிழ் மக்கள் வாக்களித்துள்ளனர்

இலங்கை அரசுக்கு எதிராகவே தமிழ் மக்கள் பெருந்தொகையில் வாக்களித்துள்ளனர்.

80 சதவீதமான தமிழர்கள் தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு வாக்களித்ததன் மூலம் தமிழர்பிரச்சனைக்கு அரசு உடனடியாக தீர்வைக்காண வேண்டுமென்பதை அழுத்தமாகத் தெரிவித்துள்ளது.

புலம்பெயர்தமிழ் ஊடகங்கள் வடமாகாண தமிழ் வாக்காளர்களின் துணிச்சலை வெகுவாக பாராட்டியுள்ளன. பல அச்சுறுத்தல்களையும் மீறி தங்களின் தேவை என்ன என்பதை சர்வதேசத்திற்கு மக்கள் அறிவித்துள்ளார்கள் என அவை குறிப்பிட்டுள்ளன.

ரோமனிய ஆட்சியாளர்களின் அடக்குமுறைகளுக்கு அடங்கிப்போகாத யூதர்கள் அமைதிப் புரட்சியில் ஈடுபட்டார்கள். வட மாகாணத் தமிழர்கள் இப்போது செய்திருப்பதும் அதற்கு நிகரான ஓர் அமைதிப் புரட்சியியே என புலம்பெயர்ந்த தமிழ் தொலைக்காட்சி ஒன்று தொட்டுக்காட்டியுள்ளது. எவருமே கணிப்பிட முடியாத அளவுக்கு அந்தப் புரட்சி அமைந்து விட்டதாகவும் அது குறிப்பிட்டுள்ளது.

வடமாகாண தமிழ் மக்கள் தாம் சுயாட்சிகொண்ட உள்ளகக்கட்டமைப்பை விரும்புவதாக அறிவித்துவிட்டனர். அதனால் சர்வதேசம் இனியும் தாமதித்தல்கூடாது.

உடனடியாக இலங்கை அரசுக்கு எதிராக பலமான அழுத்தங்களைப் பிரயோகித்து தமிழ் மக்களுக்கு நிரந்தர தீர்வொன்றைப் பெற்றுக்கொடுக்குமாறு பிரித்தானியா தமிழர்பேரவை சர்வதேசத்திற்கு அவசர அழைப்பொன்றை விடுத்துள்ளது.

பல நாடுகளுக்கு அனுப்பியுள்ள வேண்டுகோளின் சகல விபரங்களையும் பிரித்தானிய தமிழர்பேரவை உள்ளடக்கியுள்ளது. போர்முடிந்து நான்கரை வருடங்கள் கடந்து விட்டன. இலங்கை அரசு இதுவரை தமிழர்களின் பிரச்சனைக்கு தீர்வு காணாது தமிழர்களையும் சர்வதேசத்தையும் ஏமாற்றி வருகின்றது.

இந்நிலையில் வடமாகாணசபை மக்கள் ஒன்றுதிரண்டு தங்கள் முடிவை ஜனநாயக முறையில் அறிவித்துவிடடார்கள். எனவே சர்வதேச நாடுகள் அந்த மக்களின் ஆணையை ஏற்று நடவடிக்கையில் இறங்கவேண்டிய தருணம் இது என்றும் பிரித்தானிய தமிழர் பேரவை சுட்டிக்காட்டியுள்ளாது.

இதேபோன்று புலம்பெயர்நாடுகளிலுள்ள தமிழர் அமைப்புகள் அனைத்தும் ஒன்று சேர சர்வதேச நாடுகளை நோக்கி தமது நகர்வுகளை ஆரம்பித்துள்ளன. கோரிக்கைகளை முன்வைத்து ஜனாநாயகப் போராட்டங்களை நடாத்தவும் அவை தீர்மானித்துள்ளன.

தமிழ்த்தேசிய கூட்டமைப்புக்கு தமிழர்கள் பெருவாரியாக வாக்களித்ததன் முக்கிய நோக்கமே சர்வதேச கவனத்திற்கு ஒரு செய்தியை கூறுவதற்காகத்தான் வடமாகாண சபைக்கான தேர்தலை முன்வைத்து தமிழர்கள் இலங்கை அரசுக்கு தமது முழுமையான எதிர்ப்பை தெரிவித்துள்ளனர். இதனையே அரசியல் அவதானிகள் பலரும் தங்கள் கணிப்பாக வெளியிட்டுள்ளன.

.எனவே, வாக்குறுதிகளையும் கடந்து அமைதிப்புரட்சியை ஏற்படுத்தியுள்ள வடக்கு மக்களின் அபிலாசைகள் நிறைவேற்றப்பட சர்வதேசம் கடுமையாக உழைக்க வேண்டி உள்ளமை காலத்தின் கனிவிலேயே உள்ளது.

**(வேல்ட் தமிழ் இணையம்)**

## வாக்காளர் இடாப்பு-2013

# பதிய தவறியோருக்கு இறுதிச் சந்தர்ப்பம்

(குருமன்காடு)

***2013 ஆம் ஆண்டு வாக்காளர் இடாப்பில் பெயர்களை இணைக்கும் நடவடிக்கைகள் கடந்த ஜூன் மாதம் முதலாம் திகதிஆரம்பமானது.***

பிரதான குடியிருப்பாளர்களினால் பூர்த்தி செய்து கிராம அலுவலகர்களிடம் கையளிக்கப்பட்ட படிவங்களில் இருக்கும் பெயர்களுள் வாக்காளர் இடாப்பில் இம்முறை பதிவு செய்வதற்கு கிராம அலுவலர்களினால் சிபாரிசு செய்யப்பட்ட பெயர்கள் அடங்கிய பட்டியல்களும் அக் கணக்கெடுப்பின் போது நீக்கப்பட வேண்டியவர்களௌன சிபாரிசு செய் யப்பட்டவர்களதும் பெயர்கள் அடங்கிய பட்டியல்களும் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 2 ஆம் திகதி முதல் நான்கு வாரகாலத்திற்கு உட்பட்ட காலப்பகுதியினுள் காட்சிப் ளபடுத்தப்படவுள்ளன.

மாவட்ட செயலகம்,மாவட்ட தேர்தல் அலுவலகம் பிரதேச செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், உள்ளூர் அதிகாரசபை அலுவலகங்கள் ஆகிய இடங்களில் இவை காட்சிக்கு வைக்கப்படும்.

மாவட்ட செயலகம், தேர்தல்கள் அலுவலகம் ஆகியவற்றைத் தவிர்ந்த ஏனைய இடங்களில் பார்வைக்கு வைக்கப்படுவது அவ்வலுவலகம் அமைந்துள்ள பிரிவிற்குரிய பட்டியல்கள் மாத்திரமேயாகும்.

இவ் இடாப்புகளைப் பரீட்சித்துப் பார்ப்பதன் மூலம் எவருக்கேனும் தனது பெயர் 2013 ஆம் ஆண்டின் வாக்காளர் இடாப்பில் சேர்க்கப்படுவதற்காக சிபார்சு செய்யப்பட்டுள்ளதாவென அறிந்து கொள்ள முடியும்.

பதிவு பெறுதற்கான தகைமை இருந்தும் பதிவு செய்வதற்கு பெயர் சிபார்சு செய்யப்படாவிடில் அவ்வாறானவர்கள் தனது பெயரைப் பதிவு செய்வதற்காக உரிமை கோரிக்கைப் படிவமொன்றை சமர்ப்பிக்கலாம்.

அதேபோன்று பதிவு செய்வதற்கான பிழையான பெயரொன்று சிபார்சு செய்யப்பட்டிருந்தால் அது தொடர்பாகவும் ஆட்சேபனை தெரிவிக்கலாம்.

உரிமை கோரிக்கை செய்வதற்கான படிவங்களும் ஆட்சேபனைகளை தெரிவிப்பதற்கான படிவங்களும் மேற் கூறப்பட்ட பட்டியல்கள் காட்சிக்கு வைக்கப்படும். இரு பிரதிகளில் விண்ணப்பித்தல் வேண்டும்.




இவ்வாறான விண்ணப்பங்கள் தாம் வதியுமிடத்தை பதிவு செய்யும் அலுவலரான மாவட்ட செயலாளருக்கு அல்லது மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தின் உதவி புரியும் அலுவலருக்கு ஒக்டோபர் மாத இறுதிக்கு முன் அனுப்பி வைத்தல் வேண்டும்.

இப்படிவங்களை தேர்தல் ஆணையாளருக்கு அனுப்பிவைக்கக் கூடாது.

2013 ஆம் ஆண்டு இடாப்பில் பெயர் சேர்க்கப்படுவதற்காக இருக்கும் இறுதிச் சந்தர்ப்பம் இதுவாதலால், பெயர் பதிவு செய்யப்படாதது தொடர்பில் பின்னர் தெரிவிக்கப்படும்.

கோரிக்கைகள் தொடர்பாக எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் ஏதுமில்லையெனவும் பெயர்களைப் பதியத் தவறியவர்க்ள அனைவரும் இச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி கொள்ளுமாறும் தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப் பிரிய அறிவித்துள்ளார். (ம-250)

## தனது குடும்பத்தை துன்புறுத்திய நபருக்கு விளக்கமறியல்

(முல்லைத்தீவு)



மனைவியையும் பிள்ளைகளையும் தினமும் துன்புறுத்தியும் அவர்களை பராமரிப்பதிலும் அசிரத்தை காட்டிவந்த குடும்பஸ்தர் ஒருவரை விளக்க மறியலில் வைக்கும் படி முல்லைத்தீவு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

தினமும் குடித்து விட்டு வீட்டுக்கு வரும் குறித்த நபர் தனது மனைவியையும் இரு குழந்தைகளையும் துன்புறுத்தியதோடு அவர்களின் பராமரிப்பிலும் அக்கறை காட்டுவதில்லை. இந்நிலை தொடர்ந்தமையால் புதுக்குடியிருப்பு பகுதியை சேர்ந்த அக் குடும்பஸ்தரை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு முல்லைத் தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா உத்தரவிட்டுள்ளார்.

மேலும் மனைவிக்கும் குழந்தைகளுக்குமாக மாதாந்தம் 9ஆயிரம் ரூபா பராமரிப்பு பணமாக செலுத்த வேண்டுமெனவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

கணவரின் இப்போக்கு காரணமாக தானும் தனது இரு பிள்ளைகளும் மனதளவிலும் பெரிதும் பாதிக்கப்பட்டு வருவதாகவும் தொடர்ச்சியாக உடலியல் ரீதியாக தனது பிள்ளைகள் துன்புறுத்தப்பட்டு வருவதாகவும் கணவர் பற்றி மனைவி மன்றில் முறையிட்டிருந்தார். (ம)


## மாட்டுக் கன்றை கொன்ற நபருக்கு விளக்கமறியல்

(முல்லைத்தீவு)

மாட்டுக் கன்று ஒன்றை கொன்று இறைச்சிக்காக பாவித்தவரை விளக்கமறியலில் வைக்கு மாறு முல்லைத்தீவு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

17ஆயிரம் ரூபா பெறுமதியான மாட்டுக் கன்று ஒன்றை கட்டுத்துவக்கால் வெடிவைத்து கொன்று இறைச்சிக்கு பாவித்ததாக கூறப்படும் சந்தேக நபர் ஒருவரை ஒட்டுசுட்டான் பொலிஸார் கைது செய்து நீதிமன்றில் ஆஜர்படுத்திய வேளையில் எதிரியை எதிர்வரும் 30 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா உத்தரவிட்டுள்ளார்.

'இந்த கன்றின் இறைச்சியை தனக்குள்ள ஈரல் நோய்க்கு மருந்தாக பாவித்ததாக சந்தேக நபர் மன்றில் தெரிவித்தார். மாட்டிறைச்சியை அழித்து விடுமாறு நீதவான் உத்தரவிட்டார். (ம)



மாந்தை கிழக்கு பாண்டியன்குளம் பகுதியில் பிரதான போக்குவரத்துப் பாதை அருகாமையில் இரண்டு மாதங்களுக்கு முன்னர் மின் கம்பத்துடன் வாகனம் மோதியதில் சேதமடைந்த நிலையில் உள்ள மின்கம்பத்தை படத்தில் காணலாம்.

## உலக உளநல தினம்

(கிளிநொச்சி)

உலக உளநல தினம் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 3 ஆம் திகதி தொடக்கம் 10 ஆம் திக்தி வரை நடைபெறவுள்ளது.

இத் தினம் தொடர்பாக இந்த வருடத்திற்கான தொனிப் பொருள் முதியோர்களின் உளநல மேம்பாடு என்பதாகும்.

இது தொடர்பாக கிளிநொச்சி மாவட்டத்தில் பாடசாலை ரீதியாக உளநல மேம்பாடு, உளநல கருத்தரங்கு, கட்டுரைப் போட்டி என்பன நடத்தப்படவுள்ளன.

சுகாதார வைத்திய உத்தியோகத்தர்களினால் தாய்மார்களுக்கான கருத்தரங்கு மற்றும் உதவி அரசாங்க அதிபர்பிரிவுகளில் அரச உத்தியோகத்தர்களுக்குான விழிப்புணர்வு கருத்தரங்குகள் என்பன நடத்தப்படவுள்ளன.

இக்காலப்பகுதியில் முதியோர்களுக்கான கண் சிகிச்சை மற்றும் மருத்துவ முகாம் என்பனவும் நடத்தப்பட்டு கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத்தில் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 10 ஆம் திகதி பி.ப. 2 மணிக்கு உலக உளநல தினம் கொண்டாடப்படவுள்ளது. (ம-254)

## சிறுநீரக நேயாளிகளுக்கு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் சிறுநீரக நோயளிகளுக்கு வடமாகாண சமூக சேவைத் திணைக்களத்தின் உதவியுடன் வைத்திய கொடுப் பனவாக வழங்கப்படும் மாதாந்த 500 ரூபாவுக்கு இதுவரையில் விண்ணப்பிக்காதவர்களை விண் ணப்பிக்குமாறு சமூக சேவைத் திணைக்களத்தினர் அறிவித்துள்ளனர்.

இக்கொடுப்பனவுக்கு கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் மட்டும் 5 பேர் இந்த மாதாந்த கொடுப்பனவை பெறுவதாகவும் கண்டாவளை, பச்சிலைப்பள்ளி, பூநகரி ஆகிய பிரதேச செயலர் பிரிவில் எவரும் இதுவரையில் விண்ணப்பிக்கவில்லை.

சிறுநீரக நோயாளர் கொடுப்பனவுக்காக வடமாகாண சமூக சேவைத் திணைக்களம் போதியளவு நிதியை ஒதுக்கியுள்ளது.

எனவே, சிறுநீரக நோயாளிகள் கிராம சேவை அலுவலர் மூலம் விண்ணப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-254)

## இடமாற்றம்

(குருமன்காடு)

யாழ்ப்பாணத்தில் கடமையாற்றிய பி.குகநாதன் வவுனியா உதவி தேர்தல் ஆணையாளராக தேர் தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரியவினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 1 ஆம் திகதி தொடக்கம் இவர் தனது கடமையை பொறுப்பேற்கவுள்ளார்.

வவுனியா உதவி தேர்தல் ஆணையாளராகக் கடமையாற்றிய ஏ.எஸ். கருணாநிதி இம்மாதம் இறுதியில் ஓய்வுபெறுவதையடுத்தே இவர் அங்கு நியமிக்கப்பட்டுள்ளார். (ம-250)

## ஆளணி பற்றாக்குறையுடன் வவு. பிரதான தபால் நிலையம்

(குருமன்காடு)

வவுனியா பிரதான தபால் நிலையத்தில் ஆளணி பற்றாக்குறை காணப்படுவதுடன் கடிதங்கள் சில உரிய காலப்பகுதியில் கிடைப்பதுமில்லை எனவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

ஆளணி பாற்றாக்குறை காரணமாக ஒருவர் நாளாந்தம் 15 மணித்தியாலங்கள் வரை வேலை செய்ய வேண்டியேற்படுகிறது.

குறிப்பாக அதிகாலையில் வேலைக்குச் செல்பவர்கள் இரவே வீட்டுக்கு திரும்ப வேண்டியுள்ளதாக உத்தியோகத்தர்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் வேலை செய்பவர்கள் உடல்,உள பாதிப்புக்கு உள்ளாக்கூடிய சூழ்நிலை காணப்படுகிறது. இதேவேளை பெண்கள் போக்குவரத்து பிரச்சினையை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

இது தவிர கடிதங்களும் உரிய காலக்கிரமத்தில் சில பகுதிகளுக்கு கிடைப்பதில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ம-250)

எதிர் நோக்குவது குறைவாய் இருப்பின் ஏமாற்றம் மிகுதியாய் ஏற்படாது.

- ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# இரண்டு அதிபர்களை நியமித்தது யார்?

யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரியில் இரண்டு அதிபர்கள் என்ற விவகாரம் சிலகாலம் சர்ச்சைக்குரிய விடயமாக இருந்தது.

எனினும் அங்கு இரு அதிபர் நியமனம் என்று இல்லாமல், பொதுச்சேவை ஆணைக் குழுவால் நியமிக்கப்பட்ட அதிபர் பதவி ஏற்பதற்கு, விட்டுக்கொடுப்பு இல்லாத நிலையில் அப்பிரச்சினை ஏற்பட்டது. எனினும் பின்னாளில் அது ஒரு முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது.

ஆனால் உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் இப்போது இரண்டு அதிபர்கள் என்ற விவகாரம் சூடுபிடிக்க ஆரம்பித்து, நீதிமன்றின் உதவியை நாடும் அளவிற்கு நிலைமை சென்றுள்ளது.

குறித்த பாடசாலைக்கு ஏற்கெனவே, அதிபர் வெற்றிடத்தை நிரப்புவதற்கான நேர்முகத் தேர்வு நடத்தப்பட்டு ஓர் அதிபர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந் நிலையில், அந்த அதிபர் கடமையில் இருக்கக்கூடியதாக ஏற்கெனவே நேர்முகத் தேர்வுக்குச் சென்றிருந்த இன்னொருவருக்கும் அண்மையில், குறித்த பாடசாலையில் அதிபர் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளரால் ஏற்கெனவே நியமிக்கப்பட்டவர் அதிபர் சேவையில் இருக்கும் போது இன்னொருவருக்கு அதிபர் நியமனம் வழங்கியமை மனித உரிமையை மீறும் செயலாகும் என்ற அடிப்படையிலும் தாபன விதிக் கோவைகளுக்கு முரணானது என்ற கோதாவிலும் இவ் விவகாரம் நீதி மன்றிற்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இப்போது நாம் இங்கு பிரஸ்தாபிப்பது இரண்டு அதிபர்களில் யார் அங்கு அதிபராக இருக்க முடியும் என்பதல்ல.

நாம் இங்கு கேட்பதெல்லாம் நேர்முகத் தேர்வு நடத்தி நியமனம் கொடுக்கும்போது; கோட்டக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்விப் பணிப்பாளர், வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர், வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் என்ற ஒரு நிர்வாக ஒழுங்கு முறையில் பரிசீலிக்கப்பட்டு நியமனம் வழங்கப்பட்டிருக்கும்.

அவ்வாறு நியமனம் வழங்கப்பட்ட பின் மீண்டும் இன்னொருவருக்கு அதிபர் நியமனம் வழங்குவது என்பது எவ்வகையில் ஏற்புடையது என்பதே நமது கேள்வி.

ஆளுநரின் உத்தரவுக்கு அமைய, அதிபர் நியமனம் வழங்கப்படுவதாக 2வது நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்படுமாயின் - அக் கடிதத்தில் நியமன அதிகாரி ஒப்பமிடுவாராயின் ஆளுநர் உத்தரவுக்கு அமைய நீங்கள் எதையும் மாற்றி அமைப்பீர்களா? என்ற கேள்வி எழுவது நியாயமானது.

இரண்டாவதாக நியமிக்கப்பட்ட அதிபருக்கே முதலில் நியமனம் கிடைத்திருக்க வேண்டும் என்று யாரேனும் கருத்து முன்வைத்தால் அதனை நேர்முகத்தேர்வு முடிந்து நியமனம் வழங்கும் போது செய்திருக்க வேண்டும்.

அப்படியானால் அதைச் செய்யாமல் விட்டது யார் என்ற கேள்வி எழுவதும் நியாயமானதே. இப்போது இரண்டு அதிபர்களில் இருவருமே இந்த விவகாரத்தை சிக்கல் படுத்தவில்லை.

மாறாக ஒன்றில் கல்வி அதிகாரிகள் இத்தகையதொரு நிலைமைக்கு ஆளாக்கி விட்டார்கள் என்றோ அல்லது வடக்கு மாகாண ஆளுநர் தனது அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்து விட்டார் என்றோ கூற வேண்டும்.

எதுவாயினும் ஒரு ஒழுங்கு முறையில் நியமனம் வழங்கப்பட்ட பின்னர், ஆளுநர் உத்தரவு பிறப்பித்திருந்தாலும் அதனை ஏற்க மறுத்து ; நியாயப்பாடுகளை ஆளுநருக்குத் தெரியப்படுத்திருக்க வேண்டிய கடமை, கல்வி அதிகாரிகளுக்கும் நியமன அதிகாரிக்கும் உண்டு. இதை ஏன் அவர்கள் செய்யவில்லை?

ஆளுநர் உங்களுக்கு அழுத்தம் தந்தாரா? அல்லது ஆளுநர் உத்தரவிட்டால் எந்த சட்டதிட்டங்களையும் அவருக்கு எடுத்துரைக்காமல், அவர் வழிச்செல்வது தான் உங்கள் கடமையா?

இந்தக் கேள்விகளுக்கு கல்வி அதிகாரிகளும் வடக்கின் ஆளுநரும் பொதுமக்களுக்கு தங்கள் நிலைப்பாட்டை பகிரங்கமாகத் தெரியப்படுத்த வேண்டும்.

# நவநீதம்பிள்ளையின் அறிக்கை பிரிவினைவாத நிகழ்ச்சி நிரல்

## குணதாச அமரசேகர குற்றச்சாட்டு

ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் வாய்மொழி மூல அறிக்கையில் மேற்குலக நாடுகளின் எதிர்கால திட்டம் வெளியிடப்பட்டுள்ளது என தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாச அமரசேகர தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மேற்குலக நாடுகளின் இந்த திட்டத்திற்கு முகம் கொடுக்கும் போது நேரடியான வழிமுறையின் அடிப்ப டையில் முழு நாட்டு மக்களையும் தயாற் படுதத வேண்டும்.

நவநீதம்பிள்ளையின் வாய்மொழி மூல அறிக்கையானது மேற்குலக பிரிவினைவாத நிகழ்ச்சி நிரலை மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

மனித உரிமை மற்றும் பிரிவினைவாத நிகழ்ச்சி நிரலை செயற் படுத்துவதே நவநீதம்பிள்ளையின் உண்மையான பங்களிப்பாகும்.

அவரது அறிக்கையில் மூன்று பிரதான விடயங்களை வலியுறுத்தியுள்ளார். முதலாவது, இலங்கை அரசு போர் குற்றங்கள் குறித்து விசாரணை நடத்த கட்டமைப்பை ஏற்படுத்த வில்லை என்றால் சர்வதேச தலையீட்டில் அவ்வாறான கட்டமைப்பு ஏற்படுத்தப்பட வேண்டும் என்று மறைமுகமாக அச்சுறுத்தியுள்ளார்.

இலங்கை அதனை செய்யவில்லை என்றால்மட்டுமே அப்படியான விசாரணை மேற்கொள்ளப்படும் என்றும் அவர் தன்னை நியாயப் படுத்தியுள்ளார்.

அவரது எழுத்து மூலமான அறிக்கை அடுத்த வருடம் மார்ச் மாதம் சமரப்பிக்கப்படும் போதுதான் சர்வதேச விசாரணை கட்டமைப்பு தேவை என்ற யோசனை மேற்குலக நாடுக ளினால் முன்வைக்கப்பட வாய்ப்புள்ளது.

இரண்டாவது, வடக்கில் இராணுவத்தை அப்புறப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கை. இந்த கோரிக்கை பிரிவினைவாத வரைபடத்தின் பிரதான மைல்கல்.

எதிர்காலத்தில் சர்வதேச தலையீட்டை ஏற்படுத்த தேவையான மோதலை உருவாக்க அவர்கள் இந்த கோரிகைகயை பயன்படுத்துவார்கள்.

நவநீதம்பிள்ளையின் மூன்றாவது வலியுறுத்தல், இனவாத மோதல் என்ற முத்திரை குத்தப்படக் கூடிய மோதல்கள் ஏற்படும் சந்தர்ப்பத்தில் அவை பற்றி ஆய்வு செய்ய சர்வதேச கண்காணிப்பாளர்களுக்கு இடமளிக்க வேண்டும் என்பதாகும்.


இந்த யோசனையும் மனித உரிமை ஆணையாளரின் அலுவலகத்தின் கிளை ஒன்றை இலங்கையில் ஸ்தாபிக்க வேண்டும் என்ற யோசனையும் போர் நடைபெற்ற காலத்தில் இருந்து முன்வைக்கப்பட்டு வரும் யோசனைகளாகும்.

சம்பந்தன், விக்னேஸ்வரன் ஆகியோர் கூறும் போராட்டமான அகிம்சை வழி மக்கள் போராட்டம்.

இவ் விதமான சர்வதேச தலையீட்டுக்கு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தி கொடுக்கும் என்பதில் சந்தேகமில்லை என குணதாச அமரசேகர தனது அறிக்கையில் கூறியுள்ளார். (செ-2)

## தவத்திரு யோகர் சுவாமிகளின் நற்சிந்தனை

### சும்மா விருந்துபார் தம்பி



நல்ல சமயமிது தம்பி
நம்மைநா மறிந்துகொள்ளத் தம்பி
எல்லோர்க்கும் நன்மைசெய் தம்பி
இறைவனுன் னிடமுண்டு தம்பி
கொல்லாதே கோபம்வையாதே
கும்பிடு காலைமாலை தம்பி
சொல்லாலே பயனில்லைத் தம்பி
சும்மா விருந்துபார் தம்பி



கல்வி அமைச்சினால் நடத்தப்பட்ட அகில இலங்கை தமிழ்த் தின வாசிப்புப் போட்டியில் வடமாகாணத்தைச் சேர்ந்த யாழ்/இந்துக் கல்லூரி மாணவன் ப.பவதாரகன் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார். (செ-5)

# ஏழை மக்களுக்கு உதவி செய்வோமா?

## பரமபிதா காட்டிய பாதை

இன்று நமக்குத்தரப்படும் பைபிள் பகுதியில் "செல்வந்தனும் இலாசரசும்" என்னும் அருமையான ஓர் உவமானக் கதையை இயேசு கூறுகின்றார். செல்வந்தனது பெயர் தைவிஸ் என்பது மரபு. இது பெருஞ் செல்வந்தன் என்பதற்கான இலத்தீன் மொழிப் பதமான Dives என்பதன் நேரடி எழுத்துப் பெயர்ப்பாகும். எழையின் பெயர் இலாசர் என்பது. "எலால்சர்" என்பது எபிரேய பெயர். அதற்கு இறைவன் உதவி செய்தார் என்று பொருள்.


இயேசு, மரணத்திலிருந்து உயிர்பபித்ததாக பைபிளில் கூறப்பட்டுள்ள இலாசரசும் இக்கதையில் வரும் இலாசரசும் ஒருவரல்ல. இவர்கள் இருவரும் வெவ்வேறு மனிதர்கள். இயேசு சொன்ன கதைகள் மக்களை மகிழ்விப்பதற்காக அவர் எடுத்துக்கூறிய புனைவுகள் அல்ல. மாறாக கதைகள் வழியாக இயேசு மக்களுக்கு இறையாட்சி பற்றி அறிவித்தார்.

இந்த உவமையின் முதல்வரிகள் நோக்கும்போது:"செல்வர் ஒருவர் இருந்தார். அவர் விலையுயர்ந்த மெல்லிய செந்நிற ஆடை அணிந்திருந்தார். நாள்தோறும் விருந்துண்டு இன்புற்றிருந்தார். இலாசர் என்ற பெயர் கொண்ட ஏழை ஒருவரும் இருந்தார். அவர் உடல் முழுவதும் புண்ணாய் இருந்தது. அவர் அச்செல்வருடைய வீட்டு வாயில் அருகே கிடந்தார். செல்வருடைய மேசையிலிருந்து விழும் துண்டுகளால் தன் பசியாற்ற விரும்பினார். நாய்கள் வந்து அவர் புண்களை நக்கும்." செல்வருக்குப் இயேசு பெயர் குறிப்பிடவில்லை. ஆனால், ஏழைக்கு இயேசு பெயர்கொடுத்தார். பெயர் கொடுத்ததால் கூடுதல் மதிப்பும் கொடுத்தார். இயேசு கூறிய அனைத்து உவமைகளிலும் இந்த ஓர் உவமையில் மட்டுமே கதாபாத்திரத்திரத்திற்குப் பெயர் கொடுக்கப்பட்டுள்ளது. வேறு எந்த உவமைக்கும் இல்லாத ஒரு தனிச் சிறப்பு இது.

செல்வங்கள் பெறுவதை இறைவனின் ஆசீராகவும், வறுமை, ஏழ்மை இவைகளை இறைவனின் சாபமாகவும் எண்ணி வந்த இஸ்ராயலர்கள் மனதில் இயேசு ஏழைக்கு கொடுத்த மதிப்பு அதிர்ச்சியைக் கொடுத்தது.

ஏழைகளைத்தாழ்வாக எண்ணிவந்த இஸ்ராயலர்கள் மேல் குறைகாணமுற்படும் நாம் சற்று எம்மை நோக்கினால் அவர்களுடைய அதே மன நிலைதானே இன்று நம்மில் பலரும் உள்ளோம் என்னும் உண்மைய்யை நாம் கண்டுகொள்வோம். ஒரு செல்வந்தரைப்பற்றி பேசும் போது, திருவாளர் அன்ரனி, திருவாளர் அன்பு என்றெல்லாம் பேசுகிறோம். ஏழைகளைக் குறிப்பிடும் போது, பொதுவாக அவர்களை ஓர் எண்ணிக்கையாகக் குறிப்பிடுகிறோம். "திருவாளர் றூபன் இன்று நடத்திய கொண்டாட்ட விழாவிற்கு நூற்றுக் கணக்கான ஏழைகள் வந்தனர்" என்று நாம் குறிப்பிடுகின்றோம். ஏழைகளை எண்ணிக்கைகளாக இல்லாமல், மனிதப் பிறவிகளாக மதிக்க வேண்டும் என்பதற்கு இன்றைய உவமைக் கதையின ஆரம்ப வரிகள் நல்லதொரு பாடம் காட்டுகின்றன.

"செல்வர்"விலையுயர்ந்த ஆடைகள் அணிந்துகொண்டு, நாள்தோறும் விருநதுண்டு இன்புற்றிருந்தார். ஆனால் அவருடைய வாயில் அருகே விழுந்து கிடந்த ஏழை இலாசரோ பசியால் வாடினார். அவருடைய உடலை மறைக்கக் கூட உடை இல்லை. மாறாக அவர் உடல முழுவதும் புண்ணாய் இருந்தது. இலாசர் என்னும் ஏழை தம் வீட்டு வாயில் அருகே கிடந்ததைச் செல்வர் கண்டு கொள்ளவில்லை. ஏழை, பணக்காரன் பாகுபாடின்றி இருவரும் இறக்கின்றனர். பணக்காரருக்கு இறுதி ஊர்வலம் கிடைத்திருக்க வேண்டும் அதனால் தான் அவர் அடக்கம் செய்யப்பட்டார் என்று கூறப்பட்டுள் ளது. ஆனால் ஏழை



ம.பிரான்சிஸ்க்
கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்

இறந்தார் என்று மட்டும்தான் வாசிக்கின்றோம். அவரது உடலை யார் புதைத்தார்களோ, எப்படிப் புதைத்தார்களோ தெரியாது. ஆனால் இலாசரை வான தூதர்கள் ஆபிரகாமின மடியில் கொண்டு போய்ச் சேர்க்கின்றனர். ஆபிரகாமின் மடி என்றால் விண் ணகம், சொர்க்கம் என்று பொருள்.

இன்றும் நம்மிடையே செல்வர்களும் உண்டு. இலாசர்களும் உண்டு. அன்றுபோல இன்றும் செல்வக் செழிப்பில் உழல்வோர் பலர் உள்ளனர். அவர்கள் ஏழைகளின் நிலைமையைக் கண்டுகொள்ள மறுக்கிறார்கள். ஏழைகள் ஏழைகளாய் இருப்பதற்குத் தாங்கள் பொறுப்பல்ல என்று கைகழுவுவோரும் எம்மிடையே உண்டு. "நான் பசியாய் இருந்தேன், நீங்கள் எனக்கு உணவு கொடுக்கவில்லை" என்னும் சொற்களை நாம் தீர்ப்பு நாளில் கேட்காமலிருக்க வேண்டும் என்றால் இன்றே இப்போதே நம்மைச் சூழ்ந்திருப்போரில், குறிப்பாக ஏழை மக்களில், இயேசுவைக் காண்போம் அவர்களுடைய பசியை ஆற்றிட முன்வருவோம்.

# இந்தியா சார்பாக 3 ஆம் இலக்கத்தில் துடுப்பெடுத்தாட விரும்பும் ரெய்னா

இந்திய அணி சார்பாக விளையாடும் போது 3ஆம் இலக்கத்தில் துடுப்பெடுத்தாட விரும்புவதாக இந்திய அணியின் வீரரும், சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் துடுப்பாட்ட வீரருமான சுரேஷ் ரெய்னா தெரிவித்துள்ளார்.

சண் றைசர்ஸ் அணிக்கெதிரான போட்டியில் அதிரடியாக ஆடிய சுரேஷ் ரெய்னா 84 ஓட்டங்களைப் பெற்றிருந்ததோடு, போட்டியின் நாயகன் விருதையும் வென்றிருந்தார்.

சென்னை சுப்பர் கிங்ஸ் சார்பாக சுரேஷ் ரெய்னா 3ஆவது இடத்தில் துடுப்பெடுத்தாடுகின்ற போதிலும், இந்திய அணி சார்பாக மத்திய வரிசையில் 5ஆம், 6ஆம் இடங்களிலேயே அவர் துடுப்பெடுத்தாடுகிறார். இது தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

3ஆம் இலக்கத்தில் துடுப்பெடுத்தாடும் போது துடுப்பெடுத்தாடுவதற்கு அதிக ஓவர்கள் கிடைக்கப்பெறும் எனத் தெரிவித்த அவர், ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் 45 ஓவர்களும், ரி-20 போட்டிகளில் 20 ஓவர்களும் கிடைக்கப்பெறும் எனக் குறிப்பிட்டார்.

அதன் காரணமாக, துடுப்பாட்ட வீரர் விளையாட விரும்பும் இனிங்ஸினைத் திட்டமிட முடியும் எனக் குறிப்பிட்ட அவர், ஆரம்பத்திலிருந்தே அடித்தாடத் தேவையில்லை எனக் குறிப்பிட்டார்.

3ஆம் இலக்கத்தில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி சார்பாக சிறப்பாக ஆடுவதன் மூலம், இந்திய அணியின் 3ஆம் இலக்கத்தினையும் பெற்றுக் கொள்ள முயற்சிக்கவுள்ளதாகவும் சுரேஷ் ரெய்னா தெரிவித்துள்ளார்.




# சானியா ஜோடி சம்பியன்

டோக்கியோவில் நடைபெற்ற பான் பசுபிக் திறந்த டெனிஸ் தொடரில் இந்தியாவின் சானியா, ஜிம்பாப்வேயின் காரா பிளாக் ஜோடி சம்பியன் பட்டம் வென்றது.

ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் பான் பசுபிக் திறந்த டெனிஸ் தொடர் நடைபெற்றது. இதன் பெண்கள் இரட்டையர் பிரிவு இறுதி ஆட்டத்தில் சானியா, காரா பிளாக் ஜோடி, சீன தைபேயின் ஹியோ, அமெரிக்காவின் ஹியுபர் ஜோடியை எதிர்கொண்டது. இதில் முதல் செற்றை 4-6 என இழந்த சானியா ஜோடி, இரண்டாவது செற்றை 6-0 என கைப்பற்றியது.

வெற்றியாளரை நிர்ணயித்த இறுதிச் சுற்றில் அசத்திய சானியா ஜோடி 11-9 என தன்வசப்படுத் தியது. முடிவில், சானியா, காரா பிளாக் ஜோடி 4-6, 6-0, 11-9 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று, கிண்ணத்தை சுவீகரித்தது.



ஜப்பானின் டோக்கியோ நகரில் பான் பசிபிக் பெண்கள் ஒற்றையர் பிரிவு டெனிஸ் இறுதி போட்டியில் விளையாடிய செக் குடியரசின் பெட்ரா கிவிடோவா (இடது) அருகில் ஜெர்மனி நாட்டின் ஏஞ்சலிக் கெர்பர் ஆகியோர் தங்கஎது கிண்ணங்களுடன் உள்ளனர். கிவிட்டோவா போட்டியில் வெற்றி பெற்றார்.

# இறுதிப் போட்டிக்கு யுவராஜின் ப்ளூ அணி

யுவராஜின் அதிரடி ஆட்டத்தால் இந்தியா ரெட் அணியை 11 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி இந்தியா ப்ளூ அணி சலஞ்சர்ஸ் கிண்ணப் போட்டியின் இறுதிச்சுற்றுக்கு முன்னேறியது.

என்கேபி சலஞ்சர் கிண்ணத் தொடர் இந்தூரில் நடைபெற்று வருகிறது. இதில் யூசுஃப் பதான் தலைமையிலான இந்தியா ரெட் அணியும், யுவராஜ் தலைமையிலான இந்தியா ப்ளூ அணியும் வெள்ளிக்கிழமை மோதின.

நாணய சுழற்சியில் வென்ற ரெட் அணி களத்தடுப்பை தேர்வு செய்தது. அந்த அணியின் பாண்டே 70 ஓட்டங்களும், அபிஷேக் 75 ஓட்டங்களும் எடுத்தனர்.

தொடக்க ஆட்டக்காரர் அக்ஷத் மற்றும் யுவராஜ் தலா 84 ஓட்டங்களை எடுத்து அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தினர்.

குறிப்பாக, யுவராஜின் ஆட்டத்தில் அனல் பறந்தது. அவர் 53 பந்துகளில் 84 ஓட்டங்களை எடுத்தார். இதில் 5 சிக்ஸர்களும், 6 பவுண்டரிகளும் அடங்கும். 50 ஓவர் முடிவில் 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 345 ஓட்டங்கள் குவித்தது.

அடுத்து களமிறங்கிய இந்தியா ரெட் அணியின் தொடக்க ஆட்டக்காரர் அபினவ் முகுந்த் 83 ஓட்டங்களும், சமித் படேல் 68 ஓட்டங்களும் எடுத்தனர். மற்ற வீரர்கள் அடுத்தடுத்து ஆட்டமிழந்ததால் வெற்றிக்கான இலக்கை அந்த அணியால் எடுக்க முடியவில்லை. இதனால், அந்த அணி 49.5 ஓவர்களில் 334 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்தது.

இந்த வெற்றி மூலம் இந்தியா ப்ளூ அணி இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது. இந்தியா ரெட் மற்றும் டில்லி அணிகள் இடையே இன்று நடைபெற உள்ள போட்டி யில் வெற்றி பெறும் அணி இறுதிப்போட்டிக்கு முன்னேறும்.

# அரையிறுதி வாய்ப்பைத் தக்கவைத்துக்கொண்டது மும்பை



சம்பியன்ஸ் லீக் ருவென்ரி ருவென்ரி தொடரின் 11ஆவது போட்டியில் மும்பை இந்தியன்ஸ் அணி வெற்றிபெற்று அரையிறுதிக்கான வாய்ப்பைத் தக்கவைத்துக் கொண்டது. ஹைவெல்ட் லயன்ஸ் அணிக்கெதிரான இப்போட்டியில் மும்பை இந்தியன்ஸ் அணி 7 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

ஜெய்ப்பூர் சவாய் மன்சிங் மைதானத்தில் இடம்பெற்ற இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற மும்பை இந்தியன்ஸ் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய ஹைவெல்ட் லயன்ஸ் அணி 20 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 140 ஓட்டங்களைப் பெற்றது.

ஆரம்பத்திலிருந்து நிதானமான ஆட்டத்தை வெளிப்படுத்திய லயன்ஸ் அணி, 13.2 ஓவர்களின் நிறைவில் 5 விக்கெட்டுக்களை இழந்து 81 ஓட்டங்களுடன் தடுமாறியது. எனினும் 6ஆவது விக்கெட்டுக்காகப் பிரிக்கப்படாத 59 ஓட்டங்கள் பகிரப்பட்டன.

துடுப்பாட்டத்தில் லயன்ஸ் அணி சார்பாக அல்விரோ பீற்றர்சன் 27 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 35 ஓட்டங்களையும், டுவைன் பிறீற்றோறியஸ் 21 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 31 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் மும்பை இந்தியன்ஸ் அணி சார்பாக பிரக்ஜான் ஓஜா 2 விக்கெட்டுக்களையும், மிற்சல் ஜோன்சன், றிஷி தவான், ஹர்பஜன் சிங் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

141 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய மும்பை இந்தியன்ஸ் அணி 18.3 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

15 ஓட்டங்களுக்கே முதலாவது விக்கெட்டை இழந்த மும்பை இந்தியன்ஸ் அணி, 2ஆவது விக்கெட்டை 47 ஓட்டங்களுக்கு இழந்திருந்தது. எனினும், தொடர்ந்து வந்த வீரர்கள் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த, மும்பை இந்தியன்ஸ் அணிக்கு வெற்றி கிடைத்தது.

துடுப்பாட்டத்தில் மும்பை இந்தியன்ஸ் அணி சார்பாக டுவைன் ஸ்மித் 47 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 63 ஓட்டங்களையும், கெரான் பொலார்ட் 20 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 31 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் ஹைவெல்ட் லயன்ஸ் அணி சார்பாக சொஹைல் தன்விர், இம்ரான் தாஹிர், டுவைன் பிறீற்றோறியஸ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர். இப்போட்டியின் நாயகனாக டுவைன் ஸ்மித் தெரிவானார்.

# சென்னை சுப்பர் கிங்ஸ் வெற்றி



பிரிஸ்பேன் ஹீட் அணிக்கு எதிரான போட்டியில் சென்னை அணி 8 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் அபார வெற்றிபெற்றுள்ளது.

சம்பியன்ஸ் லீக் கிரிக்கெட்டின் நேற்றைய போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸ் மற்றும் பிரிஸ்பேன் ஹீட் அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற சென்னை சுப்பர் கிங்ஸ் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பிரிஸ்பேன் ஹீட் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 137 ஓட்டங்களை எடுத்தது.

அதிக பட்சமாக ஹாட்லி 35, லயன் 29, கொப்ஸ் 20 ஓட்டங்களை எடுத்தனர்.

சென்னை அணி சார்பாக ஜடேஜா, சர்மா ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும், மோர்க்கல், அஸ்வின், ரெய்னா ஆகியோர் ஒரு விக்கெட்டினையும் கைப்பற்றினர்.

138 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 15.5 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களையிழந்து 140 ஓட்டங்களை எடுத்து 8 விக்கெட்டுக்களால் அபார வெற்றிபெற்றது.

சென்னை சுப்பர் கிங்ஸ அணி சார்பாக மைக்கல் ஹசி ஆட்டமிழக்காமல் 57 ஓட்டங்களையும் முரளி விஜய் 42 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் பிரிஸ்பேன் ஹீட் அணி சார்பாக கிறிஸ்டியன், கட்டிங் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை கைப்பற்றினர்.

போட்டியின் நாயகனாக மைக்கல் ஹசி தெரிவானார்.



## ஆலயத்...

தின் முன்னுள்ள நந்திக்கு பக்கத்திலிருந்து மயில் சிலையும் உடைத்தெடுக்கப்பட்டுள்ளது.

வசந்த மண்டபத்தினுள் வைக்கப்பட்டிருந்த இடபவாகனம் களவாடப்பட்டு, களஞ்சிய அறை உடைக்கப்பட்டுள்ள போதிலும் அங்கு எவ்வித பொருட்களும் களவாடப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

இத் திருட்டுச் சம்பவம் தொடர்பில் ஊர்காவற்துறை பொலிஸ் நிலையத்தில் ஆலய நிர்வாகத்தினரால் முறைப்பாடுசெய்யப்பட்டுள்ளது. (செ-9)

# மரண அறிவித்தல்

## திருநாவுக்கரசு மகேஸ்வரி

புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் இல.72, கிருஸ்ணபுரம் கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட திருநாவுக்கரசு மகேஸ்வரி 28.09.2013 சனிக்கிழமையன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை-முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வைரமுத்து-தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் மருமகளும்,

சசிகரன், திவாகரன், சுதாகரன், மயூரன் ஆகியோரின் அன்புத் தாயாரும்,

சோபிகா, நித்தியா, பாமிலா ஆகியோரின் அன்பு மாமியாரும், சாளினி, வேந்தன், பிரியங்கா, டன்சிகா, சன்ஷோ ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று பிற்பகல் ஒரு மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று தகனக் கிரியைக்காக பூதவுடல் கிருஸ்ணபுரம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

72, கிருஸ்ணபுரம், கிளிநொச்சி. தகவல்: குடும்பத்தினர்

(கி-4957)

## சர்வதேசத்தை புறந்...

மீது சர்வதேச விசாரணையை நடத்தும் உரிமை ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளருக்குக் கிடையாது எனத் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், இலங்கை அரசாங்கத்தின் இந்தச் செயற்பாடு குறித்து வினவியபோதே, ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியயல்ல மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், ஐ.நாவில் அங்கத்துவம் வகிக்கும் நாடு என்ற வகையில் சர்வதேச சட்டங்களுக்கு மதிப்பளித்து செயற்படுவோம் என சர்வதேச உடன்படிக்கைகளில் நாம் கைச்சாத்திட்டுள்ளோம்.

எனவே, அந்த சர்வதேச சட்டத்தை மீறி எம்மால் செயற்பட முடியாது. அதற்கமையத் தான் செயற்பட வேண்டும்.

அவ்வாறு செயற்படாவிட்டால் நாட்டுக்குத்தான் ஆபத்து ஏற்படும். இதனைக் கருத்திற் கொண்டு அரசாங்கம் செயற்பட வேண்டும் என்றார். (செ-11)

SUCCESS

CASL, AAT,மற்றும்;IBSL (Banking course)போன்றதொழில் சார்கற்கைநெறிகளை**நெல்லியடிலேயே**அங்கிகாரம் பெற்ற**Success**கல்லூரியில் கற்பதற்கானவாய்ப்பு

இப்போதுஉங்கள் கையில்...

CA THE INSTITUTE OF CHARTERED ACCOUNTANTS OF SRI LANKA

கணக்காளர் ஆகும் உங்கள்
இலட்சியத்தைஅடைய...
இணைவதற்கானதகைமை

- A/L இல் 3 பாடங்களில் சித்தி
- A/Lபெறுபேற்றுக்குகாத்திருக்கும் மாணவர்களும்தொடரலாம்.

aat SRI LANKA

இடைநிலைகணக்காளர் ஆவதற்கான/கலைப்பிரிவுமாணவர்களும் கணக்கீட்டுத்துறையில் நுழைவதற்கானதகைமை

- O/L 6 பாடங்களில் சித்திஅடைந்திருத்தல்

IBSL INSTITUTE OF BANKERS OF SRI LANKA

வங்கித்துறையில் உங்களுக்கான இடத்தைபெற்றுக்கொள்வதைஉறுத்ப்படுத்துவதற்கானதகைமை

- O/L 6 பாடங்களில் சித்தி (கணிதம்,தமிழ் Credit Pass)
- A/Lசித்தி*
- வங்கியில் வேளைசெய்வோர்.

SUCCESS CHALLENGE

அனைத்துமாவட்டங்களிலும் 100%* சித்திஉத்தரவாதம் அளிக்கப்படும், தவறும் பட்சத்தில் வகுப்புக் கட்டணம்மீளளிக்கப்படும்.

Contact -முருகன்கோவில் வீதி,நெல்லியடி(Commercial Bankக்குஅருகாமையில்),கரவெட்டி
021 567 567 1, 075 4337186

Contact – தலைமையகம்
026 567 567 1,
0776448858

*நிபந்தனைக்குட்பட்டது

(C-4954)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பிதழும்





கடந்த 01.09.2013 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த

## அமரர் சுப்பிரமணியம் தங்கம்மா

அவர்களின்

அந்தியேட்டி கிரியைகள் எதிர்வரும் (30.09.2013) திங்கட்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்று வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் (01.10.2013) செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரர்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம். துயரச் செய்தி அறிந்துநேரிலும் தொலைபேசியிலும் ஆறுதலளித்த அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

குடும்பத்தினர்

2 ஆம் வட்டாரம்,
முள்ளியவளை. T.P:0772020892

(சி-4047)

கணவன், பிள்ளைகள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

# இனவாதிகள் அருகில்...

துடன் செயற்படுவதற்கு சிலர் இருக்கின்றார்கள். அதன் காரணத்தினால் அவர் ஏதாவது பிரச்சினைக்கு உட்பட்டு அவரும் ஜனாதிபதியும் தமது நிலைப்பாட்டை மாற்ற வேண்டிய அவசியம் ஏற்பட்டு விடுமோ என்று தெரியாது. நாங்கள் இவற்றை அனுபவத்தில் நன்றாகப் படித்துள்ளோம்.

உதாரணமாக எஸ்.டபிள்யூ.ஆர்.டி பண்டாரநாயக்க செல்வநாயகத்துடன் ஓர் உடன்படிக்கை வைத்தபோது எமது பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கின்றது என்று நாம் எதிர்பார்த்திருந்தோம்.

ஆனால் 200 பௌத்த பிக்குகள் அவரது வீட்டிற்குச் சென்று பல எதிர்ப்பு வார்த்தைகளைக் கூறிய பின்னர் அந்த ஒப்பந்தத்தை அவர் கிழித்தெறிந்து விட்டார்.

டட்லி சேனநாயக்கவுடனும் அவ்வாறு தான் இடம்பெற்றது.

இப்படி ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தலைவர்கள் சில நல்ல காரியங்கள் செய்யும் போது அதை முறியடிப்பதற்கான நடவடிக்கைகளே இடம்பெற்றன என அவர் தெரிவித்துள்ளார். (செ-11)


**வேலையாள் தேவை**

266/B ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் உள்ள சிற்றிபான்சி கடைக்கு பெண் வேலை ஆள்தேவை. தொடர்பு :

(4056) 0778225961

**வீடு விற்பனைக்கு**

வெங்கடேசா வீதி,
யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள
புதிய வீடு 1 ½ பரப்பு
விற்பனைக்கு உண்டு.

**தொடர்புகளுக்கு:**
**0779397536**
(4043)

**NALTC**
**Australian Tamil Management Services**

- 6- 12 வயதுடைய சிறுவர்களுக்கான செயற்பாடுகளுடன் கூடிய ஆங்கில கற்கைநெறி தேர்ச்சிபெறும் மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்கப்படும்

**பதிவுகளுக்கு முந்துங்கள்**

- Spoken English For Every one

இலகுமுறை ஆங்கிலப் பேச்சு பயிற்சி (2-6 மாத காலம்).
Students - பாடசாலை மாணவர்கள்.
School Levers - பாடசாலை விட்டு விலகியோர்.
Employees - வேலை புரிவோர்.
பயிற்சி கால முடிவில் Australian சான்றிதழ் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு: இல. 499/1, பருத்தித்துறை வீதி, நல்லூர்.
116, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
தொ.பே. இல.: 0770166746, 0770569642
(சி-4952)

விரைவான தொழில் வாய்ப்பு கொழும்பை அண்மித்த பிரதான தொழிற்சாலைகளில் (ஜேம், சொக்லேட், கோடியல், பென்சில், கோழிறைச்சி, Water bottle, ஆடை, பால்மா கிளவுஸ் PVC போன்ற தொழிற்சாலைகளில் உற்பத்தி உதவியாளர் தரம்பிரித்தல், பொதியிடல், லேபல் பிரிவுக்கு ஆண் - பெண் 17-50 வயதினர் விரைவாக தேவை. உணவு, தங்குமிடம் குறைந்த கட்டணங்களில் அறவிடப்படும் சம்பளம் 18,000/- 25,000/- மற்றும் 32,000/- வருகை தரும் நாளிலே வேலைக்கு சேர்த்து கொள்ளப்படுவீர்கள்.

**தொடர்பு 0778430179, 0774430166** (சி-4938)

நிரந்தர வேலைவாய்ப்பு துறைமுகத்திலும் விமான நிலையத்திலும் (தனியார்) வேலைவாய்ப்பு உண்டு.

கப்பல் புனர்நிர்மாணித்தல் பிரிவில் சாதாரண ஊழியர்கள், வெல்டர், தச்சு, பெயின்டர், விமான நிலையத்தில் (தனியார்) சுத்திகரிப்பாளர் கேடரிங் பிரிவிலும் வெற்றிடங்கள் 18 -50 ஆண், பெண் இருபாலாரும் தேவை.

சம்பளம் 18,000/-, 35,000/-, 45,000/- (தொழில் அடிப்படையில் வழங்கப்படும்) உணவு, தங்குமிடம் சகாய விலைகளில் வருகை தரும் நாளிலே வேலை.

**தொடர்பு: 0775561883, 0775497579** (சி-4940)


# ஆஸி சென்ற...

சம்பவம் பதிவாகியுள்ளது.

எவ்வாறாயினும் விபத்தில் பலியானவர்கள் எந்த நாடுகளைச் சேர்ந்தவர்கள் என்பது உடனடியாகத் தெரியவரவில்லை என பிபிசி செய்தி வெளியிட்டுள்ளது.

புகலிடம் கோருவதற்காக அண்மைக் காலமாக பெரும் எண்ணிக்கையிலானவர்கள் இலங்கை உள்ளிட்ட பல்வேறு நாடுகளிலும் இருந்து இந்தோனேஷியா ஊடாக அவுஸ்திரேலியாவுக்கு படகுகள் மூலம் சென்றிருந்தனர்.

இவர்களில் பலர் அங்கிருந்து திருப்பி அனுப்பப்பட்டதுடன் மேலும் சிலர் வேறு இடங்களில் தடுத்து வைக்கப்பட்டனர்.

ஆபத்தான பயணங்களை மேற்கொண்டு சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவுக்குள் பிரவேசிக்க வேண்டாம் என அந்த நாடு தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (செ-11)

# கச்ச...

யாடல்கள் இடம் பெற வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை, இலங்கையில் இடம்பெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் அரச தலைவர்கள் மாநாட்டில் இந்திய பிரதமர் கலந்து கொள்வது குறித்து பாரதிய ஜனதா கட்சி கலந்துரையாடல்களை நடத்தி வருவதாகவும் பாரதிய ஜனதா கட்சியின் தேசிய தலைவர் ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார். (செ - 11)


**OPTIMO GROUP SRI LANKA**
**VACANCY**

எமது Optimo Group Companyக்கு யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் உள்ள துடிப்பும், ஆர்வமும், தன்னம்பிக்கையும் கொண்ட இளைஞர் யுவதிகள் தேவைப்படுகின்றனர்.

- மேற்பார்வையாளர் (Supervisor)
- முகாமைத்துவ பயிற்சியாளர் (Management Trainee)
- களஞ்சிய மேற்பார்வையாளர் (Store Supervisor)
- சந்தைப்படுத்துனர்கள் (Distributors)

ஆகியோர் தேவைப்படுகின்றனர்.

- வயதெல்லை 18-35
- தங்குமிடம் & உணவு இலவசம்.
- இலவசமாக சிங்கள & ஆங்கில வகுப்புக்கள் நடைபெறும்.

(4055)

தொடர்புகளுக்கு : 0775566224, 0777981471,0217200867

**வீடு விற்பனைக்கு**

அளவெட்டி மத்தியில் சகல வசதிகளுடன் புதிதாக புனரமைக்கப்பட்ட அழகிய உறுதியான வீடு, விசாலமான வளவுடனும், நன் நீர் கிணற்றுடனும் உடன் விற்பனைக்கு.

தொடர்பு : எஸ் . சிவசக்தி
**0778285930**
(4054)

**Sunjeys Tourism** தின்
*UR October Holiday Planing*

1வது வகை :

**Oct. 11 முதல் 13** வரை கண்டி, மாத்தளை (பின்னவல உட்பட) நுவரேலியாவில் உள்ள முக்கிய இடங்கள் சென்று வர, ஒருவருக்கு **ரூபா 8900/-** மட்டுமே!

2வது வகை :

வவுனியாவிற்கு அப்பாலுள்ள கோவில்களும், சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களும் **16ம் திகதி முதல் 20ம் திகதி** வரை. கட்டணம் **ரூபா. 14900/-** மட்டுமே. போகும் இடங்கள் : மடு, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, கதிர்காமம், கண்டி, மாத்தளை நுவரேலியா உட்பட.

**குறிப்பு :**

உணவு, தங்குமிடம், போக்குவரத்து (குளிரூட்டப்பட்ட) தொலைக்காட்சி, அட்ஜஸ்ரபிள் சீற் போன்ற சகல வசதிகளுடனும் சுற்றிப்பார்ப்பதற்கு ஓர் அரிய சந்தர்ப்பம்.

ஆசனப் பதிவு முன் வருபவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

ஆசனப் பதிவுகளுக்கு :

(C-4949)

SUNJEYS TOURISM
713,Hospital Road, Jaffna.
0777 474 111, 021 222 7070

வரணி ஆசனப்பதிவு நிலையம்
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

கட்டட நிர்மாணத் துறையில் தேர்ச்சி பெற்றவரா நீங்கள்? கொழும்பு, யாழ், விசுவமடு, நுவரேலியா, கம்பளை போன்ற பல்வேறு பிரதேசங்களில் மேசன், செடலின் [illegible], தச்சு பெயின்டர், எலக்றீசன் (1200/- மேல்) கையுதவியாளர் (1000/- மேல்) வாரச் சம்பளம். தினமும் கைசெலவு உண்டு.

**தங்குமிடம் இலவசம்**
**தொடர்பு: 0775561883**
(சி-4939)

**GROUP CLASS**
**ICT**
புதிய பிரிவுகள் ஆரம்பம் :
29-09-2013
சனி, ஞாயிறு : 10.00 A.M, 2.00 P.M
**IPS**
182, Ramanathan Road,
Thirunelvely, Jaffna. 0776258290
(4051)

DHL EXPRESS வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை

**விரைவு! பாதுகாப்பு!! நம்பகத்தன்மை**

- 11kg மேற்பட்ட பொதிகளுக்கு விஷேட கட்டணச் சலுகை.
- சகல நாடுகளுக்குமான மிகக் குறைந்த கட்டணத்தில் சேவையினைப் பெற்றுக்கொள்ளலாம்

மீண்டும் மிகக் குறைந்த கட்டணத்தில் மிகத் துரித சேவை

3 தொடக்கம் 5 நாட்களில் உரிய முகவரியில் ஒப்படைக்கப்படும்

**திருமுருகன் கொம் நெற்**
இல. 271A, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். - 021 222 7835
(ஆல் சிலோனிற்கு முன்பாக அமைந்துள்ளது.)
இல.18, பிரதான வீதி, நெல்லியடி. இல.46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி

30, கனகபுரம் வீதி, கிளிநொச்சி
(கனகபுரம் பஸ்தரிப்பிடத்தில் இருந்து 100 மீற்றர் இடைவெளியில்)

TCN Express
இல. 28, நெல்சன் பிளேஸ், கொழும்பு- 6

DHL EXPRESS

இல. 5, திருநகர் வீதி, கிளிநொச்சியில் இருந்து தற்பொழுது இல. 30, கனகபுரம் வீதி, கிளிநொச்சி முகவரிக்கு மாற்றப்பட்டுள்ளது
(திருமுருகன் கொம் நெற் இன் சகல சேவைகளும் புதிய முகவரிக்கு மாற்றப்பட்டுள்ளது)

வெளிநாடுகளில் இருந்து மிக விரைவாக பணத்தினைப் பெற்றுக்கொள்ள

WESTERN UNION
MMBL Money Master
46, Adiyapathum Veethy,
Thirunalvely.
(சி-4950)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.09.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.